குமரி மலர்

குமரி மலர்

"குமரி மலர்" வெளியீடு

பிற நாடுகளில் ஸ்தல ஸ்தாபனங்கள்

●

'தினமணி' ஆசிரியர்

ஏ. என். சிவராமன்

எழுதியது

வெளிவந்துவிட்டது.

●

விலை ரூபாய் இரண்டரை

(தபாற் செலவு தனி.)

எல்லாவித வாசனை
திரவியங்களுக்கும்
புகழ்பெற்ற இடம்
டி.எஸ்.ஆர் & Co
கும்பகோணம்.
murli

சைத்ரிகன் தனக்கு முதலாக வேண்டியது ஒரு பென்ஸில் என்பதை அறிவான். வர்ணங்கள், பிரஷ்கள் முதலான ஆடம்பரங்கள், அந்த பென்ஸிலுக்குப் பிறகுதான்.
அழகான படம் வரைவதற்குத் திறமைகொண்ட சைத்ரிகன் தேவை.
ஒரு நல்ல பென்ஸில்தான் சைத்ரிகனது திறமையை வெளிப்படுத்த முடியும்.
'ஸ்டார் ஆப் இந்தியா' பென்ஸில்தான் அந்த நல்ல பென்ஸில்!
Star of India
★ STAR OF INDIA ★ DRAWINGS★
MADRAS PENCIL FACTORY. Madras..
MP.S.



மதராஸில் விற்பனையாளர் :

P. நளச்சக்கரவர்த்தி செட்டியார்
30, பந்தர் தெரு, G. T.

ஜூலை—1948

உள்ளுறை

1. சத்தியம் வெல்லும்—ராய. சொ. ... 1
2. சதிபதிகள்—'மயிலன்' ... 10
3. தமிழர் அறப்போர்—"சின்னு" ... 17
4. கர்ணபாரம்—மகாகவி பாசன் ... 28
5. சிறு செங்குவளை—எஸ். ஓமதானுபிள்ளை ... 40
6. சமஸ்தான ஐக்கியப் புரட்சி—"நிருபன்" ... 53
7. மாண்டவி—கி. சந்திரசேகரன் ... 66
8. அற்புதக் கணக்கு—பெ. நா. அப்புஸ்வாமி ... 76
9. இன்பியலும், துன்பியலும்
—வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி ... 81
10. எரிசக்தியும் வெடிசக்தியும்
—ஆர். கிருஷ்ணமூர்த்தி ... 94
11. மன்னி—"சபரி" ... 103
12. இந்தியக் காடுகளும் தொழிலபிவிருத்தியும்
—டேராடூன் ஆராய்ச்சிக் கழகம் ... 109
13. சென்னை புத்தகாலய மசோதா
—த. கிருஷ்ணமூர்த்தி ... 119
14. ருஷ்யா யுத்தத்துக்கு ஆயத்தமா?
—ஹென்றி ஜெ. டெய்லர் ... 136
15. ஸ்டர்லிங் ஒப்பந்தம்—"மாணவன்" ... 144
16. இந்தியாவின் எதிர்காலம்
—டாக்டர் ஆர். ஜி. ஷகானி ... 158

"குமரி மலரில்" வெளிவரும் கதைகள், நாடகங்களிலுள்ள பெயர்கள் யாவும் கற்பனையே; யாரையும் குறிப்பிடுவன வல்ல.

சத்தியம் வெல்லும்*

ராய. சொ.

'சத்தியம் வெல்லும்' என்பதற்கு 'உண்மை வெற்றியைத் தரும்' என்பது பொருள். சத்தியம் என்பது வடசொல். சத்தியத்தைத் தமிழர் மூன்று அரிய சொற்களால் கையாண்டனர். உண்மை, வாய்மை, மெய்ம்மை என்பன அச்சொற்கள். சத்தியம் என்பது நடந்ததைச் சொல்லுதல். எதிர்மறையாகப் பார்த்தால், பொய்பேசாதிருத்தல் என்று ஆகும். சத்தியத்தைக் குறித்துத் தமிழர் கண்டு பயின்று வரும் உண்மை, வாய்மை, மெய்ம்மை என்ற இம் மூன்று மொழிகளும் பெரிதும் ஆழம் உடையன. தமிழ்மக்களுக்குச் சத்தியத்தில் எவ்வளவு உறைத்த கொள்கை இருக்கின்றன என்பதை உண்மையையும், வாய்மையையும், மெய்ம்மையையும் விட, வேறு சொற்களால் காட்டமுடியாது.

உளத்தின் தன்மை உண்மை; வாயின் தன்மை வாய்மை; மெய்யின் தன்மை மெய்ம்மை. உளத்தால் பொய் நினைத்தல் ஆகாது; வாயால் பொய் உரைத்தல் கூடாது; உடம்பாலும் பொய்யாக நடித்தல் தகாது என்பவற்றையே உண்மையும் வாய்மையும் மெய்ம்மையும் விளம்புகின்றன. பொய்யை, வாயால் பேசுவதற்கு முன் நிகழ்ச்சி, அப்பொய்யை மனத்தால் நினைத்தல். அப்பொய்யை "உள்ளத்தால் உள்ளலும் தீது" என்பது தமிழன் கருத்து. செய்கைக்குக்

* இஃது திருச்சி அகில இந்திய ஒலிபரப்பு நிலையத்தில் ஆசிரியர் நிகழ்த்திய பேச்சு; அனுமதியுடன் வெளியிடப் பெறுகிறது.

காரணம் நினைப்பே யாதலின் முதலில் நினைப்புப் பண்படவேண்டும். அதனை எடுத்துக்காட்டுவதே உண்மை என்ற சொல். வாய்மை எனும் சொல், பொய் பேசுவதைத் தடுக்கின்றது. வாயால் பொய்யைப் பேசாமல், சிலர் மெய்யால், அதாவது உடம்பால் உண்மைக்கு மாறுக்த் தலையசைத்தல், கைகாட்டுதல், மாதிரி ஏதேனும் குறிப்புக் காட்டுவர்; அதுவும் பொய்யே என்று கூறுவதே மெய்ம்மை என்னும் சொல்.

உண்மை நினைப்பதே உளம் என்றும் வாய்மை பகருவதே வாய் என்றும் மெய்ம்மை காட்டுவதே மெய் என்றும் நம்மவர் கொண்ட கொள்கை சாலச் சிறப்புடைத்து.

வாய்மை என்ற சொல்லுக்கு வள்ளுவன் செய்யும் விளக்கம் பெருமிதமானது. பொய்யில்லாததெல்லாம் வாய்மை என்று அவன் ஒப்புக் கொள்ளவில்லை. பொய் யில்லாதிருப்பதோடுகூட எவர்க்குந் தீங்கில்லாத கருணையும் கொண்டிருப்பதுதான் வாய்மை என்பது அவனுடைய, ஒப்புயர்வற்ற கொள்கை.

வாய்மை எனப்படுவ தியாதெனில் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்

என்பது குறள்.

வாய்மை அல்லது சத்தியத்தையே உயிராகக் கொண்டு ஒழுகிய மூன்று பண்டைப் பெரியாரை இங்குக் கொணரப் பேர்கின்றேன். ஒருவன் பாண்டவர் தலைவன் தருமன்; இன்னொருவன் இராமன் தந்தை, சக்கரவர்த்தி தசரதன்; வேறொருவன் வாய்மை வள்ளல் அரிச்சந்திரன். இம் மூவர் கதைகளையும் அறியாதார் இந்நாட்டில் இரார் என்று இயம்பலாம். ஆனால் தருமன் கதை கூறும் பாரதத்தையும், தசரதன் நிகழ்ச்சி சாற்றும் இராமாயணத்தையும் போல அரிச்சந்திரன் கதை

நாட்டில் அவ்வளவு விளக்கம் பெறவில்லை. காரணம் வியாசன் வான்மீகி கம்பன் வில்லி போன்ற கவி ஒரு வன் அப்புராணத்தைப் பாடாமையே. அரிச்சந்திரன் கதையின் கருத்து மிகச் சீரியது. சத்தியம் வெல்லும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு அரிச்சந்திரன் கதை. அக்கதை உண்மையாக நடந்ததா என்ற சச்சர வை இங்குக் கிளப்ப வேண்டுவதில்லை. எந்தக் கதை யைப்பற்றியும் நடந்ததா இல்லையா என்று நாம் பார்க்க வேண்டாம். நடவாததாகவே வைத்துக் கொள்வோம். கதையின் குறிக்கோள் என்ன என்பதே ஆராயத்தக் கது.

பொய் சொல்லாமை என்பது அவ்வளவு எளிதான காரியம் என்று யாரும் நினைக்கமாட்டார்கள். நாள்தோ றும் பொய்யிலே வளர்கின்ற மக்கட்கு இதனை விரித்துக் கூற வேண்டுவதில்லை. எந்த அறத்தைக் காத்தாலும் வாய்மை அறங்காத்தல் கடினமான காரியம் எனப் பலரும் கூறக் கேட்கின்றோம். அதனாலேயே,

> யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
> வாய்மையின் நல்ல பிற

என்றான் புலவன்.

வாய்மை காப்பது பெருஞ் சிறப்பாகக் கருதப்படு வதைப் பல இடங்களிலும் பார்க்கின்றோம்.

> சேர்க்கையுடன் பானுமதி தெற்குவடக் கானாலும்
> வாக்கிரண்டு சொல்லாத மானபரன்

என்று பாட்டுடைத் தலைவனைப் பாராட்டுகின்றனர் விறலிவிடு தூது ஆசிரியர்.

> மாமறைநூல் பொய்த்தாலும் வாரிதிநீர் பொய்த்தாலும்
> சோமரவி பொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான்.

என்று நாகம கூளப்ப நாயக்கன் என்ற பாடல் தலைவன் பாராட்டப் பெறுகின்றான்.

தெம்முன் ஆயினும் செவ்விமென் போகமா மகளிர்
தம்முன் ஆயினும் நாத்தவ ரூஅடல் வீமன்

எனப் பாரதம் வீமனைப் போற்றுகிறது. நாகரிகர் என்போர் பொய் பேசுதலைச் சாதாரணமாகக் கருதுவர். முரட்டுக் குணம் கொண்ட சிலர் உண்மையே பேசுவர். வீமன் அத் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவன். மிக அவசியமாகப் பொய் கூறித் தப்பித்துக் கொள்ள வேண்டிய இடங்கள் இரண்டு. ஒன்று பகைவர் முன்னிலையில்-பிறிதொன்று காதல் கிழத்தியரிடத்தில். இவ் இரு இடங்களில்கூடப் பொய் புகலமாட்டானும் வீமன். அவன் இருக்கட்டும். குறித்த பெரியோர்களிடம் வருவோம். சந்தர்ப்பம் வந்தபோது அவர்கள் செய்த காரியங்களை ஆராய்வோம்.

வாய்மையைக் கடமையாகக் கொண்டொழுகுகிறான் தருமன். பொய் கூறுவதில்லை என்று விரதங் கொண்ட அப் பெரியோன், ஒரு சமயம் மனமின்றியே ஒரு பொய் சொல்ல நிர்ப்பந்தப் படுத்தப் பட்டு விட்டான். அதற்கு அவன் உடன் பட்டது, அவன் சரித வெண்திரையில் விளங்கித் தோன்றும் ஒரு கறுப்புப்புள்ளி. 'தருமன் சொன்னது பொய் ஆகாது' என்று எதையேனும் இயம்பிச் பூசி மெழுக நினைத்தல் பயனற்ற வேலை. அசுவத்தாமா என்ற யானை இறந்து விட்டது என்று போர்க் கோலம் பூண்டு நின்ற, துரோணன் முன் தருமன் ஏன் சொல்லல் வேண்டும்?

அச்சுவத்தாமா என்னும் மத்தவாரணத்துக்கு
ஐயோ! மாருதி சிங்கம் ஆனான்.

என்று கூறித் தருமன் உள்ளத்தாற் பொய்யனானான். தருமனை இப்படிச் சொல்லச் செய்தால்தான் துரோணனை வெல்லலாம் என நினைந்து, வற்புறுத்திய

கண்ணன் வலையில் தருமன் விழுந்தே விட்டான். கண்ணனை மறுக்கும் திண்மையற்றவனாகிப் பொய்க்கு உடன்பட்டு விட்டான் தருமன்.

கற் கொண்டு கன்மழைமுன் காத்த கள்வன்
கட்டுரைத்த மொழிப்படியே கருதார் போரில்
முற்கொண்ட விரதம்மறந்து யாரும் கேட்ப
முரசுயர்த்தோன் பொய்சொன்னான்

என்று பாரதத்தில் எதிரிகள் தூற்றக் கூடிய பழிக்கு ஆட்பட்டு விட்டான் தருமன். தருமனது எல்லையற்ற பெருமைக்கெல்லாம் இழுக்காகப் பொருந்திவிட்டது இந்த ஒரு பொய்.

வெல்லுக அறமும் மெய்ம்மையும் பொறையும்

என்று சொன்ன தருமனுக்கு இது அடுக்காது. இந்த ஒரு பொய்யைத் தருமன் சொல்லாது போனாலும் பாண்டவர் வென்றே இருப்பர். ஒரு கால் இதனால் போரில் வெற்றி கிட்டாது போனால்தான் என்ன? தருமன் பொய் சொல்லியிருக்க வேண்டாம். சத்தியம் வெல்லும் என்ற குறிக்கோளை இறுகப் பற்றி நின்றானால் அதுவே அவனது வாழ்க்கையின் வெற்றி.

ஒருவனை ஒருவன் அடித்துக் கொன்று விடுவது தான் வெற்றி என்பது அல்ல. தீவினை செய்யா தொழுகுதலே வெற்றி. தீவினை புரிந்து விட்டால் அதற்குப் பரிகாரம் தேடித் திருந்திக் கொள்தலே வெற்றி. இவ்வுண்மையை இராவணனுக்கு இடித்துரைக்கின்றான் அறத் தம்பி வீடணன்.

'அண்ணா! அசைக்க முடியாத கற்புவாய்ந்த செல்வியை நீ கரந்து கவர்ந்து வந்துவிட்டாய்! இப்பொழுதாவது அது தவறு என உணர்ந்து விட்டுவிடு! அப்படிச் சீதையை விட்டுவிடுவதினும் மேம்பட்ட வெற்றி உனக்கு இல்லை'

அசைவில் கற்பின் அவ் அணங்கை விட்டகுறைதி அதன்மேல்
விசயம் இல்

சீதையை இராமனிடம் சேர்த்து விடுவது ஜெயம் மட்டும் அல்ல; அது விஜயம்; சாதாரண வெற்றியல்ல. அதுதான் மேலான வெற்றி எனச் "செப்பினன் அறிஞரில் மிக்கோன்" என உரைக்கின்றான் கவிஞரின் மிக்கோனாகிய கம்பன்.

தசரதன் வாழ்க்கை வாய்மையால் உயர்ந்தது. கண் அனைய இராமனை—உயிரனைய வள்ளலைக் காடு போக்க அவன் துணிந்தது சத்தியம் காத்தல் காரணமாகவே. வாய்மை காக்கத் தசரதன் விரும்பவில்லையேல் இராமனைக் காடுபோக்கவும் தசரதன் உயிர்போக விடவும் அவசியமில்லை. முரட்டுப் பிடிவாதம் செய்த அந்தப் பொல்லாத கைகேசியை ஒரே வாளால் இரண்டாக வீசி எறியத் தசரதனால் முடியும். சக்கரவர்த்தியாகிய அவனை இவ்வுலகில் கேட்பார் யாரும் இலர். எனினும் அவன் அப்படிச் செய்யவில்லை. வாய்மை துறந்தால் அறம் கொல்லும் என்று அஞ்சினான் அவன். செல்வனை வனத்தே விடுத்தான்; அவன் உயிர் தானே போயது. வாழ்க்கையை வெற்றிகரமாக முடித்தான். அவன் வாய்மை காவாது வேறு ஏதும் செய்திருப்பானேல் தசரதன் வாழ்க்கைக் காதை மாசுபடிந்து போயிருக்கும்

வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர்
துறந்த வள்ளல்.

என்ற புகழ் அவனுக்கு இல்லையாகி விடும்.

"ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு
அயோத்தி வந்த" அண்ணலான இராமன்,
"எந்தாய்! இகல் வேந்தர் ஏறே! இறந்தனையோ!
அந்தோ! இனிவாய்மைக்கு ஆருளரே!"

என்று புலம்பிப் பாராட்டும் பேற்றை இழந்திருப்பன் தசரதன்.

இனி அரிச்சந்திரனைப் பார்ப்போம். உண்மை என்று சொன்னவுடன் அரிச்சந்திரன் நினைவு ஒருவனுக்கு வரவில்லையானால் அவன் இந்த நாட்டின் பண்பாட்டை அறியாதவன் என்று ஏற்படும். அரிச்சந்திரனுக்கும் வாய்மைக்கும் அத்துணை நெருங்கிய உறவு. "நீ என்ன அரிச்சந்திரனோ?" என ஒருவனைக் கேட்பது மரபாகி விட்டது.

அரிச்சந்திரன் வாய்மை காக்கும் பொருட்டுப்பட்ட இன்னல்கள் வரம்பிலாதன. உண்மையை நிலை நாட்டும் பொருட்டு வளநாடு கைவிட்டான்; செல்வம் துறந்தான்; அருமைக் காதலியையும், அரசாள அமைந்த ஒரு மைந்தனையும் விற்றான்; மன்னர் மன்னனாகிய தான், புலைத்தொழில் பூண்டோனுக்கு அடிமைப்பட்டான். அரியணையிருந்த அரிச்சந்திரன் திருவடி, சுடலைப்பரண் ஏறி, நின்றது. செங்கோல் ஏந்திய அவ்வேந்தர் வேந்தன் திருக்கை, பிணஞ்சுடும் தடி தாங்கியது. அரசு வீற்றிருக்க வேண்டிய அரசிளங் குமரனை தேவதாசன், அநாதையாய் இறந்து கிடக்க, அதை அரிச்சந்திரன் கண்களால் காணும் நிலை ஏற்பட்டது. தான் மாலை சூடிய மாதரசியின் கழுத்தில் வாள் கொண்டு வீசவேண்டிய சகிக்க முடியாத பரிதாப நிலைமையும் அப்பொய்யுரையா வேந்தனுக்கு வந்தது. இவ்வளவுக்கும் மேல் ஒருவனுக்கு என்ன வரும் என்று கற்பனை செய்யவே முடியாது. அவ்வளவையும் பொறுத்துக் கொண்டான். ஒரு பொய் பேச அவன் உடன்படவில்லை. பொய் சொன்னால் இழந்த அனைத்தும் பெறலாம என்று வற்புறுத்தப் பெற்ற போது அரிச்சந்திரன் பேசிய பேச்சைக கேளுங்கள்!

புலையனும் விரும்பாத இப் புன புலால் யாக்கை
நிலை எனு மருண்டு உயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியோம்
கலை உணர்ந்த நீ எமக்கிது கழறுவது அழகோ.
இம்மை யம்மை வீடென மறை புலங்கொள இயம்பும்
மும்மையுந் தரு முறையுடைத்தெனும் நிலை முரணி
எம்மை வாழ் வயிற்றடக்கி நீடுமிழ்கலா எரிவாய்
வெம்மை கூர் நரகுஉய்க்கினும் மெய்ம்மையை விடேமால்
பதியிழந்தனம்; பாலனை இழந்தனம்; படைத்த
நிதியிழந்தனம்; இனி நமக்கு உளதென நினைக்கும்
கதியிழக்கினும், கட்டுரை இழக்கிலேம்.

நகரைப் பறி கொடுத்தோம்; அருமை மகனை இழந்தோம்; பெற்ற செல்வங்கள் அனைத்தையும் தோற்றோம்; இனி எங்கட்குக் கிடைக்கத்தக்க மோட்ச வீட்டை இழக்க நேர்ந்தாலும் சொன்ன சொல் தவற மாட்டோம் எனச் சொல்கின்றான் அரிச்சந்திரன். இவ்வாறு உண்மையில் உறுதிகொண்ட அரிச்சந்திரனுடைய துன்ப ஆரம்பத்தில்,

பின்னையாம் வெல்வோம்

என்று அமைச்சன் சத்திய கீர்த்தி சொல்லியபடி, இறுதியில் அரிச்சந்திரனின் சத்தியம் வென்றது. கஷ்டத்தின் கடைசிப்படியாகத், தன் அருமை மனைவி சந்திரமதியை வெட்டும் கடப்பாடு அமைந்து விடுகிறது அரிச்சந்திரனுக்கு. அப்போது கீழ்க்கண்டவாறு உரக்கக் கூறி வாளை ஓங்கி வெட்டுகின்றான். அவ் வாள் மாலையாக வீழ்கின்றது கழுத்தில் எனக் கூறுகின்றார் அரிச்சந்திர புராண ஆசிரியர்.

'எல்லா உயிர்க்கும் முழுமுதல் சிவபெருமான் என்பது உண்மையானால், அவன் கூறியது மறையாகுமானால், அம் மறைபகரும் அறம பலவற்றுள்ளும் இணையில்லாதது வாய்மையாகுமானால், அம் மெய்ம்மையை நான்

கடமையாகக் கொண்டிருப்பது உண்மையானல், என் நெறியை விடாது பற்றி யொழுகிய நிறை இவ்விடத் திருக்குமானல் இவள் அமரத்தன்மை பெறுக'

உலகுயிர்க்கெல்லாம் பசுபதி ஒருமுதலாயின்,
அலகில் சீருடை அவன் மொழி மறையெனில், அதன்கண்
இலகு அறம் பலவற்றிலும் வாய்மை ஈடிலதேல்,
விலகுறுமல் அவ்வாய்மையை விரதமாகக் கொளின்யான்.
நெறியின் அன்ன என்தனைவிடா நிறை இவட்குளதேல்
இறுதியின்மையைப் பெறுக, இல்லெனில் இவள் இறுதி
பெறுக, என்று வாள் வீசினன்; பேதைதன் கழுத்தில்
மறுமணத்திடு மாலையாய் வீழ்ந்தது அவ்வடிவாள்.

இவ்வாறு சொல்லி வீசினன், அரிச்சந்திரன் வாளை. அக்கூரிய வாள் சந்திரமதிக்கு மன்னன் மறுமணத்திற் குச் சூட்டும மாலையாக வீழ்ந்தது. சத்தியம் வெல்லும் என்று கொண்ட கொளகைப்படி அரிச்சந்திரனின் உண்மை வென்றது எனக் கடவுளர்களெல்லாம் பெர்ற் றிப் புகழ்ந்தார்கள்.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்

என்று தமிழ் மறை சாற்றியவாறு, மனத்திலும் பொய் நினையாத அரிச்சந்திரன் இன்றும் உலகத்தார் உள்ளங்களிலெல்லாம உறைகின்றன்.

சதிபதிகள்

'மயிலன்'

டோன்ஜு கன்ஸ்யூலாவும் டர்ன் ஆண்ட்ரீஸு ம் நல்ல ஸ்திதியில்தான் இருந்தார்கள். இருவரும் பொருத்தமான சதிபதிகள். இருந்தாலும், முழுதும் சந்தோஷமாய் இருந்தார்கள் என்று சொல்லுவதற் கில்லை. அவர்களுக்கு ஒரு 'தத்தாரி' பிறந்து அவர் கள் இன்பத்தைக் குலைத்துக் கொண்டிருந்தான்.

அந்தத் 'தத்தாரி'க்குப் பொழுது விடிந்தால், பொழுது போனால் ஊராரிடம் எல்லாம் சண்டை, சச்சரவு; எத்தனையோ கெட்ட பழக்கங்கள். இதனோடு ஊதாரித்தனம் வேறே. அவர்களும் அவனுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டார்கள். அவன் நடத்தையில் மாற்றமே இல்லை. ஒரு கெட்ட குணத்தைக் கூட அவன் விடவில்லை.

இப்படி ஒரு பிள்ளை இருந்தால், பெற்றோர்கள் சந் தோஷப்பட எப்படி முடியும்?

ஒரு நாள் இருவரும் சாமியார் பால்ட்ரைக் கண்டு மகனுடைய நிலைமையை எடுத்துக்கூறி அவனைத் திருத் தும் மார்க்கத்தைச் சொல்லும்படி கேட்டுக் கொண்டார் கள். அவரும் கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, " அவனை நீங்கள் உங்களோடு வைத்துக் கொள்ளாதீர் கள். எங்கேயாவது வெளிநாட்டுக்கு அனுப்பி விடுங்கள். உலகம் தெரியாத பையன்; வெளியே போய்க் கஷ்டப் பட்டால் பிறகு தானே திருந்தி விடுவான் " என்றார்.

இந்த யோசனைக்குப் பெற்றோர்கள் சம்மதித்தனர். இதை அந்தத் 'தத்தாரி'யிடம் சொன்ன போது, அவனும், "என்னை மணிலாவுக்கு அனுப்பி விடுங்கள்" என்றான். அதன்படி அவனை மணிலாவில் உள்ள ஒரு பாதிரி மடத்துக்கு அனுப்பினார்கள்.

மகன் போகும்போது சாமியாரிடமிருந்து சிபார்சு கடிதங்களுடன்தான் போனான்.

ஆறுமாதங்களுக்குப் பிறகு அவனது நல்ல நடத்தையைப் பற்றிய செய்திகள் சாமியாருக்கு வந்து கொண்டிருந்தன, அந்த மடத்து அதிகாரிகளிடமிருந்து. அவன் திருந்தி, சமர்த்தாய்க் காரியங்கள் செய்கிறானென்றும், நிரம்ப சுருசுருப்பாய் இருக்கிறானென்றும் கேட்ட பெற்றோர்க்கு மட்டற்ற மகிழ்ச்சி.

அவன் தன்னைப் பற்றி ஒரு கடிதம்கூட அந்தச் சாமியாருக்கு எழுதவில்லை. இல்லை, வேறு யாருக்குத் தான் அவன் எழுதினான்? எல்லாக் கடிதங்களும் மடத்து அதிகாரியிடமிருந்துதான் வந்தன.

ஒரு நாள் திடுக்கிடும் துக்கச் செய்தியைத் தாங்கிக் கொண்டு ஒரு கடிதம சாமியாருக்கு வந்தது. அந்தப் பையன் ஏதோ ஒரு கலவரத்தில் சம்பந்தப் பட்டுக் குத்திக் கொல்லப் பட்டான் என்ற செய்தியை அவன் பெற்றோர்களுக்குச் சொல்லவும் என்று கண்டிருந்தது கடிதத்தில்.

சாமியாருக்கு நிரம்ப வருத்தம். இருந்தாலும், 'உலகம் துக்கத்தால் சூழ்ந்தது' என்பதை நன்றாய் அறிந்தவர் ஆதலால், ஒருவாறு தேறி, முதலில் அந்தத் துக்கச் செய்தியை அவன் தகப்பனாருக்குச் சொல்லுவது என்று தீர்மானித்து விட்டார். தாயை விட தந்தைக்கு மகனுடைய சாவைக் கேட்டுச் சமாளிக்கும் தைரியம் இருக்கும் என்று எண்ணினார்.

உடனே டான் ஆண்ட்ரீஸுக்குச் சொல்லியனுப்பினார். அவரும் வந்து சேர்ந்தார்.

"உங்கள் பையன் ஏதோ ஒரு கலவரத்தில்..."

"கலவரத்தில்?" பொறுமை இடிந்து கத்தினார் ஆண்ட்ரீஸ்.

"காயம் பட்டு..."

"இறந்து விட்டானா?"

"ஆமாம்."

மகனின் மரணச் செய்தி கேட்ட ஆண்ட்ரீஸ் அழுது புலம்பவில்லை. ஆனால் அவர் முகத்தில் மட்டும், சிறைச் சாலையிலிருந்து தூக்குமேடைக்குப் போகும ஒரு குற்ற வாளியின் முகபாவனை தென்பட்டது.

இரு கைகளையும கட்டிக் கொண்டு, அடக்கி வைத் திருந்த மூச்சை வெளிவிடுவதுபோல் ஒரு பெருமூச்சு விட்டார்.

"சாமி, எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். இந்தச் செய்தி நம் இருவருக்கு மட்டும தெரிந்திருக் கட்டும். கன்ஸ்யூலாவுக்குத் தெரிய வேண்டாம. சில வருஷங்களுக்கு முன்பு அவள் எவ்வளவு ஆரோக்கிய மாய், புஷ்டியாய் இருந்தாள்! மகனது கெட்ட நடத்தை யைக் கேட்டுக் கேட்டு அவள் மனம்போல தேகமும் உடைந்து விட்டது. மேலும், அவளுக்கு அறுபது வயசு ஆகப் போகிறது. இத்தோடு அவளைக் கொஞ் சம் கொஞ்சமாய் அரித்து உண்ணும் வியாதி வேறே இருக்கிறது. இந்தச் செய்தியும் அவளுக்கு எட்டு மானால், பிராணனை விட்டு விடுவாள். குழந்தையின் மரணத்தை அவள் அறியாமல் இருப்பாளானால், இன் னும் கொஞ்ச நாட்கள் உயிர் வைத்துக் கொண்டிருப் பாள். அவனுடைய அந்திமக் கிரியை, விசாரணை

முதலியவற்றுக்கான எல்லாச் செலவையும் நான் ஏற்றுத்துக் கொள்ளுகிறேன். ஆனால், ஒன்றும் அவளுக்குத் தெரியக் கூடாது."

அவருடைய நிலைமை கண்டு இரங்கிய சாமியார் அவர் வார்த்தைக்குத் தலை அசைத்து விட்டார். ஆனாலும், தான் செய்வது சரியா, தப்பா என்று ஒன்றும் புரியவில்லை அவருக்கு.

இரண்டு, மூன்று வாரங்களுக்கு ஒரு தரம் அந்தத் தம்பதிகளிடம் செல்வார். மணிலாவிலிருந்து வந்ததாகச் சில கடிதங்களை வாசிப்பார். அவைகளில், பையன் படிப்பிலும், வேலையிலும் முன்னேறி இருப்பது பற்றியும், அவனுடைய நன்னடைத்தை பற்றியும் கண்டிருக்கும்.

சதா இருமிக் கொண்டு, பலஹீனத்துக்குப் பலியாகிக் கொண்டிருக்கும் கன்ஸ்யூலா எழுந்து உட்கார்ந்து ஆவலுடன், ஆனந்தத்துடன் அச்செய்திகளைக் கேட்பாள். கணவனையும் கூப்பிட்டுத் தன் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ளச் சொல்லுவாள்.

"அருமை நாதா, பரமபிதா நம்மேல் எவ்வளவு கருணை வைத்திருக்கிறார்! தெய்வம் நமக்குச் சகாயமாகத்தான் இருக்கிறது. பையன் திருந்திவிட்டான்; அவனால் இனி நமக்குக் கௌரவம் ஏற்படும். இன்னும் கொஞ்ச நாட்களில் அவன் இங்கு வந்துவிடுவான். நம் வியவகாரத்தை எல்லாம் அவன் கையிலேயே ஒப்படைத்து விடலாம். சாமி, நான் கொஞ்சம் பணம் தருகிறேன். அதை அவனுக்கு அனுப்பி வையுங்கள். அவனுக்குப் பணம் வேண்டியிருக்கும். பணம் இல்லாமல் அவன் கஷ்டப்படுவதா?" என்பாள்.

சாமியாருக்குப் பணமும் கொடுக்கப்படும். அந்தப் பணத்தை இறந்த மகனின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை நடத்த உபயோகிக்கவேண்டும் என்று ரகசியமாகத் தந்தை வேண்டிக் கொள்ளுவார்.

சாமியார் இந்த நாடகத்தை நன்ருய் நடித்தார். ஏனெனில், அவர் நன்ருய் உணர்ந்திருந்தார், கன்ஸ்யூலா எவ்வளவு பலஹீனமாய் இருக்கிருள் என்பதையும், மரணச் செய்தி அவளுக்கு அறிவிக்கப்பட்டால் அதிர்ச்சி தாங்காது அவள் ஆவி நீங்கும் என்பதையும்.

சாமியார் வரும்போதெல்லாம் வீட்டில் ஆண்ட்ரீஸும் இருந்தார். அவருக்கு, தான் இல்லாத போது சாமியார் கவனக் குறைவில் மனைவிக்குத் துக்கச் செய்தியைச் சொல்லி விடுவாரோ என்கிற பயமோ? அல்லது நோயாளி மனைவியை அருகமர்ந்து பார்த்துக் கொள்ளும் உத்தேசமோ?

பரஸ்பர அணைப்பில் குளிரைப் போக்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் பறவைகள் போல் அவர்கள் இருவரும் எப்பொழுதும் இருப்பார்கள்.

"எனக்கு என்ன, வியாதியா? ஒன்றும் இல்லை" என்று ஏங்கும் கணவனுக்கு ஆறுதல் சொல்லுவாள் அவள்.

அவரும் துக்கத்தை விலக்கி வைத்துவிட்டு அவளுடன் பரிகாசவார்த்தைகள் பேசுவார்; புகழ்ச்சியாக பேசுவார்.

இதை எல்லாம் பார்க்கும் சாமியாருக்கு அந்தத் தம்பதிகளிடம் உள்ள இரக்கம் அதிகமாகிவிடும். கற்பனைக் கடிதங்களைச் சிருஷ்டித்துச் சாமியார் வெகு நாட்கள் அந்தத் தம்பதிகளுக்குக் காட்டிவந்தார். அவைகளை வாசிக்கும் போதெல்லாம் அந்தத் தாயுள்ளம் எவ்வளவு சந்தோஷப்படும்! நன்றி அறிதலும்,

வேட்கையும் நிறைந்த பார்வையோடு அவள் சாமியாரைப் பார்ப்பாள். அந்தப் பார்வையில் 'எங்கள் பையன் ஒரு சமயம் கெட்டுவிடுதாய் இருந்தாலும், எனது கணவனுக்குமட்டும் அவன் நல்லவனுய், சமர்த்தாய் இருக்கிறுன் என்று தெரிவியுங்கள்' என்ற வேண்டுகோள் பேசாத பேச்சாய் நிற்கும்.

ஒரு நாள் நேரங்கழித்துச் சாமியார் அவர்கள் வீடு சென்ருர். அவள் சாகுந்தருவாயில் இருந்தாள். பாப நிவேதனம் (confession) சாமியாரிடம் செய்யவேண்டும் என்று எண்ணிவிட்டாள்.

"பையன் திரும்பி வருகிருன் என்று சொன்னுல் ஒரு சமயம் இப்பொழுது பிழைத்து இன்னும் கொஞ்ச நாட்கள் இருக்கலாம் அவள்" என்று சாமியாருக்கு ரகசியமாகச் சொன்னுன் கணவன்.

சாமியாரும் சம்மதத்தின் அறிகுறியாய்த் தலையை ஆட்டினுர்.

சாமியார் அவளுடைய அறைக்குள் நுழைந்தார். உடனே அவள் தன் கணவனைப் பார்த்தாள். அவரும் கெஞ்சுதலும் எச்சரிக்கையும் கலந்த ஒரு சமிக்ஞையைச் சாமியாருக்குக் காட்டிவிட்டு அகன்ருர்.

அவள் உதடுகள் பிரார்த்தனை செய்வதுபோல் அசைந்து கொண்டிருந்தன.

அவளது தலைமாட்டில் சாமியார் அமர்ந்தார். உடல் விட்டுப்பிரியும் ஆன்மா சாந்திபெற வழக்கமாகச் சொல்லும் வார்த்தைகளை அவர் சொன்னுர்.

உடனே அவள் அவரை நோக்கி முகத்தைத் திருப்பி, நன்றி அறிதலுடன் முத்தமிட அவர் கையைப் பிடித்தது அவருக்கு ஆச்சரியம் மூட்டியது.

"சாமி இதுவரையிலும் உண்மையைச் சொல்லாமல் என் கணவனை ஏமாற்றி இருக்கிறீர்கள். இந்த நல்ல காரியத்துக்காகக் கடவுள் உங்களுக்கு நன்மை புரிவாராக! நான் இறந்த பிற்பாடும் அவருக்கு உண்மையைச் சொல்ல மாட்டீர்கள் என்ற வாக்குறுதியை நான் வேண்டுகிறேன்"

அவள் ஜன்னி கண்டு ஒரு சமயம் ஊளறுகிருளோ என்று எண்ணிஞர் அவர்.

"என்ன சொல்லுகிருய்? ஏமாற்றினேஞ?"

"நீங்கள் இல்லாவிட்டால் குழந்தையைப்பற்றி அறிந்து துக்கத்தில் ஆழ்ந்துபோய் இருப்பார் அவர். இனிமேலும் அவருக்குச் சொல்லவேண்டாம்"

"பையனைப்பற்றியா....? அவன் தான் சௌக்கியமாய் இருக்கிருனே. அவன் திரும்பிவந்து கொண்டிருக்கிருன்; இன்னும் கொஞ்ச நேரத்தில் நீ அவனை காண்பாய், பாரேன்."

"ஆமாம், பார்ப்பேன்.... மறுஉலகத்தில். எனக்கு எல்லாம தெரியும். என்மனதே சொல்லிவிட்டது. என் மகனைப் பற்றித் தகவல் அனுப்ப அங்கு எனக்கு ஒருவரும் இல்லையா என்ன? எல்லா கடிதங்களும் என்னுடைய சிநேகிதியின் பெயருக்கு வந்தன. கெட்ட செய்தி ஏதாவது இருந்தால் அவருக்கு எதற்குத் தெரியவேண்டும்? நான்கூட அந்த மடத்து அதிபதிக்கு எனது கணவருக்குச் சொல்ல நல்ல செய்தியை மட்டும் உங்களுக்கு எழுதி அனுப்பக் கேட்டிருந்தேன் ..... அவரை ஏமாற்ற நானும் உங்களுக்கு உடந்தையாய் இருந்தேன் .....பாவம்! அவரது உடல் நிலை சரி இல்லை; ரொம்ப மோசமாய் இருக்கிறது. துக்ககரமான செய்தியைக் கேட்டால் பேராபத்தாய் முடிந்துவிடும். அப்பா! இந்த ரகசியத்தை அவருக்கு தெரியாமல் இதயத்தில் அடக்கி வைத்துக்கொள்ள நான் பட்ட பாடு! கல்யாணம் ஆனதிலிருந்து அவரிடமிருந்து எதையும் ஒளித்து வைக்கும் வழக்கமே எனக்குக் கிடையாது.,,

(ஒரு ஸ்பானிஷ் கதையின் சுருக்கம் இது.)

தமிழர் அறப்போர்

"சின்மூ"

ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்(று)இவ் வுலகத் தியற்கை

என்று இயற்கையின் சட்டத்தை இடைக்குன்றூர் கிழார் என்னும் சங்ககாலப் புலவர் இரண்டடிகளில் எடுத்துக் காட்டுகின்றார். இப் பொன்மொழிகளின் உண்மையை நாம் நமது தினசரி வாழ்க்கையில் கண்ட வண்ணமே யுள்ளோம். உலகம் தோன்றின நாள் முதலாக அதன் உடன்பிறப்பாக இருந்து வருவது போராகும். காலஞ் செல்லச் செல்ல, மக்கள் நாகரிகத் துறையில் படிப்படியாக முன்னேறி வருவது உலகம் கண்ட உண்மை—சரித்திரம் பறைசாற்றும் சட்டம். இவ்வளர்ச்சியில் ஒரு படியிலிருந்து மற்றொரு படிக்குச் சமுதாயம் தாவிச் செல்லும்போதுதான் புரட்சியும், போராட்டமும் ஏற்படுகின்றன. மாறுதலோடு கூடிய, புதுமை நாகரிகம் உறையும், வளர்ச்சியடைந்த உலகில் தானே முதன்மையான—தலையாய—சிறப்புடைய இடத்தை அடைய வேண்டும் என ஒவ்வொரு நாடும் போட்டியிடுவதுதான் பூசலும் போராட்டமும் நிகழ அடிப்படையான ஏதுவாகின்றது. இத்தகைய போட்டி இன்று மட்டும் நிகழ்வதன்று. அது அன்றும் இன்றும் என்றும் உளது. இதே உண்மையைத்தான் சங்க காலத்துச் சீர்மிகு புலவர் சிறப்புற எடுத்துக் காட்டுகின்றார். உலகம் முழுவதையும் கட்டுப்படுத்தும் இச் சட்டம் தமிழ் நாட்டிற்கு மட்டும் விதிவிலக்கானதன்று.

தமிழ் நாட்டிலும், தமிழரசர்கள்—மும்முடி மூவரசர்கள், முறைவழுவா மன்னர்கள்-மூதறிவுடையோர்கள் தழைத் தோங்கியிருந்து செங்கோலோச்சிய காலத்துப் பல போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. போர் செய்து, வெற்றி யெய்தி, பகைவன் ஊரைக் கொண்ட காரணம் பற்றிப் பல தமிழரசர்கள் பட்டப் பெயருடன் பாராட்டப் பெற்ற னர் என்பது, "தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்," "ஒல்லையூர் தந்த பூதப்பாண்டி யன்" முதலான தொடர்களினால் விளங்கும். ஆனால் தமிழ் நாட்டில் பண்டு நடைபெற்ற போருக்கும், ஏனைய போர்களுக்கும் வேறுபாடு உண்டு. போர் என்றவுடன் "வெறுப்பின் வெளிப்பாடும், விலங்கின வலிமையின் வீண விளையாட்டும்" என்றும் பொருள் மனத்தில் தோன்றுதபடி, ஒரு பண்படைந்த முறையில், கட்டுப் பாட்டினை மறவாத வழியில் நடத்தப்பெற்ற "அறத் தோடு பொருந்திய மறவினை" யாகவே தமிழர் அறப் போர் திகழ்ந்தது. இதற்குச் சான்றாகப் புறநானூறு முதலான சங்க இலக்கியங்களும், ஏனைய தமிழிலக்கி யங்களும் திகழ்கின்றன.

> அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
> மான முடைய தரசு

என்னும் குறளில் திருவள்ளுவ நாயனார் திறம்படத் தமிழர் இயல்பைச் சித்தரித்துள்ளார். தமிழரசர்கள் அன்பினும் குழவியான அருளுடன் கூடிய அறவழியில் நிற்கும் ஆற்றலுடையவர்கள். அன்னோர்க்கு அறன் வித்து; மறம் விளைவு. மறமாகிய வீரம் தழைக்க, அறத் தையே விதையாக விதைப்பவர்கள். எனவே, எக்கா லும் அறநெறி பிறழாதவர்கள்; தங்கள் வாழ்க்கையின் குறிக்கோளை வாழச் செய்பவர்கள்; செங்கோலின் சிறப் பைச் செம்மையுடன் காப்பவர்கள். இப் பண்புகளெல் லாம் அவர்கள் அரசு நடாத்தும் காலம் மட்டுமன்றி,

அரசாட்சியிலேயே குழப்பம் நிறைந்த காலமாகக் கருதப்படும் போர்க் காலத்திலும் அவர்கள் மாட்டு உறைந்து கிடந்தன. மறத்திற்கு முதன்மை கொடுக்க வேண்டிய போர்க் காலத்திலும், அறத்தினைக் காத்த பின்னர்தான் மறம் வெளிப்படுகின்றது. அவர்கள் மாட்டு முதலில் தோன்றுவது அறத்தின் பெருக்கம்; பிறகு தொடர்வது ஆர்வத்தின் ஆக்கம். சமீபத்தில் நடைபெற்ற யுத்தத்தின் கொடுமைகளைப் பார்க்கும் மக்களுக்கு அக் காலத்துத் திகழ்ந்த அறத்தொடு கூடிய மறப்போர் வியப்பும் விருப்பும் ஒருங்கே ஊட்டுவதாகும். போர் என்பதைப் போருக்கு முந்தின நிலை, போர் நிகழ்ச்சி, போருக்குப் பிந்திய நிலை என மூன்று பெரும்பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு ஆராய்ந்தால் இம் மூன்று நிலையிலும் தமிழரசர் தமது அறத்தையும், அருளையும், ஆணையையும் எங்ஙனம் காத்தனர் என்பது தெரியவரும்.

போருக்கு முதலாக நடக்கும் மந்திரம், தூது இவைகள் சரிவர நடந்து, ஓர் அரசன் மற்றொருவன் மீது படையெடுக்கத் தயாராயுள்ளான். அப்போது தற்காலத்தைப் போல் 'ஒருவித எச்சரிப்பும் இன்றி, படையெடுத்து வந்து குண்டுகளைப் பொழிந்து, போரில் ஈடுபடக் கூடியவர்கள், கூடாதவர்கள் ஆகிய யாவருக்கும் ஒருங்கே தீங்கிழைத்தல் தமிழர் வழக்கம் அன்று. அவர்கள் பகைவரது நாட்டில் உள்ளவர்களில், போருடன் தொடர்பில்லாதவரை, அரணில் பதுங்கிப் பாதுகாத்துக் கொள்ளும்படி எச்சரிப்பர். இதற்குச் சான்றாக,

ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்

என வரும் புறப்பாட்டு அடிகள் விளங்குகின்றன. பசுக்களும், பசுக்களின் இயல்பினையொத்த அந்தணரும், பேதை மகளிரும், பிணியுடையோரும், புதல்வரைப் பயவாதோரும் பகைவர் அம்பினின்று மீள அரணை அடையும்படி எச்சரிப்பதே மேற் போந்த அடிகளின் பொருள். இவ்வடிகள் தமிழரது அறத்தினையும், ஆணையையும் ஒருங்கே புலப்படுத்துகின்றன. பகைவரது நாட்டில் போரில் கலந்து கொள்ளாதவரை அரணில் சேரும்படி எச்சரிப்பது தமிழர் அறன். அது இப்பாட்டில் மிளிர்கின்றது. மேலும், தமிழர் அன்பிற்குக் கட்டுப்பட்டவர்கள். அன்பெனும் பண்பே அவர்களது ஆணை. எச்சரிக்கை என்பதைச் செய்யுங்காலத்தும, "நும்மரண் சேர்மின்" என இசையினிமையோடு கூடியசொல்லைப் பாடலின்கண் புலவன் புகுத்தியுள்ளமை, தமிழரது அன்பார்ம மென்மைப் பண்பினைக் குறிப்பாக உணர்த்துகின்றது. இவ்வாறுக்ப் போர் தொடங்கும் முன்னரே தமிழர் தமது அறத்தினைக் கையாள்கின்றனர். தாங்கள் பதுங்கும்படி எச்சரித்ததை அறியமாட்டாத ஆவினங்களைத் தம் நாட்டிலேனும் கொணர்ந்து காக்கவேண்டும் என்னும் கருத்துப் பற்றி "நிரை கவர்தல்" என்னும் வழக்கமும் தமிழ் நாட்டில் இருந்தமையைப் பண்டைத் தமிழிலக்கியங்களால் அறிகிறோம். பசுக்களைக் கவரும் இவ்வழக்கம் தமிழரது அறவியல்பை மட்டுமன்றி, அரசியல் அறிவினையும் ஒருங்கே காட்டுகின்றது. சாதாரணமாக மாற்றுரை வெல்ல வேண்டுமாயின், போரின்றி அவரைச் சரணாகதியடையச் செய்யின், உயிர்ச்சேதம் ஏற்படுவது குறையும். இச்சரணாகதி நிகழ்வதற்குப் பகைவரது நாட்டில் எந்த வழியிலேனும் நெருக்கடியை உண்டாக்குவது அரசியல் முறையாகும். பண்டைத் தமிழர் வாழ்ந்த காலத்தில், அவர்களுக்கு ஆவினங்களே செல்வம். ஒரு நாட்டின் செல்வப்

பெருக்கம் அந்நாட்டின் நிரைப் பெருக்கத்தையே பொறுத்ததாக இருந்தது. எனவே ஒரு நாட்டின் நிரைகளைக்கவர்ந்தால் உடனே அந்நாட்டில் பொருளாதார நெருக்கடியை உண்டாக்க முடியும். இந் நெருக்கடியை உணர்ந்த நிலையில்தான் தமிழர் "நிரை கவர்தலை" ஏற்படுத்தினர். போர் தொடங்கும் முன்னரே இவ்வாறாகத் தமிழரது அறிவும், அன்பும், அறமும் ஒளிவிடக் காண்கின்றோம்.

"அறிவிப்பினை" அறிவித்ததன் பின்னரும் பகையரசர் உடன்படாவிடில் மன்னர் வஞ்சினங் கூறி யெழுவர். அங்ஙனம் வஞ்சினங் கூறுவது வீர உணர்ச்சியின் வெளிப்பாடாகும். ஆயின் அதன் உறையுள் அறமாக இருப்பது தான் உன்னுதற் பாற்று.

கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையாளும் வேந்தர்க் கொளி

என்றார் வள்ளுவனார். அரசர்களது அரும் பெரும் அறன்கள் நான்கனுள் இரண்டாக்ச் செங்கோலோச்சலும், குடியோம்பலும் இக்குறளின்கண் கூறப்படுகின்றன. இவ்வறப் பண்பு, மறத்தின் பயனாக விளையும் வஞ்சினங் கூறலிலும் பிரதி பலிக்கின்றது.

மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
....
அவர்ப் புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக
அறனிலை திரியா வன்பி னவையத்துத்
திறனி லொருவனை நாட்டி முறை திரிந்து
செங்கோல் செய்தே னாகுக

என்று பூதப்பாண்டியன் சூளுரை செய்யுங் காலத்துப் பகரும மொழிகள்—"போரில் தோற்றால், செங்கோல் கோடியவனாகக் கடவேன்" என்னும் பொருள் பொதிந்த

மொழிகள், — செங்கோலாட்சியைக் காப்பதில் தமிழருக்கு இருந்த கண்காணிப்பு, உணர்ச்சி மயமான வஞ்சினங் கூறும் நிலையிலும் ஒரு சிறிதும் மாறுபடவில்லை என்பதைத் தெள்ளிதின் உணர்த்துகின்றன.

... ...
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
....

என்று, பல புலவர்களால் பாராட்டப்பட்ட தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கூறும் மொழிகள், குடிகளது மனத்திருப்தியையே குறிக்கோளாகக் கொண்ட தமிழ் வேந்தர் வாழ்க்கை, ஒளிப்பிழம்பாகத் திகழ்ந்து, லக்ஷியத்தின் உன்னத நிலையினை அடைவது வஞ்சினங்கூறும் போதுதான் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

பொதுவாகத் தமிழரசர்கள் போர் புரியுங் காலும், பகைவனை வெல்ல எண்ணுங் காலும், அவன் மீது வஞ்சினங் கூறுங் காலும், தங்களது செங்கோலோச்சிக் குடிகளைக் காக்கும் கடனை-அறனை-ஆணையை மறந்தவர் அல்லர் என்பது முன்னர்க் கூறிய புறநானூற்று அடிகளால் உணரப்படுவதாம். இதுகாறும் ஆராய்ந்தவற்றான் தமிழர் எச்சரித்தல், நிரை கவர்தல், வஞ்சினங் கூறல் முதலான போர் நிகழ்ச்சிக்கு முற்பட்டு நடைபெறும் செய்கைகளில், அவர்களது மறம் மாண்புற விளங்கினும், அறத்தினின்று அகன்றவரல்லர் என்பது தெரிய வருகின்றது.

இனி, அடுத்தபடியாகப் போர் நிகழ்ச்சியைக் காண லாம். போர் நிகழுங்கால் மறத்தினையே உன்னுபவர் தமிழர். எங்ஙனமேனும் பகைவரை வெல்ல வேண்டும் என்பதே அவர்கள் கருத்து. ஒன்று வெற்றி: இன்றேல் மரணம். இதுவே இலட்சியம்.

> "கையில் வாளிதொலைந்தபின் காய்ந்துதம்
> மெய்யில் வாளிகள் வாங்கிவில் வாங்கினான் "

என்னும் வரிகளைக் காணுறுங்கால், தமிழரது வீர உணர்ச்சி புலனாகின்றது. இவ்வுணர்ச்சி பெண்கள் மாட்டும் தழைத்திருந்தது. இதற்குப் பல சான்றுகள் உள்ளன. மூன்றும் நாள் தமையனையும், முதல் நாள் கொழுநனையும் செருக்களத்தில் பலிகொடுத்த பாவை யொருத்தி, இன்று தனது ஒரே மகனைப் போர்க்களத் திற்கு அனுப்பும் காட்சி யொன்று புற நானூற்றின் கண் சொல்லேர்வியமாக நிகழ்கின்றது.

> ....
> இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
> வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
> பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
> ஒரு மக னல்ல தில்லோள்
> செருமுக நோக்கிச் செல்கெனவிடுமே

எனவரும் புறப்பாட்டு அடிகளின் கண்மலிந்துள்ள வீரம் கூறத்தரமன்று. ஒவ்வொரு சொல்லையும் மறத் தின் வெளிப்பாடாகத் திகழும்படி புலவர் பெருமான் அமைத்துள்ளார். செருப்பறை கேட்ட மங்கை, "மகன் ஒருவன் அன்றோ நம் குடியின் சார்பாகப் போர்க் கூடியவனுயுள்ளான், அவனையும் போரில் இழப்பதா? ஆயினும், என் கடமையை யான் செய்ய அவனைப் போருக்கு அனுப்புகிறேன்" என்று எண்ணி, தாயுள்ள

மயக்கம் முதலில் தோன்ற, பின்னர் அறிவின் துணையி னுல் கடமையை நிறைவேற்ற மைந்தனைப் போருக்கு அனுப்புவதாகப் புலவர் கூறவில்லை. பறை யொலியைக் கேட்டதுமே போருக்கு அனுப்ப விரும்பி விழைகின் ருள், பின்னரே தாயுள்ள மயக்கம் தாண்டவம் புரிகின் றது. இத்தகைய மறக்குடிப் பெண்ணின் இலட்சணத் தினை "விருப்புற்று மயங்கி" என்னும் சொற்களை முறைப்பட அமைப்பதன் மூலம் புலவர் எவ்வளவு அழகாகக் காட்டுகின்ருர்! மகனைக் கண்டதும், அவனது ஆடைகளைப் பற்றிய எண்ணமும் அவளுக்கு முதலில் உண்டாகவில்லை. ஆயுதத்தின் எண்ணமே எழுகின்றது. "வேல் கைக் கொடுத்துப்" பின், "வெளிது விரித்துடீஇப். பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவு" கின்ருள். இவ்வளவு வீரம் மறக்குடிப் பெண்ணுக்கிருப் பின், போர்புரியும் வீரர்களைப்பற்றிக் கேட்கவேண்டுமா?

இத்தகைய மறம் மாட்சிமை பெற்றிருப்பினும், இரக்கம் போர் நிகழுங்கால் அவர்களிடையே தோன்று கின்றது. அறம் அகத்தை விட்டு அகலவில்லை. புறங் காட்டி ஓடுபவர், கண்ணிமைப்பவர், ஆயுதமில்லா திருப்பவர் இவர்களுடன் போர் புரிவது தமிழர் அறத் திற்கு ஆக்கங் குறைப்பதாகும். இக்காலத்தில் புறங் காட்டி ஓடுதல் என்பது "வெற்றிகரமான பின் வாங்கு தல்" என்று வழங்கப்பட்டாலும், கண்ணிமைக்கும் சமயத்தில் கண்ணைப் பறிப்பது கண்ணியமாகக் கருதப் பட்டாலும், ஆயுதமில்லாதிருக்கையில் கைது செய்வது அரசியல் முறையாய் இருப்பினும் அவை தமிழர் வழக்கம் அல்ல.

ஏந்தறன் கண்கள் வெய்ய விமைத்திட வெறித லோம்பி
நாந்தக வுழவு ஞணீ நக்குநீ யஞ்சல் கண்டாய்
காய்ந்திடேன்

என்னும் சீவக சிந்தாமணி யடிகள் தமிழர் பண்பைத் தெளிவு படுத்துகின்றது. கம்ப நாடர் இவ்விரக்கத் தன்மை தமிழர்களது பிறப்புரிமை என்பதைத் தமது இராமாயணத்தில் நாட்டியுள்ளார். யுத்தத்தில் படை வீரர் சிதறிப்போக இராவணன் ஆயுதமுமின்றி நிற்கின்றான். அப்போது இராமர் வெகு சுலபமாக வென்றிருக்கலாம். ஆனால் கம்ப நாடர் நிலை நாட்டும் வெற்றி இத்தகையதன்று. கோசல நாடன் "இன்று போய் நாளை வா" என்று கூறியதாகக் கம்பர் காட்டும் காட்சி உன்னுதற் பாற்று. வேறு எம்மொழி இலக்கியத்திலும் இத்தகைய உண்மையைக் காண்டல் அரிது. இராமன் ஏன் அவ்வாறு கூறவேண்டும்? மறுதினத்திற்குள் மனம்மாறி, சீதையை இராவணன் சிறைவிடுத்தால் போர் முடிந்து, சமாதானம் ஏற்படலாம், இராவணன் உயிரும் நீங்காது. இத்தகைய அருள்வழி வந்த அறத்தன்மையின் பயனுக்குத்தான் நாளை வரும்படி இராமன் கூறுகின்றான். இவ்வாறான நிகழ்ச்சிகளின் மூலம் போர் நிகழுங் காலத்தும் தமிழர் அறவழி வந்த மறப்போரினையே நிகழ்த்தினர் என்பது போதரும். போர் தொடங்குமுன்னர்—வெற்றி, தோல்வி இன்னாருக்கு என நிர்ணயிக்க முடியாத நிலையில் இருதிறத்து அரசரும் இருக்குங் காலத்து—இரக்கம் இருப்பின் அது வியக்கற் பாலதன்று. அந்நிலையில் தோன்றும் இரக்கத்தினைத் தன் மாட்டு அவநம்பிக்கை தோன்றியதன் பரிணாமம் என்று கூறுதலும் கூடும். ஆயின், போர் நடந்துகொண்டே யிருக்கும்போது, எதிரி சளைக்கும் போது, மகிழ்ச்சியும் பெருமிதமும் வாராது, வீழ்ச்சியடையும் எதிரியை வேரோடு கெடுக்கும் சூழ்ச்சி மனப்பான்மை தலையெடுக்காது, அருளும் அன்பும் சுரந்து பெருக்கெடுத்து ஓடுமாயின், அந்த மனப்பண்பினை

என்னென்றுரைப்பது! கற்பனையுலகில் அஹிம்ஸைக் கோயிலெழுப்பி, காந்தியடிகளின் சிலையைக் கர்ப்ப கிரஹத்துள் வைத்து மனத்தினால் ஆராதிக்கலாம். ஆயின் செயலாற்றத் தொடங்குகையில், 'இலக்ஷியம்' என்பதைக் கடைபிடித்தல் யாவராலும் இயலாத காரியம். ஆயின் குறிக்கோள் வாழ்க்கையைக் கடைப் பிடித்து ஒழுகியவரைப் பண்டைத் தமிழுலகம் கண்டது; பண்டைத் தமிழ்ப்புலவர்கள் பிற்கால உலகமும் பெரு மிதம் பொருந்தியவரைக் காணும்படி பல சொல்லோ வியங்களைத் தீட்டியுள்ளனர்.

போர் முடிந்து, வாகைமாலை சூடிய பின்னரும் தமிழர் மனப்பண்பு அறவழியிலேயே நிலைத்து நிற் கின்றது. வெற்றியடைந்தோம் என்று ஒரு சிறிதும் கர்வம் கொள்ளார் தமிழர். தோல்வியுற்றாரைக் கண்டு நகைக்கவும் மாட்டார். அவர்களுடைய முடிவான— நிரந்தரமான குறிக்கோள் யாது?

யாதும் ஊரே; யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா.
....
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியாரை வியத்தலு மிலமே
சிறியாரை இகழ்தல் அதனினும் இலமே

என்பதேயாகும். பெருமை கண்டவிடத்தும், சிறுமை கண்டவிடத்தும் சமமாகப் பாவித்து, இடை நிலையில் நிற் கும் பண்படைந்த உள்ளம் தமிழர் உள்ளம். நாட்டைக் காப்பதற்காகப் போர் புரிந்தனர். அது அவர்களது

கடன், அக்கடமையைச் செய்தனர். அதனால் அவர்களது அறநெறி மாறுபடவில்லை.

.... வயின் வயின்
உடன்று மேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே; யவரை
அழுந்தப் பற்றி யகல் விசும் பார்ப் பெழக்
கவிழ்ந்து நிலஞ்சேர விட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினு மிலனே

என்று வாகை சூடிய நெடுஞ் செழியனை ஒரு புலவர் பெருமான் போற்றுகின்றார். இப் பாடலின் மூலம் போர் முடிந்த பின்னர் பகையரசரை இகழ்தலின் மூலம் தமிழரசர் அறநெறி வழுவினாரல்லர் என்பது போதரும். மேலும் போரினால் வரும் பொருளை அரசர் மக்களுக்கு முறைப்படி பகிர்ந்து வழங்கினர் என்பது புறப்பொருள் இலக்கணங்களால் அறியப்படுவதாம். இதுவும் அறிவோடு கூடிய அறநெறியின் பாற்பட்டதே.

இவ்வாறுக் தமிழரசர்கள் அறத்தொடு கூடிய போர்களையே நிகழ்த்தியிருக்கின்றனர். ஒரோவழி அவர்கள் அறநெறியில் வழுவிய காலத்தும், அவர் காலத்து உறைந்த அறிவு மிக்க புலவர்கள் அவர்களைத் திருத்தி நல்வழிப் படுத்தினர் என்பதற்குச் இலக்கியச் சான்று மலிந்துள்ளது. எனவே "அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்" என்று அவர்களைப் பாராட்டியது பொருத்த முடையதேயாம்.

கர்ணபாரம்

மகாகவிபாசன்

[மகா கவிபாசன் இயற்றிய இச்சிறு நாடகத்தை அறிஞர் வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரியார் தமிழாக்கி உதவியுள்ளார்.]

(நாந்தியின் முடிவில் சூத்திரதாரன் வருகிறான்)

சபையோருக்கு ஒரு வேண்டுகோள்.........

அடே, இதென்ன? ஏதோ சத்தம் கேட்கிறதே! இருக்கட்டும் பார்க்கிறேன்.

(திரைக்குள்)

தெரிவியுங்கள்; மகாராஜன் அங்கதேசத்தரசனிடம் தெரிவியுங்கள்.

சூத்திரதாரன்: ஆம், தெரிந்து கொண்டேன். போர் மூண்டுவிட்டது. ஆகவே, துரியோதனன் கட்டளையை மேற்கொண்டு பதட்டமுற்ற படையாள் கைகூப்பிக் கர்ணனிடம் தெரிவித்துக் கொள்கிறான். (போகிறான்)

(படையாள் வருகிறான்)

படையாள் : தெரிவியுங்கள்; மகாராஜன் அங்கதேசத்தரசனிடம்தெரிவியுங்கள். யுத்த காலம் வந்துவிட்டது பார்த்தர்களில் சிறந்த தர்மனுக்கு முன்னே யானையிலும் குதிரையிலும் தேரிலும் ஏறிக்கொண்டு உற்சாக முற்ற அரச சிங்கங்கள் சிம்மநாதம் செய்கின்றனர். உலக வீரனாகிய துரியோதனனும்

பகைவரின் கொடிய சத்தத்தைக் கேட்டு விஷய மறிந்தவனுய்த் தாமதமின்றி போர்க்களத்திற்குப் புறப்பட்டு விட்டான்.

(சிறிது தூரம் நடந்து உற்றுப்பார்த்து)

இதோ, அங்கராஜனும் போர்க்கருவிகளுடன் படை சூழ சல்யராஜனோடு அரண்மனையிலிருந்து கிளம்பி இங்கே வருகிருர்...

இதென்ன? அங்கராஜனுக்கு யுத்த மென்ருல் கொண்டாட்டமாயிற்றே! பன்முறை வெற்றிசூடி அவர் தன் பராக்ரமத்தை நிலைநாட்டியிருக்கிருர். இதுவரையில் கண்டிராத மனுவருத்தம் எதற்கு இப்பொழுது அவருக்கு? பகைவரைப் பதைக்கச் செய்யும் பராக்ரம சாலி; போர்க்களத்தில் முன்னணியில் நிற்பவர். அவரும் ஏன் இப்பொழுது வருத்தத்தோடு போர் முனைக்குச் செல்ல வேண்டும்? இயற்கை ஒளிகொண்ட கதிரவன் கோடை வந்தபொழுது முகில் திரளில் மறைந்திருப்பது தகுதியா...? அவரை அணுகுகிறேன். (போகிருன்)

(கர்ணனும் சல்யனும் வருகிருர்கள்)

கர்ணன்: அப்படி சொல்லாதேயும். எனது அம்புகளுக்கெதிர் பட்டவர் உயிர் தப்பியதுண்டா? கௌரவருக்குப் போர் முனையில் நான் பேருதவி செய்ய வேண்டும். அந்தத் தனஞ்ஜயன் மட்டும் தெய்வவசத்தால் என் எதிரில் வரவேண்டும்.

சல்யராஜனே, அர்ஜுனனிருக்குமிடத்திற்கே என் தேரை ஓட்டிச் செல்லும்.

சல்யன்: அப்படியே, (தேரை ஓட்டி வருகிருன்)

கர்ணன்: (தனக்குள்) ஒன்றுக்கொன்று ஆயுதங்களை வீசிக்கொண்டு அங்கமிழந்த படர்கள், குதிரைகள்,

யானைகள், தேர்கள் இவற்றையுடைய பெரிய போர்க் களங்களில்கூட கோபித்த யமன் போல் பராக்ரமம் காட்டுபவன் நான். அத்தகைய என்னுடைய மனது இப்பொழுது யுத்த சமயத்தில் ஏன் அச்சமுற வேண்டும்?

கஷ்டம். நான் குந்தியின் வயற்றில் பிறந்து ராதை யின் மகன் எனப்பெயர் பெற்றேன். யுதிஷ்டிரர் முதலிய பாண்டவரும் எனது தம்பிகளாம்.

வெகுநாள் எதிர் பார்த்துக் கிடைத்தது, இந்தச் சந் தர்ப்பம். எனது பெருமைகளை மேன்மைப் படுத்தும் நாளும் இதுவே. ஆகிலும் என்ன? நான் கற்ற அஸ்தி ரங்கள் அனைத்தும் அவலம்தான். என் தாய் மீண்டும் என்னைத் தடுத்து விட்டாள் அல்லவா?

(வெளிப்படையாக) மத்திரதேசத்து மன்னவனே, எனது அஸ்திரத்தின் வரலாற்றைச் சொல்லுகிறேன்; கேளும்.

சல்யன்: எனக்கும் கேட்க வேண்டும் என்ற ஆவா தான்.

கர்ணன்: நான் முதன் முதலில் பரசுராமரிடம் சென்றேன்.

சல்யன்: அப்புறம்!

கர்ணன்: மின்னல் கொடிபோன்ற ஜடையும் ஒளி மிகுந்த கோடரியும் தரித்து க்ஷத்திரிய குலத்திற்கே யமனாய் வந்த பிருகுவம்சத்தின் பெருமையாகிய அந்த மாமுனிவரை அடிபணிந்து அசைவற்று அருகில் நின்றேன்.

சல்யன்: ஊம்.

கர்ணன்: உடனே அவர் எனக்கு ஆசிகூறி, 'நீ யார்? எதற்காக இங்கு வந்தாய்?' என்று வினவினார்.

சல்யன்: ஊம், அப்புறம்?

கர்ணன்: 'அஸ்திரங்கள் அனைத்தையும் கற்க எனக்கு ஆவல்' என்று அடக்கமாய்த் தெரிவித்தேன்.

சல்யன்: ஊம்.

கர்ணன்: அப்பொழுது அவர் சொன்னார்: 'எனது உபதேசம் பிராமணர்களுக்குத்தான். க்ஷத்திரியர்களுக் கில்லை.'

சல்யன்: முனிவருக்குத்தான் முன்பே க்ஷத்திரிய குலத்தாரோடு பகையாயிற்றே!

கர்ணன்: உடனே நான் க்ஷத்திரியன் அல்ல என்று கூறி அஸ்திரங்களைக் கற்கத் தொடங்கினேன்.

சல்யன்: ஊம், அப்படியா?

கர்ணன்: நாட்கள் பல சென்றன. ஒரு நாள் முனிவர் பழங்கள், கிழங்குகள், தர்ப்பை, புஷ்பம் இவற்றைக் கொண்டுவரக் காட்டிற்குச் சென்றார். நானும் அவருடன் சென்றிருந்தேன். காட்டில் சுற்றிக் களைப்புற்ற என் குருநாதன் என் மடியில் துயில் கொண்டு உறங்கி விட்டார்.

சல்யன்: அப்புறம்?

கர்ணன்: அப்பொழுது துரதிர்ஷ்டவசத்தால் வஜ்ர முகம் என்ற ஒரு வண்டு எனது இரண்டு துடைகளையும் குடைந்து விட்டது. குருநாதன் தூக்கம் கலையுமே என்று அஞ்சி வலியைப் பொறுத்துக் கொண்டேன். ஆகிலும் என்ன? துடையிலிருந்து பெருகிய ரத்தம் பட்டு அவர் விழித்துக் கொண்டார். எனது பொறுமையைக் கண்டு என்னை யார் என்று ஊகித்து

விட்டார். அவர் உள்ளத்தில் கோபத்தீ கொழுந்து விட்டு எரிந்தது. 'நீ கற்ற அஸ்திரங்கள் சமயத்தில் பயனற்றுப் போகட்டும்' என்று சபித்துவிட்டார்.

சல்யன்: கஷ்டம். முனிவர் மிகவும் வருந்தத்தக்க முறையில் கூறிவிட்டார்.

கர்ணன்: இருக்கட்டும். அஸ்திரங்களை இப்பொழுது பரீக்ஷித்துப்பார்க்கிறேன். (பரீக்ஷை செய்கிறான்) கஷ்டம். இந்த அஸ்திரங்கள் பயனற்றவைபோலவே காணப் படுகின்றன. மேலும் இந்தக் குதிரைகள் சோர்வுற்றுக் கண்களை மூடிக் கொண்டு அடிக்கடி இடறுகின்றன. யானைகளும் மதம்கொண்டு நிற்கின்றன. இவையெல்லாம் தோல்வியுற்று யுத்தத்திலிருந்து திரும்புவதற்கு அறி குறிகள். சங்கம் துந்துபி ஒன்றுமே சப்திக்கவில்லையே?

சல்யன்: இதையெல்லாம் பார்த்தால் மிகவும் வருத்த மாகவேயிருக்கிறது.

கர்ணன்: சல்யராஜனே, வருந்த வேண்டாம். இறந்தால் சுவர்க்கம். ஜெயித்தால் புகழ். இரண்டையும் உலகம் போற்றும். போர் ஒரு நாளும் பயனற்றதாகாது. மேலும் இப்புரவிகள் செழித்த காம்போஜத்தில் சிறந்த ஜாதி யில் பிறந்தவை. வேகத்தில் கருடனுக்கு ஒத்தவை. ஆகவே ஒரு பொழுதும் யுத்தத்தில் நமது விருப்பத்தை நிறைவேற்றாமல் இரா. எதைக் காக்க வேண்டுமோ அதைத் தவறாமல் காக்கவும் செய்யும்.

பசுக்களும் பிராமணர்களும் பழுதின்றி வாழட்டும். கற்பரசிகளுக்குக் காப்பு உண்டாகட்டும். போரில் புறம் காட்டாத வீரர்களுக்குக் குறைவு வேண்டாம். எனக்கு நல்ல காலம் பிறக்கவேண்டும்.

(ஏதோ சத்தத்தைக் கேட்டு)

ஏதேர்சத்தம் கேட்கிறதே!......பிரளய காலத்தில் கொந்தளிக்கும் கடலின் இரைச்சல் போன்ற சங்கத்தின் சத்தம் அல்லவா கேட்கிறது! இருக்கட்டும்.

சல்யராஜனே, இதோ நான் போர்க்களத்தில் புகுந்து, குணசாலியென்று புகழ் பெற்ற தர்மராஜனைக் கட்டி, பாணங்களின் வேகத்தாலேயே பார்த்தனைக் கீழே தள்ளி, கொன்ற சிங்கத்தையுடைய கானகத்தைப் போல் பயமின்றி அனைவரும் புகும்படி போர்க்களத்தைச் செய்கிறேன். சல்யராஜனே, தேரில் ஏறிச்செல்வோம்.

சல்யன்: அப்படியே.

(இருவரும் ஏறிப்போகிறார்கள்)

கர்ணன்: சல்யராஜன், அர்ஜுனன் இருக்குமிடத்திற்கே எனது தேரை ஓட்டும்.

(திரைக்குள்)

கர்ண, பெரியதொரு பிக்ஷைவேண்டும்.

கர்ணன்: (கேட்டு) அடே, கம்பீரமானகுரல்! இவர் வெறும் ஏழைப் பிராம்மணன் அல்ல. பெருமை பூண்ட ஒரு ஸ்ரீமானே. இவருடைய கம்பீரம் தொனிக்கும் இனிய குரலைக் கேட்டு இக்குதிரைகள் காதை உயர்த்தி, கண்ணைச் சுருக்கி, கழுத்தை வளைத்துப் பரவசமாய்ப் படத்தில் எழுதியவை போல் திடீர் என்று நின்றுவிட்டனவே!

யாரங்கே? அந்தப் பிராமணனை அழைத்துவா...... வேண்டாம், வேண்டாம். நானே அழைத்து வருகிறேன். பகவானே, இப்படி இப்படி.

(பிராம்மணன் வேஷம் பூண்ட இந்திரன் வருகிறான்.)

இந்திரன்: (தன்னை ஏற்றி வந்த மேகங்களைப் பார்த்து) மேகங்களே, நீங்கள் கதிரவனுடன் திரும்பிச் செல்லலாம். (கர்ணனை அணுகி) கர்ணா, பெரியதொரு பிக்ஷை வேண்டும்.

கர்ணன்: பகவானே, நிரம்ப சந்தோஷம். இன்றே நான் உலகில் கிருதார்த்தனானேன். சக்கரவர்த்திகள் பணிந்து கிரீடரத்தினங்களால் ஒளி மிகுந்த பாதங்களை யுடையவன், அந்தணர்களின் பாத தூளிகளால் புனிதமான தலையுடையவன், கர்ணன், பகவானே, உம்மை பணிந்து நமஸ்காரம் செய்கிறேன்.

இந்திரன்: (தனக்குள்) என்ன ஆசி கூறுவது? நீடுழி வாழ்க என்றால் அப்படியே வாழ்ந்து விடுவான். ஒன்றும் சொல்லாவிடில் என்னை மூடன் என்று அவமதிப்பான். இரண்டுமில்லாமல் என்ன செய்வது? இருக்கட்டும். இப்படி சொல்லுகிறேன். (வெளிப்படையாக) கர்ணா, சூரியன், சந்திரன், இமவான், சமுத்திரம் இவைகளைப்போல் உனது புகழ் அழிவற்று இருக்கட்டும்.

கர்ணன்: பகவானே, 'தீர்க்காயுளாக இரு' என்று சொல்லக் கூடாதா?...இல்லாவிடில் இதுவே நல்லது. ஏனெனில் மனிதன் கஷ்டப்பட்டாலும் தர்மத்தையே செய்ய வேண்டும். அரச சம்பத்துக்கள் பாம்புகளின் நாக்கு போல் சஞ்சலமானவை. ஆகவே குடிகளைக் காக்கும் நோக்கத்துடன் வாழ்வதே இந்தப் பயனற்ற உடலுக்கு மேன்மை. பகவானே, தங்கள் விருப்பமென்ன? நான் எதைக் கொடுக்கவேண்டும்?

இந்திரன்: பெரியதொர் பிக்ஷை வேண்டும்.

கர்ணன்: எனது செல்வத்திற்கு ஏற்ற மிகவும் பெரியதோர் பிக்ஷை கொடுக்கிறேன். கேளுங்கள். அமுதம் போல் இனிக்கும் பாலைப்பொழியும் ஆயிரம் இளம்

கோக்களை, திருப்தியாய்ப் பால் பருகிய கன்றுகளோடு கொம்புகளில் தங்கம் பொதிந்து காண்போர் விரும்புமாறு உமக்கு அளிக்கட்டுமா?

இந்திரன் : ஆயிரம் மாடுகளா? நான் எப்பொழுதாகிலும் கொஞ்சம் பால் குடிக்கப்போகிறேன். வேண்டாம் கர்ணா, வேண்டாம்.

கர்ணன் : தங்களுக்குக் கோக்கள் வேண்டாமா? ஆனால் இதைக் கேளுங்கள். கதிரவன் குதிரைகளுக் கொப்பானவை, ராஜலக்ஷ்மிக்கு ஓரங்கம், அரசர்கள் அனைவரும் போற்றிப் புகழ்பவை, சிறந்த காம்போஜத்தில் பிறந்தவை, அரிய குணமுள்ளவை, வாயுவேகம் கொண்டவை, போரில் திறமை காட்டியவை இத்தகைய பல்லாயிரம் குதிரைகளைப் பொறுக்கித் தங்களுக்குக் கொடுக்கட்டுமா?

இந்திரன் : குதிரையா? எப்பொழுதாகிலும் ஒரு நிமிஷம் ஏறப்போகிறேன். வேண்டாம் கர்ணா, வேண்டாம்.

கர்ணன் : இதுவும் வேண்டாமா? அப்படியானால் வேறு ஒன்றைக் கேளுங்கள். மதம் பெருகும் கன்னம், அதில் மொய்க்கும் வண்டினங்கள், பளீர் என்று துலங்கும் நகம், கொம்பு இவைகளோடு கூடியவை, மலை போன்றவை, மேகம்போல் காஜிப்பவை, போர்களத்தில் பகைவரை வெல்லும் திறமை பூண்டவை இத்தகைய யானைகளின் பல கூட்டங்களைத் தங்களுக்கு நான் அர்ப்பணம் செய்யட்டுமா?

இந்திரன் : யானையா? எப்பொழுதாகிலும் ஒரு நிமிஷம் ஏறப் போகிறேன். வேண்டாம் கர்ணா, வேண்டாம்.

கர்ணன் : தாங்கள் இதையும் விரும்பவில்லையா? ஆனால் வேண்டும் அளவு சுவர்ணம் கொடுக்கட்டுமா?

இந்திரன் : சரி, வாங்கிக்கொள்கிறேன். (சிறிது தூரம் சென்றுவிட்டு) வேண்டாம் கர்ணா, வேண்டாம்.

கர்ணன் : அப்படியானால் உலகையே ஜயித்துத் தங்களுக்குக் கொடுக்கட்டுமா?

இந்திரன் : உலகை வைத்துக்கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன்?

கர்ணன் : அப்படியானால் அக்னிஷ்டோம யாகத்தின் பலனைக் கொடுக்கட்டுமா?

இந்திரன் : அதனால்தான் நான் என்ன செய்வேன்?

கர்ணன் : அப்படியானால் என் தலையைக் கொடுக்கட்டுமா?

இந்திரன் : அந்தோ! கஷ்டம். கஷ்டம்.

கர்ணன்: பயப்பட வேண்டாம். பயப்பட வேண்டாம். தய்வு செய்து மற்றது ஒன்றையும் கேட்டுவிடுங்கள். என்னுடன் பிறந்த கவசமிருக்கிறது. தேவரும் அசுரரும் கூட இதைப் பாணங்களால் பிளக்கமுடியாது. எனது உடலுக்கு ரக்ஷை இதுவே. இந்தக் கவசத்தை எனது காதில் அணிந்த குண்டலங்களுடன் தங்களுக்குக் விருப்பமானால் அன்புடன் அளிக்கிறேன்.

இந்திரன் : (சந்தோஷத்துடன்) கொடும் கொடும்.

கர்ணன் : (தனக்குள்) இவருடைய விருப்பம் இதுவே. ஒரு வேளை பல கபடங்கள் செய்யும் கிருஷ்ணனின் தந்திரமோ இது...? இருக்கட்டுமே. வருந்துவது சரியல்ல. (வெளிப்படையாக) இதோ எடுத்துக் கொள்ளுங்கள்.

சல்யன் : அங்கராஜனே! கொடுக்கவேண்டாம்; கொடுக்கவேண்டாம்.

கர்ணன் : சல்யராஜனே, தடுப்பது சரியல்ல. பாரும், நாம் கற்றதெல்லாம் காலக்கிரமத்தில் மறந்து விடும். நன்றாய் வேரூன்றிய மரங்களும் நாளடைவில் சாய்ந்துவிடும். ஏரி நீரும் ஒரு நாள் வற்றிவிடும். அக்னி யில் ஹோமம் செய்ததும், பிறருக்குக் கொடுத்ததுமே அழிவற்று நிற்கும். ஆகவே, பெற்றுக்கொள்ளும். (உடம்பிலிருந்து அறுத்து கவசத்தையும் குண்டலத் தையும் கொடுக்கிறான்)

இந்திரன் : (வாங்கிக்கொண்டு தனக்குள்) இரண் டையும் வாங்கிக் கொண்டு விட்டேன். முன்பே அமரர் கள் அனைவரும் அர்ஜுனன் வெற்றியடைவதற்காக இதைச் செய்ய வேண்டும் என தீர்மானித்திருந்தனர். இப்பொழுது செய்து முடித்து விட்டேன். ஆகவே நானும் ஐராவதத்தில் ஏறிக்கொண்டு அர்ஜுனனுக்கும் கர்ணனுக்கும் நடைபெறும் போரைப் பார்க்கிறேன். (போகிறான்)

சல்யன் : அங்கராஜனே, உம்மை ஏமாற்றி விட்டானே!

கர்ணன் : யார்?

சல்யன் : இந்திரன்.

கர்ணன் : இல்லை. நான் அல்லவோ இந்திரனை ஏமாற்றினேன். ஏன் எனில், அந்தணர் அனேக யாகம் செய்து வழிபடுபவன், அசுரக் கூட்டத்தை அடியோடு அழிப்பவன். ஐராவதத்தைத் தட்டிக் கொடுத்து தழும் பிய கையுடையவன், எல்லாவற்றிற்கும் மேல் அர்ஜு னன் தந்தை, அந்த இந்திரனும் என்னால் அல்லவோ தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டான்?

(பிராம்மண ரூபம் தரித்த தேவதூதன் வருகிருன்)

தேவதூதன் : கர்ணு, கவசத்தையும் குண்டலத்தையும் வாங்கிச் சென்ற தேவேந்திரன் பச்சாத் தாபமுற்று உம்மை அனுக்ரகிக்கிருர். பாண்டவர்களைச் சேர்ந்த ஒரு புருஷனைக் கொல்லும் விமலா என்ற வீண் போகாத இந்த அஸ்திரத்தைப் பெற்றுக்கொள்ளும்.

கர்ணன்: இழிவு. என்னிடம் தானம் பெற்றவனிடமிருந்து நான் ஒன்றையும் வாங்கிக் கொள்ளமாட்டேன்.

தேவதூதன். நான் பிராம்மணன் சொல்லுகிறேன், வாங்கிக் கொள்ளும்.

கர்ணன்: பிராம்மணன் சொல்லுகிருரா? பிராம்மணன் சொல்லை இது வரையில் மீறியதில்லை ... எப்பொழுது அந்த அஸ்திரம் எனக்குக் கிடைக்கும்?

தேவதூதன்: எப்பொழுது நினைக்கிறீரோ அப்பொழுது.

கர்ணன்: நல்லது. அனுக்ரகம். போய் வாருங்கள்.

தேவதூதன்: அப்படியே (போகிருன்)

கர்ணன் : சல்யராஜனே. தேரில் ஏறுவோம்.

சல்யன்: ஆகட்டும்.

(தேரில் ஏறுகிருர்கள்)

கர்ணன்: ஏது சத்தம் கேட்கிறது? இது என்ன? பிரளய காலத்துக் கடலின் இரைச்சல் போன்ற இந்த சங்கநாதம் கிருஷ்ணனுடையதா? இல்லை. அர்ஜுனனுடையதே. யுதிஷ்டிரரின் தோல்வியால் கோபமுற்ற

அர்ஜுனன் இன்று தன்பலம் கொண்டமட்டில் யுத்தம் செய்வான். நிச்சயம். சல்யராஜனே, அர்ஜுனன் இருக்குமிடத்திற்கே எனது தேரை ஓட்டிச் செல்லும்.

சல்யன்: ஆகட்டும்.

(பரதவாக்யம்)

சம்பத்து தழைக்கட்டும். ஆபத்து ஒழியட்டும். திகழும் குணங்கள் கொண்ட நமது அரசன் ஒருவனே உலகை ஆளட்டும்.

(போகிறார்கள்)

சிறு செங்குவளை

எஸ். ஓமதானுபிள்ளை

தமிழகம் ஒரு தனி நாடு. பண்டைக் காலத்தில் அதுபெரிய நிலப்பரப்பாகக் கிடந்தது. தமிழ் மூவேந்தர்கள் அந்நாட்டை ஆண்டுவந்தார்கள். முச் சங்கங்களில் முத்தமிழும் முழங்கின. அரசர்களும் வள்ளல்களும் புலவர்களை ஆதரித்து வந்தார்கள். புலமை நிரம்பிய புலவர்கள் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு மிகப் பெரியது. அதை அளந்து கூற முடியாது.

கடல் தமிழகத்தின் பெரும் பகுதியையும் விழுங்கிற்று. விலை மதிக்க முடியாத தமிழ்ச் செல்வங்கள் அழிந்தன. அவை போக மீதியுள்ள நூற்செல்வம் ஒரு சிறு அளவே யாகும். இப்பொழுது கிடைத்திருப்பன பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பனவாம். இந் நூற்களும் பழமையானவை. இவைகளுக்குச் சங்க இலக்கியம் என்று பெயர். தலைமையான இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியர் அகத்தியருடைய பன்னிரு மாணுக்கரில் ஒருவர் என்கிறார்கள்.

பழந்தமிழ் நூல்களிலிருந்து பண்டைத் தமிழ் மக்களுடைய பண்பாடுகள் முதலியன அறியலாம். புறநானூற்றில் தமிழ் மன்னர்களின் அரசியல் மணங் கமழ்கின்றது. உலகிற்கு இது ஓர் சிறந்த எடுத்துக் காட்டு. சங்க நூல்களிலிருந்து தமிழ்ப் பெருமக்களுடைய ஒழுக்கம், நாகரிகம், வீரம், கொடை முதலியவைகளை அறியலாம்.

தமிழர்களுக்கு உயிரை விட மானம் பெரிது. தனிக் குணங்கள் பல உண்டு. போர் செய்யாத நாள் வீணான நாள். போர் செய்து முகத்திலும் மார்பிலும் புண்படும் நாட்கள் தமிழனுக்கு இன்ப நாட்கள். யாசிக்கும் ஏழை எளியவருக்குக் கொடுக்க முடியாத சமயத்தில் உயிர் வாழ்வதை விட இறப்பதைத் தமிழன் இன்பமாகக் கொண்டான். வறியார்க்குக் கொடுத்துப் புகழுண்டாக வாழ்வதே உயிருக்கு இன்பம்.

இந்த ஒழுக்கத்தைத் தமிழ்ப் பெருமக்கள் கைக் கொண்டொழுகி வந்தார்கள். இங்ஙனம் வாழ்ந்தவர்களுள் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் ஒருவன். பெயர்க் காரணம் சொல்லாமலே விளங்கும். இவன் தமிழ் முடியுடைய மூவேந்தரில் ஒருவன். மூவேந்தர்களுள் முதலிடம் சேரனுக்குத்தான். சர்வர் மூவா முடியுடைய வேந்தர்கள் சேர மன்னர்கள். சோழ பாண்டிய மன்னர்களுடைய மரபைப்பற்றி அறிய முடியாது. ஆனால் சேரர் குலம் இன்றும் உள்ளது.

திருவிதாங்கூர் சேர நாட்டின் ஓர் பகுதி. இதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. சேர மன்னர்கள் தமிழ் வேந்தர்கள் என்பதற்குச் சங்க நூற்களிலிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் ஆதாரங்கள் கூறலாம். சேரமான் பெருஞ் சேரலாதன், சேரன் செங்குட்டுவன் முதலிய மன்னர்கள் கொடைமடம் உடையவர்கள். புலவர்களுக்குப் பரிசிலாக நாடும் ஊரும் பொன்னும் மணியும் கொடுத்தவர்கள். அரசாட்சியையுங் கொடுத்திருக்கின்றார்கள். சேரன் செங்குட்டுவன் தன்னுடைய ஆசைப் புதல்வன் குட்டுவஞ்சேரலனைப் பரணருக்குப் பரிசிலாகக் கொடுத்தான். இது போலுள்ள சேர மன்னர்களுடைய பெருமைகளைப் பதிற்றுப் பத்து என்னும் நூலிலிருந்து அறிகிறோம்.

வட நாட்டு ஆரிய மன்னர்கள் தமிழர்களையும் தமிழ் மொழியையும் இகழ்ந்து கூறினார்கள். அதை கேட்டவுடன் வெகுண்டெழுந்தது யார்? சேர மன்னர்கள் பாடல் பெற்றவர்கள் மட்டுமல்ல. தமிழ்ப் புலமை நிரம்பப் பெற்றுப் பாடியவர்களு மாவார்கள்.

சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளும் பாலை பாடிய பெருங்கடுங் கோவும் சேர மரபினர் தான். ஐங்குறு நூறு என்னும் நூலைத் தொகுத்தது யார்? இந்த நூலில் ஒரு திணை பாடியவரும் யார்?, சேர வேந்தர்கள் தான். புறப் பொருள் வெண்பா மாலை பாடிய ஐயனாரிதனார் எந்த மரபைச் சேர்ந்தவர்? பொன் வண்ணத் தந்தாதி, திருக்கைலாய ஞானவுலா முதலிய பிரபந்தங்கள் பெருமை வாய்ந்தவை. இவைகளைப் பாடியவர் சேரமான் பெருமாள் நாயனார். இவர் அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவர். இவர் சைவ மத ஒழுக்கமுடையவர். பெருமாள் திருமொழி என்னும் பிரபந்தம் பாடிய குலசேகராழ்வார் எந்த மரபைச் சார்ந்தவர்? இவர் வைணவர்.

இலக்கியங்களையும் சமய நூற்களையும், தரந்தரமாகப் பாடிய பெரியார்கள் பலர் சேரகுல மரபைச் சார்ந்தவர்கள். தொல்காப்பியம் முது பெருந் தமிழர் புலவர்கள் நிறைந்த சபையில் அரங்கேற்றப்பட்டது. அந்தச் சபைக்குத் தலைமை வகித்தது யார்? அதங்கோட்டாசான். அதங்கோடு என்னும் ஊர் தென் திருவிதாங்கூரில் விளவங் கோட்டுத் தாலுகாவில் இப்பொழுதும் இருக்கிறது.

பதிற்றுப் பத்து சேர மன்னர்களின் வரலாற்றை மட்டும் கூறும் நூல். இந்நூலில் கடவுள் வாழ்த்துப் பாடல் இல்லை. அகவல் பாக்களால் ஆக்கப்பட்டது.

ஒவ்வொரு பகுதியிலும் பத்துப் பாடல்கள் உண்டு. இவ்விதம் பத்துப் பிரிவாகத் தொகுக்கப்பட்டதால் பதிற்றுப் பத்து எனப்பட்டது. முதலிலுள்ள பத்தும் இறுதியிலுள்ள பகுதியுமில்லை, ஏனைய பகுதிகளே உள்ளன.

பண்டைக் காலத்தில் புலமை நிரம்பிய பெண்பாற் புலவர்களும் இருந்தார்கள். ஔவை, இளவெயினி, நக்கண்ணையார், காவற்பெண்டு, பாரி மகளிர், வெண்ணிக் குயத்தியார், வெள்ளி வீதியார், நாகையார், நன்முல்லையார், நல்வெள்ளியார், நப்பசலையார் முதலிய பெண் பாற் புலவர்களின் பெயர்கள் சங்க நூல்களில் காணப் படுகின்றன.

நச்செள்ளையாரும் பெண்பாற் புலவர்களுள் ஒருவர். பதிற்றுப்பத்தில் ஆறும்பத்தைப் பாடியவர். இப்பகுதிக்குப் பாட்டுத்தலைவன் ஆடுகோட் பாட்டுடைச் சேரலாதன். இச்சேரன் நச்செள்ளையாருக்கு அணிகலனுக்காக ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற் காசும் பரிசாகக் கொடுத்தான். நச்செள்ளையார் என்பது இவருடைய இயற் பெயர்.

திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்வற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே

என்று குறுந்தொகையில் 210-ம் பாட்டில் காக்கை கரைந்ததைப் பாராட்டிக் கூறினார். அதனால் காக்கை பாடினியார் என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இவர் பாடியதாக எட்டுத் தொகை நூற்களில் பன்னிரண்டு செய்யுட்கள் காணப்படுகின்றன. புற

நானூற்றில் ஒரு செய்யுளும் குறுந்தொகையில் ஒரு செய்யுளும் நச்செள்ளையார் பாடியிருக்கின்றார். பதிற்றுப் பத்தில் ஆரும்பத்தில் கண்ட வரலாறு இங்கே பல வேறு பாடுகளுடன் வெளியிடப் படுகிறது. "கூடி முயங்குவதற்கு ஊடல் வேண்டும். அந்த ஊடல் காம இன்பத்தின் நிலைக்களனாகும். அகப் பொருளின்பத்தைப் புறப்பொருளின்பத்தோடு கலந்து கூறியிருக்கும் இவரது புலமை போற்றிப் புகழ்தற்குரியது.

கடல் வளமும் மலைவளமும் கலந்து காட்சி தரும் சேரநாட்டிலுள்ள இடங்களையெல்லாம் அளந்தளந்து நச்செள்ளையார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை அடைந்தார். நாட்டு வளப்பத்தால் அவருக்கு வழி நடந்த அலுப்பே தெரியவில்லை. அரசன் விரும்பி அவரை உபசரித்தான். அங்கே நடந்த விருந்து உபசாரங்களிலும் வேடிக்கை விளையாட்டுக்களிலும் நச்செள்ளையார் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டார். களிப்பின் மிகுதியால் அவரது நாவில் கன்னித் தமிழ் தவழ்ந்து தவழ்ந்து வருகின்ற விதத்தைப் பாருங்கள்.

" அரசனே உன்னுடைய நாடுபெரிது. அகன்ற இடத்தையுடையது. அசைகின்ற அகன்ற நீர்நிலைகளை எல்லாம் எங்கும் பார்த்தேன். அவை கலங்கலாகவே காணப்படுகின்றன. அதற்குக் காரணம் காற்று ஓய்வும் ஒழிவும் இல்லாமல் வீசிக் கொண்டே இருக்கிறது. கடலலைகள் வானளாவ எழுந்து முழங்கிக் கொண்டே இருக்கின்றன. இரவும் பகலும் அவைகளுக்கு அலுப்பே இல்லை.

கடற்கரைச் சோலையை அடுத்துள்ள கூவலில் நாரைகள் கூட்டங் கூட்டமாக மேய்கின்றன. மேய்ந்த களிப்பின் மிகுதியால் அவைகள் பூங் கொத்துக்களை

யுடைய கோங்கின் கிளைகளை எண்ணியெண்ணி அமர் வதைப் பார்த்தேன். பின் அவைகளின் பாஷையில் பாடிபேசிக் களிக்கின்றன.

கரைகளைப் பார்த்தேன். தரையைக் காண முடிய வில்லை. எங்கும் அடுப்பங் கொடிகள் படர்ந்து காட்சி யளிக்கின்றன. வண்டுகள் அந்த இடத்தை விட்டு அகல்வதே இல்லை. தாந்தரமாகக் கொழித்து ஒதுக் கப்பட்ட பல வர்ணமுடைய மணல்களையும் பார்த்தேன். அதை நினைக்க நினைக்கத் தனியின்பம் பிறக்கின்றது.

மென்மையான மணலில் குட்டிக்குழந்தைகளோடும் துணையோடும் நண்டுகள் தொட்டு விளையாடித் துள்ளிக் குதிக்கின்றன. என்னுள்ளமும் துள்ளிக் குதித்து அவைகளோடு களித்துக் கொண்டிருந்தது. அவைகள் விளையாடிய இடத்தை உற்று நோக்கினேன். அழகிய கோலந் தீட்டப் பட்டிருந்தது போலிருந்தது. நண்டு கள் விளையாடினவா, கோலந்தீட்டினவா என்ற சந்தேகம் எனக்குண்டாயிற்று.

இந்தத் திருவிளையாடல்களை எல்லாம் காற்று கண் களை மூடாமல் ஒரே பார்வையாக பார்த்துக்கொண்டி ருந்தது. பொறுமை கொண்ட காற்று, பொல்லாத காற்று, மன்னிக்க முடியாத பெரிய குற்றத்தைச் செய்து விட்டு ஒரே ஓட்டமாக ஓடிற்று. மெல்லிய மணலால் கோலத்தை அழித்ததைக் கண்டு எனக்குக் கோபம் மூக்கின் நுனியில் வந்து விட்டது. கண்ணிற் படாமல் ஓடிற்று. கையிற் பட்டிருந்தால் அதை என்னபாடு படுத்தியிருப்பேன்! காற்றிற்குக் குறும்புத் தனங் கூடுதல்.

படர்ந்து வளர்ந்த வேலமரங்களைப் பார்த்தேன். கூட்டங் கூட்டமாகப் பனை மரங்கள் ஆகாயத்தைத்

தொடுவதற்குப் போட்டி போடுகின்றன. காற்றூடியின் ஓசையைப்போலச் சீள் வீடு என்னும் வண்டு முழங்கு கின்றது.

உழவர்கள் கிடாக்களை உரப்பி உழுகின்றார்கள். பொன்னேர் பூட்டி வயலில் அவர்கள் உழுங் காட்சியைப் பார்ப்பதற்குப் பதினாயிரங் கண்கள் வேண்டும். நிதமும் மண்ணைக் கிண்டி உண்பதே அவர்கள் வேலை. மண்ணைப் பொன்னாக்கும் மாய செப்படி வித்தைக் காரர்கள். அவர்கள் உலகத்திற்கு ஆணி. பல குடை மன்னரும் உழவர்களுடைய அலகின் கீழ் அடக்கம்.

வண்டுகள் மொய்க்காததும், சதைப்பற்றுள்ளதும், சுவை மாறாததும், கத்தியால் அறுக்காததும், மரத்திலே கிடந்து கனிந்த கனிவகைகள் நிறைந்தது உன்னுடைய நாடு. பார்த்தால் பசி பறந்து விடும். உண்டால் நீண்ட ஆயுள். அவைகள் முட்டை வடிவத்தைப் போலிருக்கின்றன. வழிப் போக்கர்களுக்கு அவைகள் பெருந்தடை.

மாறாத விளைவுடைய ஆறாத புது வருவாயை யுடையது உன் பொன்னாடு. கடல்படு பொருளும் மலைபடு பொருளும் மலை போலப் பண்டசாலையில் குவிந்து கிடக்கின்றன.

விரிந்து கமழும் அழகிய நெய்தற் பூவால் தொடுத்த மாலைகளைப் பந்தர் போல் வேய்ந்த இடத்தில் நீ வீற்றிருக்கின்றாய். திறையிடும் மன்னர்கள் வாசலில் கூட்டங் கூட்டமாகக் காத்து நிற்கின்றார்கள்.

பாம்பு போல் சீற்ற முடையவர்கள் உன் பகைவர்கள். நீ அவர்களை அடியோடு அழிக்கும் இடிக்கு ஒப்பாவாய். போர்க்களத்தில் விரைய வினையைச் செய்யுங்

திறனுடையவன். உன்னைப் போலவே உனது படைகளும். உன் காலாள் படைகள் பகைவரது யானையின் கொம்புகளை வெட்டும் வலிமையுடையவர்கள்.

கொடிகள் கட்டிய தேரைப் பகைப்புலத்தில் பரப்புவாய். பரிசு கவசம் கேடயம் இல்லாமல் வாள் வேல் ஈட்டி இவைகளுடன் உன் வீரர்கள் போர் முன்னணியிற் குதிப்பார்கள். பகைவர்கள் ஓயாமல் உன்னுடன் போர் செய்வார்கள். போரில் வீர சொர்க்கம் அடைந்தவர் கொஞ்சமல்ல. ஆயிரக்கணக்காக வீரர்கள் களத்தில் பட்டனர். நீ நல்ல போரை வென்றாய்.

நீ வெற்றி பெற்று உன்னுடைய மூதூருக்குச் செல்ல விரும்புவாய். செல்லும் பொழுது வளைந்த வழியிற் செல்ல வேண்டும். வழியில் களைய மரம் புறத்தில் சேர்க்கப்பட்டதும் இரும்புத் தகடுகளை யுடையது மான நிலையின் வாயிற் கதவுகளை மதம் பொழியும் உன்னுடைய யானைகள் கண்டால் சும்மா விடாது. அங்கே வெற்றிக் கொடிகள் அசைந்தாடுவதைக் கண்டால் அவைகளுக்கு மனம் பொறுக்குமா?

பாசறையில் முரசொலி எங்கும் முழங்கிப் படைகளை ஏவி ஒலிக்கும். ஆயுத மேந்திய இளைஞர்களை அணி வகுத்து ஏவி, தாமும் ஏவல் செய்யும் பகையின் யானைப் படையை உன்னுடைய தானைகள் கண்டால் அடங்காது. அத்தகைய படைக்குத் தலைவன் நீ.

விழாக்கள் கொண்டாடும் நகரில் கூத்தரின் முடிவின் முன் ஆடமாட்டாய். ஆனால் பகைவரின் வெற்றிச் செல்வம் மாய்ந்தழியும் போர்க்களத்தில் ஆடுவாய்.

மறவர் வெண்மையான பனந்தோடுங் குவளை மலரும் அணிந்திருப்பார்கள். போர்க்களத்தில் வாள் பட்ட தழும்புகள் உடலெங்கும் காணப்படும். பகையைக்

கொல்லும் படைக் கலன்களையுடையவன் நீ. "இன்று வயிறார உண்டோம் நாளைப் பகைவரின் மதிலைக் கடந்து உள்ளே சென்றாலல்லாமல் சாப்பிட மாட்டோம்" என்பர் உன்னுடைய வீரர்கள். அந்த வீரர்களின் தலைவன் நீ.

ஒவ்வொரு நாளும் தார்ப்படை அழிந்து அலறும். மலை வளப்பமுடைய நாடுகளைக் கைக் கொண்டு போர் செய்து சினந்தணிந்தும், போரை விரும்பும் ஆண்மையுடைவன். எதிர்த்தவர்களை எல்லாம் சிதைத்த வாளுடைய கொற்றவன் நீ. உன்னைப் போல் குவலயத்தில் ஒருவர் உண்டா?

போர்க் களத்தில் பகையை அடியோடு அழித்தாய். நீ அணிந்திருந்த வெண்மையான பனைமாலையும் வீரக் கழலும் சிவக்கும்படி குருதி கொப்பளிக்கும். அதைப் பருந்துகள் விரும்பியுண்ண வட்டமிடும். உன்னுடைய இளம் வீரர்கள் பறையை முழக்கி உன் முன்னே நிற்பார்கள். பகைவர்கள் கூரிய அம்பால் இளைஞர்களின் பறையின் கண்களைக் கிழித்து ஆர்ப்பார்கள். இளைஞர்கள் வலியழிந்து நிற்பதை நீ காண்பாய். எமன் வலை விரித்ததுபோல, பகைவர்களை அழிக்க எண்ணி ஒரு நோக்குடனிருப்பாய். அந்தப் பார்வையிலே பகைவர்கள் அழிந்துவிடுவார்கள். இவ்விதம் பகையை அழிக்கும் வலியுடையவன்.

உன்னுடைய வலிமைக் கிணையாக வலியுடையவர்கள் உலகில் இல்லை என்பதை எதிர்த்த பகைவர்கள் உணர்ந்தார்கள். எங்களுக்கு வேண்டிய அளவு கொடுத்தாய் என்று கூறிப் பணிந்த பகைவர்கள் பலர். ஆபரணங்களைத் திறையாகக் கொடுத்துத் தாழ்ந்தவர் சிலர். இனியாவது உன்னுடைய சினந்தணியுமா?

அடங்கிய கொள்கையும் பரந்த அறிவும் நல்ல புகழுமுடைய மகளிரது அழுத கண்ணீரைக் கண்டால் உன்மனம் பொறுக்காது. அதைவிட இரவலர்களுடைய வருத்தத்தைக் கண்டஞ்சுவாய். யாசிப்பவர்களுக்கு நிதமும் கொடுப்பதற்காக எதிர் கொண்டழைக்குங் குணமுடையவன்.

ஆடலுக்குரிய சில்வளையுடைய விறலி, பாணருடைய கையிலுள்ள பாலைப் பேரியாழின் நரம்பைத் திருத்தி, தழிஞ்சிப் பாடல்களை இன்னிசையால் பாடிக் கொண்டு வருவதை வழியிற் கண்டேன். அவர்களைக் காண்பாயாக.

"பாதையோ மெல்லியது. கவனமாகச் சிறிய அடிகளைத் தூக்கி நடந்து செல். இரவலர்களை எதிரேற்றுக் கொடுக்கக்கூடியவனாகிய சோமான், இப்பொழுது எதிரேற்றுக் கொடுப்பதற் குரியவன். அவன் மறவருடைய வலியை அழித்து மாலையும் கழலும் குருதி கொப்புளிக்கும் புலால் நிறைந்த போர்க்களத்தில் இருக்கிறான். அவனைக் காண்பாயாக" என்று என்னிடம் வழிப் போக்கர்கள் கூறினார்கள்.

"நீர்த்துளிகளையுடைய கடற்காற்று வீசுகின்ற 'நறவு' என்னும் ஊரில் மெல்லிய மகளின் கூட்டத்தில் வீற்றிருக்கிறான். படைகள் கொலைத் தொழிலை நாட்டவில்லை ஆதலால் அவன் போர்த் தொழில் மேற் செல்லாமலிருக்கிறான். இன்ன சமயம் இன்ன இடத்திற்குச் செல்வான் என்று தெரியாது. பாண்மகளே! நாம் இப்பொழுது அவனிடஞ் சென்றால் நமக்கு வேண்டியதை வீசுவான்" என்று என்னைப் போன்ற ஒருவர் கூறினார். அவர்களும் உன்னை நோக்கியே விரைவாக வந்து கொண்டிருக்கின்றார்கள். அவரையும் நீ காண்பாயாக.

வான வரம்பன் செல்வச் சீமான். அவன் நாட்டில் செல்வம் பொங்கும். அவனைப்போல் நம்மைப் போன்றவர்களுக்குக் கொடுப்பதற்குத் தகுதியுடையவன் என்ற உள்ளப் பூரிப்போடு விறலிகள் திறம்பட உன் முன்னணியில் ஆடுகின்றார்கள். கவிவாணர்கள் தம் கைவரிசையைக் காட்டிக் கவிமாரி பொழிகின்றார்கள். நீ பாக்கியசாலி. உன்னைப்போல் கொடுத்து வைத்தவர்கள் யாரிருக்கின்றார்கள்?

வட இமயம் தென்குமரி வரம்புடையது இந்நாடு. கிழக்கும் மேற்குங்கடல். இந்த இடத்திலுள்ள பெருநில மன்னரும் குறுநில மன்னரும் உன்னை வணங்கத் தக்கவர்கள். கட்டமைந்த உடலும் அழகே உருண்டு திரண்ட விறலியர் பாடலில் சொக்கி நீண்டகாலமாகக் காலத்தைப் போக்குகின்றாய். 'இவன் மெல்லியன்' காலத்தை இவ்விதம் போக்குகிறான் என்று கூறுபவர்கள் உன்பெருமையை அறியமாட்டார்கள். உன்னை நன்றாக அறிந்தவர்கள் இதைச் சற்றும் மனதில் வைப்பார்களோ? போர் காரணமாகப் புறத்தே வினை ஒன்றுமில்லை. ஆதலால் விறலியர் பாடலில் ஈடுபட்டிருக்கின்றாய். இச்செயல் வேந்தர்க்குரிய தன்றோ?

அவரை துவரையின் சுவையையும் வெண்ணிறமான ஊனையும் சோற்றுக்குப் பதிலுண்டு, உண்ட களிப்பில் வீற்றிருக்கின்றாய். உன் நாட்டிலுள்ள செல்வங்களை நாள்தோறும் இரப்பவர்களுக்கு முட்டாமல் கொடுக்கும் விருப்பமுடையவன். இரப்பவர்கள் வருத்தம் நீங்க வரையாமல் வீசுவாய். இருளைப் போக்கிக் கீழ்த்திசையில் சூரியன் விளங்குகிறான். நீயோ இரவலர்களுடைய சிறு குடிகள் செல்வம் பொங்க உலகாள்பவன்.

உன்னிடத்தில் ஒருவர் ஒருதடவை யாசித்தால், மீண்டும் ஒருவரிடம் போய் மலர் போன்ற கரங்களை

விரித்துக் கேளாதவர்று கொடுக்குங் குணமுடையவன் என்பதைப் பலர் கூறக் கேட்டிருக்கிறேன். உன்னை வள்ளியன் என எல்லோரும் வாயார வாழ்த்துகின்றார்கள். அவர்கள் சொல்லக் கேட்டு உன்னைக் காண வந்தேன். இரவலர் வாராதிருந்தாலும், தேரைப்போக்கி அவர்களை வரவழைப்பாய். வந்தவரை இன்முகங்காட்டி எதிரேற்று விரும்பிய வார்த்தைகள் கூறி நல்லுணவும் நல்குவாய்.

இங்கே செல்வம் பொங்கும் பாண்டில் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. துணங்கைக் கூத்தாடுவதற்காக முழா ஒலித்துக் கொண்டிருந்தது. உன்னைச் சேவிக்கும் இளமையும் யௌவனமும் உள்ள மகளிர் திரண்டு நின்றார்கள். முக்கார மிடும் வலியுடைய ஏற்றைப்போலத் துணையர்கைத் தழுவி அம்மகளிரோடு கை கோர்த்துக் குரவைக் கூத்தாடினாய். கூத்தில் ஐம்புலன்களிடத்திலும் மன நெகிழ்ச்சியுடையவனாகக் காணப்பட்டாய்.

வாசனை வீசும் மாலையும், பரந்த தேமல் அழகும், குளிர்ச்சி பொருந்திய இமையும், மழைக்கண்ணும் முதலிய எல்லாம் உருண்டு திரண்ட பேரழகுடையவள் உன்னுடைய தேவி. அவள் பொறுமைக்குப் பூதேவி. உன் வாழ்க்கைக் கேற்ற சீதேவி. ரதியும் அவள் அழகுக் கீடாக மாட்டாள். குணக்குன்று.

குரவையில் மெய்ம்மறந்து ஆடுவதை உன்தேவி கண்டாள். அவளுடைய வாழ்க்கையில் ஒரு நாளுங் கண்டிராத காட்சி அது. கனவிலுங் கூட இந்தக் காட்சியைக் கண்டறியாதவள்.

மலர் இதழ் போன்ற சிறிய அவளுடைய பாதத்திலுள்ள கிண்கிணியானது பாதத்தின் மேல் பாகத்தை வருத்திற்று. வேகமாகப் பாயும் தண்ணீரில் அகப்பட்ட

இளந்தளிர் போல் நடு நடுங்கினாள். அப்பொழுது அவளுடைய கையில் ஒரு குவளை மலர்மட்டும் இருந்தது. அவள மனம் படபடத்தது. என்னவெல்லாமோ அவள் மனம் எண்ணிற்று. அகத்தின் நிலையை அவள் முகத்திலிருந்து நான் நன்குணர்ந்தேன். அப்பொழுது அவளுக்குண்டான கோபத்திற் கெல்லையில்லை. கையிலுள்ள குவளை மலரை உன் மேல் வெறுப்புடன் எறிய எத்தனித்துக் கொண்டிருந்தாள்.

குரவை முடிந்ததும் அவளுடைய உள்ள நிலையை அறிய ஓடி வந்தாய். பசப்பு வார்த்தைகள் எவ்வளவோ கூறிப்பார்த்தாய். என்ன வெல்லாமோ கூறி மழுப்பப் பார்த்தாய். உன் பூச்சுக் கொன்றும் அவள் மசியவில்லை. கடைசியில் அவளுடைய கையிலிருந்த மலரைக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டாய். "நீ எனக்கு யார்?" என்று வெடுக்கென்று கூறிவிட்டுச் செல்பவளானாள்.

உள்ளன்புடைய உன் தேவியிடம் நீ இவ்விதம் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்பதற்கவசியமில்லை. உடனே ஒரு கோபமான பார்வையில் அவளிடமிருந்து அதை வாங்க முடியாத தெம்மாடியாகி விட்டாய். உன் தேவியிடத்திலிருந்து சிறுசெங்குவளை மலரைக் கையில் வாங்க முடியவில்லை. வானளாவ எழுந்த மதிலையுடைய வெண்கொற்றக் குடையுடைய பகையரசர்களுடைய மதிலை எவ்விதம் நீ கைப்பற்றப் போகிறாய்?

போர்க்களத்தாடுங் கோவே? சான்றோர்புரவல வில்லோர் மெய் மறை! சேர்ந்தார்க்கரணம்! ஆன்றோள் கணவம் இறை கிழவோய்! நெடுந்தகாய்! வேண்டிய சமயத்தில் பெய்து உலகைக் காக்கும் மேகம் போல உன்னுடைய வாழ் நாள் விளங்குக. நீ எங்களைப் போல இரவலர்களுடைய ஆக்கத்தின் காரணமாக உயர் நிலையுலகத்திற் செல்லாமல் நீண்டு வாழ்வாயாக. உன்னுடைய கண்ணி வாழ்வதாக.

சமஸ்தான ஐக்கியப் புரட்சி

"நிருபன்"

இந்தியா சுதந்திரமடைந்து ஒரு வருஷம்கூட ஆக வில்லை. இந்தக் குறுகிய காலத்திற்குள் சமஸ்தான பிரசினையை மிக மிக வெற்றிகரமாக, "கத்தியின்றி, ரத்த மின்றி" தீர்த்து, ஐக்கிய இந்தியாவின் சுதந்திரத்தை மங்காது செய்த பெருமை நமது நேரு சர்க்காரைச் சாரும். ஜனநாயக அரசியல் நிர்வாகத்தில் இதனை விடப் பெரிய சேவை இருக்க முடியாது. பிரதமர் பண்டித நேருவும் உப பிரதமர் சர்தார் பட்டேலும் இம் மகத்தான சாதனைக்குக் காரண புருஷர்கள்.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதி அதிகாரம் மாற்றப்பெற்ற போது இருந்த சூழ்நிலையும் சுற்றுச் சார்பும் என்ன என்பதை எண்ணிப் பார்த்தோமானால் தான் இந்தச் சாதனையின் 'மஹத்' சரிவர விளங்கும்.

அதிகார மாற்றத்திற்குமுன் இந்தியாவில் ஜாகீர்கள் எஸ்டேட்டுகள் ஆகியவை உள்பட மொத்தம் 615 சமஸ்தானங்கள் இருந்தன. இவற்றின் மொத்த விஸ்தீரணம் ஏறக்குறைய 7, 12, 508 சதுர மைல்; சமஸ் தானங்களின் ஜனத்தொகை மொத்தம் 1931-ம் வரு ஷத்து கணக்குப்படி 8, 13, 10, 845. இத்தனை சமஸ் தானங்களையும் தனித்தனிச் சுதந்திர உருப்புக்களாக ஆக்கி விட்டனர் பிரிட்டிஷ் மந்திரி சபை தூது கோஷ்டி யினர்.

தேசப்பிரிவினை என்ற நெஞ்சைப் பிளக்கும் திட்டத்திற்குத் தலைவர்கள் சம்மதிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது எனினும், இந்தத் " தனிக்காட்டு ராஜா " சுதந்திரத்தை இந்திய தலைவர்கள் ஒருபோதும் ஒப்புக் கொள்ளவில்லை.

அதிகார மாற்றம் திடீரென மாற்றப் பெற்றபோது, பிரிட்டிஷ் ஆட்சி ஒழிந்துவிடுமானால் நாட்டில் குழப்பமும், கொலை கொள்ளை போன்ற அராஜகமும்தான் நிலவும் என்று பலர் கருதினர். அவர்கள் நினைத்தது போலவே, அதிகார மாற்றத்திற்குச் சிறிது முன்னும், பின்னரும், மதப் பேயாட்டம், கொலை கொள்ளை ஒருபுறம், 615 சமஸ்தானங்கள் தனிச் " சுதந்திரம் " அடைந்து விட்டதாக விட்ட அறிக்கையின் விளைவாக எழுந்த பிரசினை ஒரு புறம், இதனைப் பயன்படுத்திக் கொள்ள பாகிஸ்தான் செய்த சூழ்ச்சிகள் பல, ஆகிய நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

இத்தனைக்கும் நடுவில் நிலைமை மோசமாகிவிடச் செய்யாமல், பலாத்காரம் சிறிதுமின்றி, ராஜதந்திரத்தாலேயே சாமர்த்தியமாக அனேகமாய் எல்லா சமஸ்தானங்களையும் இந்தியாவுடன் ஐக்கியப் படுத்தியது சரித்திரத்திலே பெருமை படக்கூடிய ஒரு மகத்தான நிகழ்ச்சி என்பதில் ஐயமில்லை.

சமஸ்தான ஐக்கியம் எவ்வாறு எளிதில் கை கூடியது என்பதை விளக்கி இந்திய சர்க்கார் ஒரு 'வெள்ளை அறிக்கை' வெளியிட்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் பாகிஸ்தான் அவிழ்த்துவிட்ட பொய் மூட்டைகளையும், உலக பாதுகாப்புக்கென்று தோன்றிய ஸ்தாபனம் நடத்திய நாடகத்தையும் அம்பலப்படுத்துவதற்கு இவ் அறிக்கை பெரிதும் பயன்படும்.

இதற்குமுன் பிரிட்டனும் சமஸ்தானங்களை ஒன்ருக்க முயன்றது என்னவோ வாஸ்தவம்தான். ஆனல் சமஸ்தானுதிபதிகள், தங்கள் கௌரவத்தையும், ஆதிக்க அதிகார பிருதுகளையும் விட்டுக் கொடுக்க இசையவில்லை; அவர்கள் உதவியைப் பல வகையிலும் நாடியிருந்த பிரிட்டனும் அவர்களைப் பகைத்துக்கொள்ள துணியவில்லை. அத்தகைய 615 சமஸ்தானங்கள்—காஷ்மீர், ஜூனகட், ஹைதராபாத் நீங்கலாக—சுருங்கி 45 சமஸ்தானங்களே இன்று தனித்து நிற்கின்றன. மற்றவை எல்லாம் சர்தார் பட்டேலின் 'ராஜதந்திர' சாமர்த்தியத்தால் ஒன்ருக இணைக்கப் பெற்றுள்ளன. உலக நிலையும், இந்திய சுதந்திர வாழ்வின் எதிரொலியும், இவற்ருல் ஏற்பட்டுள்ள சூழ்நிலையும், தலைவர் பட்டேலின் முயற்சி எளிதில் வெற்றியடைய முக்கிய காரணங்களாய் இருந்தன.

சமஸ்தானுதிபதிகளும், காலப் போக்கை யொட்டிய சூழ் நிலையையும், மக்கள் சுதந்திர உணர்ச்சியையும் நன்குணர்ந்து, விவேகத்துடன் நடந்து கொண்டனர்.

சென்ற ஆண்டில் 219 சமஸ்தானங்கள் அருகிலுள்ள மாகாணங்களில் ஐக்கியமாயின. 22 சமஸ்தானங்கள் இரண்டு யூனிட்டுகளாக ஒன்று சேர்ந்தன. 291 சமஸ்தானங்கள் 7 யூனியன்களாக இணைக்கப் பெற்றன. இவை யனைத்தும், மற்றும் திருவிதாங்கூர், மைசூர் போன்ற பெரிய சமஸ்தானங்களும இந்திய யூனியனில் சேர்ந்து வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, போக்குவரத்து ஆகிய முக்கிய பொறுப்புக்களை இந்திய மத்திய சர்க்காரிடம் ஒப்படைத்துள்ளன.

சமஸ்தான இணைப்பு மட்டுமல்லாது, சமஸ்தானங்களிலெல்லாம் ஜனநாயக ஆட்சிக்குத் திட்டம் வகுத்து

அனேகமாக அதிகாரம் ஜனப்பிரதிநிதிகளிடம் மாற்றப் பெற்றிருப்பது உண்மையில் சுதந்திர இந்தியாவுக்குப் பெருமைதான்.

இந்திய சர்க்காரின் சமஸ்தான இலாகா, சமஸ்தானங்கள் சம்பந்தமாக ஒரு வெள்ளை யறிக்கையை வெளியிட்டிருக்கிறது. இந்த அறிக்கையில் இந்திய சமஸ்தானங்கள் சம்பந்தமாக சர்க்கார் கொள்கை விளக்கப் பெற்றிருக்கிறது. சென்ற ஒரு வருஷத்தில் சமஸ்தானங்களில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தி, அவை சம்பந்தமான முக்கியமான நிகழ்ச்சிகள் முதலிய விவரங்கள் மேற் கூறிய அறிக்கையில் காணப்படுகின்றன.

ரத்தம் சிந்தாத புரட்சி

சென்ற சில மாதங்களில் இந்திய சமஸ்தானங்கள் சம்பந்தமாக மஹத்தான மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதாக வெள்ளை அறிக்கையின் பீடிகையில் குறிப்பிடப் பட்டிருப்பதாவது:—

இந்த மாறுதல் இரு வகைப்படும். துண்டு துண்டாகச் சிதறியிருந்த சமஸ்தானங்களைப் போதுமான பரப்பும் நிர்வாக வசதியும் இருக்கும்படி யூனிட்டுகளாகப் பிரித்தது முதல் நிகழ்ச்சியாகும். இரண்டாவதாக, சமஸ்தானங்களில் பொறுப்பாட்சியை அடிப் படையாகக் கொண்ட ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப் பெற்றது. இந்தப் புரட்சி ரத்தம் சிந்தாமல் ஏற்பட்டது குறிப்பிடத் தகுந்தது. சுதந்திரத்தின் பயனைக் விடுவிக்கப்பட்டுள்ள ஜனநாயக சக்திகள் ஒரு புறமும், மற்றொரு புறம் புதிய சூழ்நிலைமையும் மாறுதல்களையும் துரிதமாக உணர்ந்து கொண்ட சமஸ்தானாதிபதிகள் மற்றொரு

புறமும் வேலை செய்ததால்தான் ரத்தம் சிந்ாமல் இத்தகைய புரட்சி ஏற்பட முடிந்தது.

சரித்திர அரசியல் விவரங்கள்

வெள்ளையறிக்கையில் மொத்தம் நான்கு பாகங்கள் அடங்கியுள்ளன. சமஸ்தானங்களின் பிரசினை சம்பந்தமான சரித்திர பூர்வமான விவரங்களும் அரசியல் விவரங்களும் முதல் இரண்டு பாகங்களில் காணப்படுகின்றன. முதல் பாகத்தில் சமஸ்தானங்களின் புள்ளி விவரங்கள் காணப்படுகின்றன. பிரிட்டிஷ் ஆதிபத்தியத்தின் கீழ் அந்தச் சமஸ்தானங்களின் நிலைமை எவ்வாறு இருந்ததென்பதும் அந்தப் பாகத்தில் கூறப் பெற்றிருக்கிறது. 1935–ம் வருஷ இந்திய அரசாங்கச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டதிலிருந்து 1947-ம் வருஷம் ஜூன் மாதம் 9-ந் தேதி பிரிட்டிஷ் சர்க்கார் அறிக்கை வெளியிடப்பட்டது ஈருகவுள்ள நிகழ்ச்சிகள் இரண்டாவது பாகத்தில் விவரிக்கப் பெற்றிருக்கின்றன. சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் சேருவதற்குக் காரணமாக இருந்த சம்பவங்கள் மூன்றுவது பாகத்தில் கூறப்பெற்றிருக்கின்றன. இறுதியாக சமஸ்தானங்கள் பெரிய கோஷ்டிகளாக ஐக்கியமான விவரம், சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி ஏற்பட்ட வரலாறு முதலியவை நான்காவது பாகத்தில் காணப்படுகின்றன.

இந்திய சமஸ்தானங்களில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி அவை சம்பந்தமான அரசியல் போக்கு முதலியவை பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஹைதராபாத், ஜூனகாட், காஷ்மீர் முதலிய சமஸ்தானங்கள் வெள்ளையறிக்கையில் சேர்க்கப் பெறவில்லை. அவை விசேஷ சம்பவங்களால் பாதிக்கப் பெற்றிருப்பதே இதற்கு காரணம்.

வெள்ளையறிக்கையில் இரு தேசப்படங்கள் காணப் படுகின்றன. சிறிய சமஸ்தானங்கள் அருகிலுள்ள மாகாணங்களுடன் சேருவது, சமஸ்தானங்கள் யூனியன்களாகச் சேருதல் ஆகியவை எவ்வளவு தூரம் ஏற்பட்டிருக்கின்றன என்பது முதல் தேசப்படத்தில் பல விதமான வர்ணங்கள் மூலமாக காட்டப்பெற்றிருக்கின்றது. வெள்ளையறிக்கையில் பல அனுபந்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் சமஸ்தானங்கள் சம்பந்தமான அவசியமான எல்லா விவரங்களும் காணப் படுகின்றன.

புதிய சகாப்தம்

இந்திய சமஸ்தானங்களுக்கும் பழைய பிரிட்டிஷ் ஆதிபத்தியத்திற்குமிடை உறவின் தன்மை சரித்திரம் முதலியவற்றைக் கூறிய பின்னர் இந்திய சர்க்காரின் சமஸ்தான இலாகாவுக்கும் சமஸ்தானங்களுக்குமிடையே பேச்சு வார்த்தைகள் ஆரம்பமானதிலிருந்து இந்திய யூனியனில் சேரச் சம்மதித்து உடன்படிக்கையில் கையொப்பமிட்டது வரையிலுள்ள வரலாறு கூறப்பட்டிருக்கிறது. சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் சேர்ந்தது முதல் கட்டம். அவை பெரிய கோஷ்டிகளாகச் சேர்ந்தது இரண்டாவது கட்டம். பிறகு அவை எவ்வாறு இந்திய அரசியல் அமைப்பில் இணைக்கப்பெற்றன என்பது. இந்த மூன்று நிகழ்ச்சிகளும் அடுத்து அடுத்து எவ்வாறு ஏற்பட்டனவென்பது தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்திய சமஸ்தானங்கள் யூனியனில் சேர்ந்ததிலிருந்து இந்திய சர்க்காருக்கும் சமஸ்தானங்களுக்குமிடையே புதிய நெருங்கிய உறவு ஏற்பட்டது. இந்த உறவு ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்ததாகச் சொல்லாம்.

இவ்வாறு அரசியல் அமைப்பில் இந்திய சர்க்காருக்கும் சமஸ்தானங்களுக்குமிடையே பலமான உறவு ஏற்பட்டதால் தேசத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலைமையை இந்திய சர்க்காராலும் சமஸ்தானங்களாலும் மாகாணங்களாலும் சமாளிக்க முடிந்தது. எல்லோரும் சேர்ந்து பொதுவான விஷயங்களில் ஐக்கியமாகக் கூட்டு நடவடிக்கை எடுக்க முடிந்தது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற சம்பவம்

இந்திய சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் சேர்ந்திருப்பது இந்தியாவின் சரித்திரத்திலேயே மகத்தான சம்பவமாகும். அந்தச் சமஸ்தானங்களின் பழைய நிலைமை எவ்வாறு இருந்தது என்பதைக் கவனித்தால் தான் புதிய அந்தஸ்தின் மாண்பும் முக்கியத்துவமும் விளங்கும். 50 வருஷங்களுக்கு அதிகமாக பிரிட்டிஷ் இந்தியாவின் பொதுஜனத் தலைவர்கள் சம்மந்தப்பட்ட வரை, சமஸ்தானங்கள் 'உரையில் போட்ட ஒரு புஸ்தகம்' போலவே இருந்தன. அரசியல் விஷயங்களில் தலைகாட்ட முடியாதபடி சமஸ்தானங்களைச் சுற்றிலும் பெருஞ் சுவர்கள் (தடை) எழுப்பப்பெற்றிருந்தன. சுதந்திர உணர்ச்சி அங்கு எட்டி பார்க்கமுடியாது. ஜனநாயகம் சமஸ்தானங்களின் எல்லைக்கே வரமுடியாது. பிரிவினை சக்திகளும் வேற்றுமை யுணர்ச்சிகளும் விதைத்து வளர்க்கப் பெற்றன. "ஒருராஜஸ்தான் அல்லது பலராஜஸ்தான்கள் வேண்டும்" என்ற கிளர்ச்சியைத் தூண்டிவிட ஏற்பாடாயிருந்தது. இந்தியா துண்டுபோடப்பட்ட பின்னர் சமஸ்தானங்களும் சிதறிப்போய் இந்திய சர்க்கார் கவிழ்ந்து விடும் என்று எண்ணியவர்களும் உண்டு.

இந்த மகத்தான கஷ்டங்களுக்கிடையே மாகாணங்களும் சமஸ்தானங்களும் கொண்ட சமஷ்டி இந்தியா

என்ற லட்சியம் உருவானது அற்ப சொற்பமான சாதனையல்ல. 100 வருஷங்கள் கழித்து முதல் தடவையாக இந்தியர் ஒரு சட்ட வரம்பிற்குட்பட்ட உறுப்பாக ஐக்கியமாயிற்று

பிறகு சமஸ்தானங்கள் ஒன்று சேர்ந்த பல்வேறு முறைகளைப் பற்றிய பூரா விவரத்தையும் வெள்ளையறிக்கை எடுத்துக் கூறுகிறது. மன்னர்களிடமிருந்து மக்களுக்குப் பூரண அதிகாரத்தையும் மாற்றும் ஒரே பொதுவான கொள்கை எல்லா சமஸ்தானங்கள் விஷயத்திலும் அனுஷ்டிக்கப் பெறவில்லை. மாகாணங்களுடன் சமஸ்தானங்கள் சேர்ந்தது அல்லது அவற்றின் நிர்வாகத்தை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டது ஆகிய இந்த இரண்டு முறைகளைப் பொறுத்த வரையில் மக்களுக்கு அதிகார மாற்றம் தானாகவே நடந்தது. இதன்படி மாகாணத்துடன் சேரும் சமஸ்தானங்கள் நிர்வாக யூனிட்டுகளின் பகுதிகளாகின்றன. இந்த யூனிட்டுகளெல்லாம் மாகாணங்களின் பொதுஜன சர்க்கார்களாலோ அல்லது மத்திய சர்க்காராலோ நிர்வகிக்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட சட்டசபைகளுக்குத் தங்களுடைய பிரதிநிதிகள் விகிதக் கோரிக்கையை இந்தப் பிரதேசங்கள் அனுப்பும்வரை மாகாண நிர்வாகத்துடன், சம்பந்தப்பட்ட சமஸ்தான மக்கள் சேர்ந்து கொள்ள திட்டம் வகுக்கப்பெற்றுள்ளது. மூன்றுவது முறை விஷயத்தில் புதிதாக ஏற்படுத்தப்பெற்ற சமஸ்தானங்களின் அரசியலமைப்புத் திட்டங்களில் மக்களுக்குப் பூரண அதிகாரம் மாற்றப்பட வேண்டுமென்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்தச் சமஸ்தானங்களின் அரசியலைப் பொதுஜன அரசியல் நிர்ணயசபைகள் வகுக்க வேண்டும். புதிய அரசியல் அமுலுக்கு வரும்

வரை பொதுஜன இடைக்கால மந்திரிகள் நிர்வாகத்தை நடத்த வேண்டும்

ஹைதராபாத் ஒன்றுதான் எஞ்சியுள்ளது

சமஸ்தான யூனியன்களில் அல்லது மாகாணங்களில் சேருவது சம்பந்தமாக நடக்கும் இயக்கத்தால் பாதிக்கப்படாத பெரிய சமஸ்தானங்களில் பூரண பொறுப்பாட்சி சர்க்கார் ஏற்படுத்துவதற்கான இயக்கம் துரிதமாக ஆரம்பமாகி விட்டது. ஹைதராபாத் சமஸ்தானத்தைத் தவிர அனேகமாக எல்லாப் பெரிய சமஸ்தானங்களும் எல்லாம் மக்களுக்கு அதிகாரத்தை மாற்றி விட்டன அல்லது கூடிய சீக்கிரமே பூரண பொறுப்பாட்சி சர்க்கார் ஏற்படுத்துவதாக அறிவித்துள்ளன.

பல்வேறு சமஸ்தானங்களின் தொகுதிகளைச் சமஸ்தான இலாகா எந்த முறைகள் மூலம் ஒன்று சேர்ந்துள்ளது என்பது பற்றிய உண்மைத் தகவல்களை வெள்ளையறிக்கை மேற்கண்ட தலைப்பின் கீழ் சுருக்கமாக வெளியிட்டுள்ளது.

சமஸ்தானங்களை ஒன்ருக இணைத்தது சம்பந்தமாக இந்தியசர்க்கார் கீழ்க்காணும் மூன்று விதமான முறைகளைத் தயாரித்து அம் முறைகளையே அங்கீகரித்தது. சமஸ்தானத்தின் விஸ்தீர்ணம் பூகோளரீதியில் அதன் முக்கியத்வம், இன்னும் ஒவ்வொரு சமஸ்தானம் அல்லது சமஸ்தான தொகுதிகள் பற்றிய மற்ற அம்சங்கள் இவ் விஷயத்தில் கவனிக்கப்பெற்றன.

முதல் முறை

முதன் முதலில் அண்டையிலுள்ள சமஸ்தானங்கள் சேர்க்கப்பெற்றன. இம்முறையின் கீழ் 219 சமஸ்தானங்கள் 6 மாகாணங்களுடன் ஐக்கியமாயின.

இந்தச் சமஸ்தானங்களின் மொத்த விஸ்தீரணம் 84,774 சதுர மைல்; ஜனத்தொகை 120 லட்சத்து 18 ஆயிரம்; வருமானம் 541 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய். மாகாணங்களின் பெயர்களும் அம்மாகாணத்துடன் சேர்க்கப்பட்ட சமஸ்தானங்களின் எண்ணிக்கை விவரமும் வருமாறு:

மாகாணம்	சேர்ந்த சமஸ் தானங்களின் எண்ணிக்கை	விஸ்தீரணம் (சதுர மைல்)	ஜனத்தொகை	வருமானம்
ஒரிஸ்ஸா	23	23,637	40 லட்சத்து 46 ஆயிரம்	98 லட்சத்து 74 ஆயிரம்
ம. மா. பிரார்	15	31,749	28 லட்சத்து 34 ஆயிரம்	88 லட்சத்து 31 ஆயிரம்
பீஹார்	2	623	2 லட்சத்து 8 ஆயிரம்	6 லட்சத்து 45 ஆயிரம்
சென்னை	2	1,444	4 லட்சத்து 83 ஆயிரம்	30 லட்சத்து 81 ஆயிரம்
கி. பஞ்சாப்	3	370	80 ஆயிரம்	10 லட்சத்து 38 ஆயிரம்
பம்பாய்	174	26,951	43 லட்சத்து 67 ஆயிரம்	307 லட்சத்து 15 ஆயிரம்
மொத்தம்	219	84,774	120 லட்சத்து 18 ஆயிரம்	541 லட்சத்து 84 ஆயிரம்

2-வது முறை

இரண்டாவது முறையின்படி மத்திய சர்க்கார் நிர்வகத்திலுள்ள பிரதேசங்களாக சமஸ்தானங்கள் ஒன்றாக இணைக்கப்பெற்றன. இம் முறையால் இதுவரை 22 சமஸ்தானங்கள் பாதிக்கப்பட்டு கீழ்க்காணும் இரண்டு யூனிட்டுகளாக்கப் பெற்றன. இந்த இரண்டு யூனிட்டுகளின் மொத்த விஸ்தீரணம் 19061 சதுரமைல்; ஜனத்

தொகை 14 லட்சத்து 37 ஆயிரம். வருமானம் சுமார் 160 லட்சம் ரூபாய். யூனிட்டுகள் விவரம்:

புதிய பிரதேசத்தின் பெயர்	சேர்ந்த சமஸ் தானங்களின் எண்ணிக்கை	விஸ்தீரணம் சதுர மைல்கள்	ஜனத்தொகை லட்சக் கணக்கில்	வருமானம் லட்சக் கணக்கில்
ஹிமாசல் பிரதேஸ்	21	10,600	9 லட்சத்து 36 ஆயிரம்	84 லட்சத்து 56 ஆயிரம்
கட்சு	1	8461	5 லட்சத்து 1 ஆயிரம்	80 லட்சத்து
மொத்தம்	22	19,061	14 லட்சத்து 37 ஆயிரம்	164 லட்சத்து 56 ஆயிரம்

3-வது முறை

மூன்றுவது முறையின்படி சமஸ்தான பிரதேசங்கள் எல்லாம் இணைக்கப்பட்டு நிர்வாகத்திற்கு லாயக்கான பெரிய உறுப்புக்களாக்கப்பெற்றன. இம் முறையின் கீழ் இதுவரை மொத்தம் 1,50,400 சதுர மைல் ஐக்கியப் படுத்தப் பெற்றுள்ளன. மொத்த ஜனத்தொகை 237 லட்சத்து 64 ஆயிரம்; வருமானம் 2819 லட்சத்து 45 ஆயிரம்

நிர்வாகத்திற்கு லாயக்கான பெரிய உறுப்புகளென அங்கீகரிக்கப்பட்டு தனி உறுப்புகளாக நீடித்து இயங்கும் சமஸ்தானங்கள் தனித்தொகுதியாக இருக்கின்றன.

சௌராஷ்டிரம், மத்ஸ்ய, விந்திய பிரதேசம், ராஜஸ்தான், மத்திய பாரத், பாடியாலா கி. பஞ்சாப் சமஸ்தான யூனியன் ஆகிய சமஸ்தான யூனியன்கள் ஏற்படுத்தப் பெற்றன. சமஸ்தான யூனியன்களின் பெயரும் ஜனத்தொகை விஸ்தீரணம் வருமானம் பற்றிய விவரமும் வருமாறு:

சமஸ்தான யூனியன் பெயர்	சேர்ந்த சமஸ்தானங்களின் எண்ணிக்கை	விஸ்தீரணம் (சதுர மைல்கள்)	ஜனத்தொகை	வருமானம்
சௌராஷ்டிரம்	217	31,885	35 லட்சத்து 22 ஆயிரம்	800 லட்சம்
மத்ஸ்ய பிரதேசம்	4	7536	18 லட்சத்து 38 ஆயிரம்	183 லட்சத்து 6 ஆயிரம்
விந்திய பிரதேசம்	35	24,610	35 லட்சத்து 69 ஆயிரம்	243 லட்சத்து 30 ஆயிரம்
ராஜஸ்தான்	10	29,977	42 லட்சத்து 61 ஆயிரம்	316 லட்சத்து 67 ஆயிரம்
மத்திய பாரத்	20	46,273	71 லட்சத்து 50 ஆயிரம்	776 லட்சத்து 42 ஆயிரம்
பாடியாலா, கி. பஞ்சாப் சமஸ்தானங்கள் யூனியன்	8	10,119	34 லட்சத்து 24 ஆயிரம்	500 லட்சம்
மொத்தம்	294	150,400	237 லட்சத்து 64 ஆயிரம்	2819 லட்சத்து 45 ஆயிரம்

பார்லிமெண்டு அறிக்கை

இவ்வருஷம் மார்ச் மாதம் 16மதேதி இந்திய பார்லிமெண்டில் வகுக்கப்பட்ட சர்க்கார் கொள்கை அறிக்கையிலிருந்து ஒரு பகுதியை வெள்ளையறிக்கை மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளது. மன்னர்களும் மக்களும் வேறு விதமாக விரும்பினாலொழிய நிர்வாகத்திற்கு லாயக்கான பெரிய உறுப்புகளென அங்கீகரிக்கப்பட்ட சமஸ்தானங்களுக்கு ஐக்கிய திட்டத்தை அமல் நடத்துவது தங்கள் விருப்பமில்லை என்று இந்திய பார்லிமெண்டில் வெளியிடப்பட்டுள்ள சர்க்கார் அறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

சாந்தூரை இணைக்க யோசனை

வெள்ளையறிக்கையின்படி இன்னும் சில சமஸ்தானங்கள் எவ்வித ஐக்கிய அல்லது இணைப்புத் திட்டத்

தால் பாதிக்கப்படாமலிருக்கின்றன. இந்தச் சமஸ்தானங்களுடைய பூகோள அமைப்புப் பாஷை, நிர்வாக கலாச்சார பொருளாதார விஷயங்களைக் கருத்தில் கொண்டே இவைகளை ஒன்றுக இணைப்பது இந்திய சர்க்காரின் உத்தேசமென வெள்ளையறிக்கை கூறுகிறது. இதுபோன்ற சமஸ்தானங்களுள் சாந்தூர் தென் இந்தியா கிரிஸாம்பூர் (ஐயமர்) திருபுரா காசி குன்று சமஸ்தானங்கள், கூச் பிஹார் ஆகியவைகளைக் குறிப்பிடலாம்.

மன்னர்களின் தேசாபிமான ஒத்துழைப்பு

இந்திய சமஸ்தானங்களின் இந்தப் புதிய ஏற்பாடு உருவாவதற்கு நீண்ட காலமாக பேச்சுவார்த்தைகளும் இடைவிடாத முயற்சியும் சிரமும் ஏற்பட்டுள்ளன. இதனல் ஏற்பட்ட பயன்கள் இந்திய சரித்திரத்தில் ஒரு அழியாத சின்னத்தை ஏற்படுத்தும். மன்னர்களெல்லோரும் தேசாபிமான ஆர்வங்கொண்டு ஒத்துழைத்திருக்காவிடில் மக்களும் மன்னரும் பரஸ்பரம் நன்மையடையும் விதத்தில் இந்த மகத்தான மாறுதல் நடந்திருக்காது. மக்களின் அபிலாஷைகளை மன்னர்கள் உணர்ந்து பெரிய யூனிட்டுகளில் சமஸ்தானங்களை இணையவும், சமுகமாகவும் சமாதானமான ரீதியிலும் மக்களுக்கு அதிகார மாற்றத்தையும் சாத்யமாக்கினர். சுதந்திர ஜனநாயக இந்தியாவை நிர்மாணிப்பதற்குத் தாங்களும் சிற்பிகளாக இருந்ததாக மன்னர்கள் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம். இந்த ஜனநாயக சுதந்திர இந்தியாவில் மாகாண மக்களும் சமஸ்தான பிரஜைகளும் சம சுதந்திரம் பெற்று, சுதந்திர இந்தியாவின் பிரஜைகளாக தோளோடு தோள் நின்று முன்னேறிச் செல்வார்கள்.

மாண்டவி

இ. சந்திரசேகரன்

[அயோத்தியில் பரத மகாராஜாவின் அரண்மனையில் ஓர் அறை. மாண்டவி தேவி தனிமையில் சத்தியவதி என்னும் பாங்கியுடன் மெதுவான குரலில் பேசுகிறுள்.]

சத்தியவதி: அம்மணி விடார்து வருந்துவதில் பயன் என்ன?

மாண்டவி: என் துன்பத்துக்கு முடிவில்லை. என் வாழ்க்கை ஒன்றுக்கும் பிரயோஜனமின்றி வீணுகி விட்டதடி.

சத்: உங்களுக்கு நான் என்ன விதம் தேறுதல் அளிக்க முடியும்? இருந்தாலும் ஒன்றே ஒன்று கூறு வேன். என்னை மன்னிக்கத் தயாராக இருந்தால்தான் அதனையும் சொல்ல முயலுவேன்.

மா: ஈசுவரா! என் பாங்கியும் என்னைச் சந்தேகிக் கின்றுள். என்னையேன் துன்புறுத்துகிருய்?

சத்: பாருங்கள் அம்மணி! சொல்வதற்குள்ளாக வே ஏதேதோ கற்பனை செய்து கொண்டு வருந்து கிறீர்கள். சொல்லிவிட்டால் இன்னும் என்னவிதமாக வெல்லாம் குறை சொல்லுவீர்களோ என்ற பயமே என்னைப் பின்வாங்க வைக்கின்றது.

மா: போதும் சத்தியவதி உன்னுடைய பூர்வ பீடிகைகள். என்ன சொல்ல வந்தாய் என்பதைக் கேட்க என் செவிகளை உன்பால் சாய்த்துக்கொண்டு இதோ தயாராக இருக்கிறேன். கூறடி.

சந்: சரி, சொல்லுகிறேன். உங்கள் மனவேதனை இருக்கவே இருக்கிறது. ஊர்மிளை ராணியின் கதியைச் சற்று நினைத்துப் பாருங்கள். அவர்கள் படவேண்டிய மனக்கஷ்டம் எவ்வளவு அதிகமிருக்க வேண்டும். உங்களுக்காவது கணவர் கண்ணெதிரேயே இருக்கிறார். அவர்களுக்கு யார் ஆறுதலளிக்க இயலும்? யோசித்துப் பாருங்கள். உங்கள் வருத்தத்துக்குக் காரணமெல்லாம் பரத மகாராஜா மகுடம் தரிக்க மாட்டேன் என்ற பிரதிஞைதானே? ஊர்மிளை ராணிக்குப் பதவி இல்லையே என்ற குறையைவிட பதியையே பிரிய நேரிட்டதே, அதை உணர்ந்தீர்களா? பிறர்படும் துன்பங்களை ஆராய்வதுதான் நம் கவலைகளின் கொடுமையைச் சிறிது மறக்க வைக்கும். இல்லாவிடில் அவரவர் வாழ்க்கையில் ஆறுதலுக்கு வழியேது?

மா: பேதை உலகம் நினைப்பதைப் போலல்லவா நீயும் நினைக்கின்றாய்! ஐயோ, ஊர்மிளையினிடம் அநுதாபம் காட்டாதவருமுண்டா இவ்வுலகில்? கௌசல்யா தேவி முதல் ஓர் அற்பப் பாங்கி வரையில் அவள் கதியைக்காண கண் கலங்குகிறார்கள். என்னை மட்டும் எதனால் பாக்கியசாலியாகக் கருதத்தொடங்குகிறார்கள்? என் நிஜமான நிலையை அறியக்கூடிய ஒருவரையும் நான் பெறவில்லையே! எல்லா காலமும் என்னிடமே செலவழிக்கும் உனக்குக்கூட என் மனம் படும்பாடு புரியவில்லையானால், மற்றவர்களைப்பற்றிப் பேசிப் பயனென்னடி.

சந்: தேவி, என்னை மன்னித்து விடுங்கள். ஆனால் உங்களிடம் அநுதாபமில்லாமலா நான் சொல்ல வந்தேன் என்று கருதுகிறீர்கள்? இல்லவே இல்லை. உங்கள் துயரம் கரை காணாததாயினும், ஊர்மிளா தேவியை நினைத்தாவது சிறிது குறைவு படட்டுமே என்றுதான் சொல்லவந்தேன்.

மா: என் துயரம் அழுது அழுதுதான் ஓய வேண்டும். ஆனால் இம்மர்திரி பிறர் துயரத்திற்குச் சமானமானதென நினைக்கப் படுவது ஒன்றுமட்டுமே அதற்கேற்பட்டுள்ள ஒப்பற்ற குறையாகும். கடவுளே! என்னிடம் அநுதாபம் காட்டுபவர்கள் அநுதாபம் என்பது என்ன என்று உணர்ந்து பேசுகிறார்களா, இல்லையா?

சந்: சரி. அம்மணி, இதோ நிறுத்திவிட்டேன் என் பேச்சை. நான் முதலில் மன்னிப்பை வேண்டியே தொடங்கியது இப்பொழுது விளங்குகிறதல்லவா உங்களுக்கு?

மா: மன்னிப்பதா? எதற்கா? மன்னித்து விட்டால் மட்டும் உன் இதயத்தின் ஆழத்தில் பதுங்கி நிற்கும் எண்ணம் மறைந்து விடுமா? நீ நினைப்பதல்லவோ என் வேதனையை வளர்க்கிறது.

சந்: என்னால் செய்யத் தகுந்தவைகளை யெல்லாம் நான் செய்யத் தயார். என்பால் சந்தேகமோ, வருத்தமோ ஒன்றும் உங்களுக்கு வேண்டாம். இது நிச்சயம்.

மா: அப்படியானால் என் அருகில் வா சத்தியவதி. இளவரசர் லட்சுமணன் கானகமேகியதையும், ஊர்மிளை கதியற்றிருப்பதையும் அறிந்து மனமுருகுபவர்கள் எதை ஆதாரமாகக் கொண்டுள்ளார்கள் என்பதை யோசித்தனையா? கண்ணெதிரே இளவரசர் மனைவியை விட்டு காடு சென்றார். மக்கள் முன்னே ஊர்மிளை பதியைப்பிரிந்தவளாய்த் தனித்து நிற்கிறாள். உணர்ச்சிவசம் சிறைபடுபவர்களுக்கு இவ்விதச் சந்தர்ப்பங்கள் போதும் மனங் கரைந்து போவதற்கு. ஆயினும், புருஷன் பக்கத்திலிருப்பினும் அவரது நினைவை அறவே ஒழித்திருக்க வேண்டிய பரிதாப நிலையிலுள்ள பெண்ணைப்பற்றி

யாராவது அறியப் போகிருர்களா? அறியத்தான் அவர்களால் சாமான்யமாக இயலுமா? சொல் பார்ப்போம்.

சந்: புரியவில்லையே அம்மணி; அப்படி எந்தப் பெண்ணின் கதி ஆகிவிட்டது.........? ஒருகால் சீதா தேவியைப் பற்றி பதறுகிறீர்களோ?

மா: அடதெய்வமே! உன்னிடம் இவைகளைச் சொல்ல வந்தேனே! என்னையல்லா பழித்துக் கொள்ள வேண்டும். ஆனல்......உன்னைப் போலவேதான் எல்லோரும் கருதுவார்கள். என் பிறந்த வேளையைத்தான் வெறுக்கிறேன். இல்லாவிடில், குசத்வஜ மகாராஜாவின் குலத்தை விளக்க வந்தவளை, தசரத சக்கரவர்த்தியின் மருமகளாய் வாழ்க்கைப் பட்டவளை, ஏனே அபாக்கியத்திலும் அபாக்கியமான இந்நிலை வந்தடைய வேண்டும்?

சந்: தேவி, விளக்க வேண்டும் சற்று. பரத மகாராஜா சித்திரகூடத்திலிருந்து வந்ததிலிருந்து மனம் மாறி இருப்பதாகச் சொல்லுகிருர்களே, அதைக் குறித்தா வருந்துகிறீர்கள். அவர் மனத்தை யாராவது மாற்றி விட்டார்களா?

மா: அவர் மனத்தையா மாற்றுவது? யாருக்கம்மா அவ்வளவு திறமை இவ்வுலகில்? யாவரையும் தம் வழியில் கொண்டுவரும் மேதையும், வன்மையும் படைத்த இராமபத்திராலேயே முடியவில்லையே இவரிடம். பின் ஏன் தெரிந்தும் தெரியாதவளாய்ப் பேசுகிருய்?

சந்: ஒருகால், பட்டண வாழ்க்கையைக் களைந்து, கிராம வாழ்க்கையை இனிப் பேணப்போவதாய் அரசர் தீர்மானித்ததையா குறிக்கின்றீர்கள்? பின் எது, அம்மாணி?

மா: பாங்கி, உன் அறிவின்மை என்னை மேன் மேலும் ஆத்திரப்படவே செய்கின்றது. புண்ணில்

ஊசியை எடுத்துக் குத்துவது போலல்லவா உன் சொற்கள் என் மனப்புண்ணைக் கிளறுகின்றன. எளிய வாழ்க்கையில் அரசருக்குப் பிரியமாயின், எனக்குமட்டும் இந் நகர நாகரிக வாழ்க்கையில் மோகம் உண்டாகுமா? சீதைக்குக் கணவருடன் காடுகளையெல்லாம் சுற்றிவர அவா யிருக்கலாம், எனக்கு மட்டும் கிராமாந்தரங்களின் இயற்கைக் காட்சியிலும், இன்ப அநுபவங்களிலும் ஆசை ஏற்படாதா? ஏன், சீதைக்குக் கிடைத்த அதிருஷ்டத்தில் சிறிதளவாகிலும் எனக்கும் கிடைத்திருக்கலாகாது?

சந்: அந்தோ, தேவி, எதனால் இப்படி திடீரென்று மாறிவிட்டீர்கள்? சீதாதேவிக்கு அதிருஷ்டமென்றா உண்மையில் நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை. அன்று மைதிலி தேவி மரவுரியுடுக்க வகை தெரியாத நிலையில் தவிக்கவும், இராகவர் அவளது இடையைச் சுற்றித் தம் கைகளாலேயே வல்கலத்தைக் கட்டிவிடவும், 'என் அக்காவின் கதி இவ்வண்ணமாக வேண்டுமா' என்று பின்னால் அச்செய்திகளைக் கேட்டவுடன் என்னைக் கட்டிக்கொண்டு 'கோ'வென்று நீங்கள் கதறியதெல்லாம் இன்னும் என் செவிகளில் ஒலிக்கின்றனவே. கண்ணீரை வடித்து, 'சீதை என் செய்வாள். அவள் மெல்லிய பாதங்கள் நலிவு தெரியாதவைகளாயிற்றே! காட்டில் கல்லும் முள்ளும் துன்புறுத்துமே அவைகளை' என்று அதைரியம் கொண்டதெல்லாம் அவள் அதிருஷ்டசாலி யென்பதையா மெய்ப்பிக்கின்றன?

மா: அடி பெண்ணே. உடலில் புண் உண்டானால் மருந்து உண்டு. உள்ளத்தில் ஏற்பட்டால் எவ்விதம் போக்குவது? சீதையின் அருகில் இராகவன் இருக்குமளவும் அவளுக்கென்னடி குறைவு. பஞ்சணையும்

மஞ்சமும் வேண்டுமோ இன்ப சுகத்திற்கு?...என் இதயம் படும்பாட்டை நினைக்கையில், சீதையின் துக்கம் தாங்கக்கூடியதாய்த் தோன்றுகிறது...ஏன், அவளை அதிருஷ்டசாலி என்றே கூறுவேன். இராகவனுடைய புயங்கள் அவளை அணைத்திடுங்கால் அவளுக்கு வேறு எது வேண்டும்? என்கதி அவ்வாறில்லையே! உலகின் கண் தாரதம்ய மில்லாதவைக்ளே தோன்றுவதில்லை. சந்தோஷம், துக்கம், இரண்டுங்கூட மனத்தின் விளைவுகளல்லவா? பிறரைப் பார்த்து திருப்தி பெறுவதும், நமக்கிருப்பதைப்பற்றி குறை ஏற்படுவதும் இதரர்களுடைய சிரமங்களையோ சிறப்புகளையோ நாம் ஞாபகப்படுத்துவதாலல்லவா? கவனித்தால் உலகில் முழுக் கஷ்டப்படுபவர்களும், நிகரில்லாமல் சந்தோஷமடைபவர்களுமே இருக்க வகையில்லை.

சந்: இப்பொழுது நீங்களே சொல்லுகிறீர்கள். இதையேதான் நானும் முன்பு கூறினேன். ஊர்மிளை தேவியைப்பற்றிச் சிந்தனை செய்தால் உங்கள் இதயம் சற்று ஆறுதல் அடையலாமென்றேன். மறந்தீர்களா அம்மணி?

மா: போடி பாங்கி; உனக்கு இன்னும் என் சிரமம் தெரியவில்லை. இதற்குள் உன் கட்சியை வெற்றிகரமாக்கிக் கொண்டு விட்டாய். கேளடி; ஊர்மிளைக்கு ஏற்பட்ட துக்கத்தை அறிய யாவராலும் இயலும். அதுவே அவளுடைய சிரமத்திற்குச் சிறிது சிறிதாய் ஆறுதலளிக்க வல்லது. சீதையின் நிலையும் முதலில் கஷ்டமெனத் தோன்றினாலும், இராமனுடைய பிரியத்தால் சீக்கிரம் விடிந்துவிடும். "வனங்களுக்கு வருவேன் உம்முடன்" என்று சீதை பிடிவாதம் பிடித்ததை உதாசீனம் செய்தாரா அவ்வுத்தமர்? இல்லை. சீதை இங்கு புஷ்பாசனத்தில் பொன்போர்த்த வண்ணமிருப்பினும்

இராமனுடைய காதல் வலிமையைப் பெருவிட்டால் வீணெனத் தோன்றி இராதா? என் நிலை ஒருவருக்கும் விளங்காதுதான். ஏனெனில் நான் காடு செல்லவில்லை. என் நாதர் அயோத்தியில் இருக்கிறார். ஆனால், ஆனால்...இராமனைவிட ஆயிரமடங்கு திடசித்தம் படைத்த வள்ளல் என் அருகே இருந்தும், என்னுடன் தனிமையை இனி நாடமாட்டார் என்றால் இதைவிட வும் பெண்குலத்திலுதித்த எனக்கு இழிவு வேண் டுமோ?

சந்: என்ன சொன்னீர்கள் அம்மணி! அரசர் தம் முடன் நீங்களிருப்பதை வெறுத்தனரா?

மா: ஆம், சத்தியவதி. அண்ணன் பதினான்கு வருஷங்கள் முனிவேஷத்திலிருப்பதால் தாமும் அக் கோலத்தோடுதான் இருப்பாராம். தம்பி மனைவியை யும் மனைவாழ்க்கையையும் துறந்ததால் தாமும் கொண்ட பெண்ணின் கரத்தைப் பற்றாமல் பதினான்கு ஆண்டுகள் கழிப்பதாய்த் தீர்மானித்துவிட்டார்...நெஞ்சு பொறுக் குதில்லையே! (மூர்ச்சிக்கிறாள்)

சந்: (பரபரப்புடன் தனது புடைவையின் தலைப் பினால் மாண்டவியின் ஆயாசத்தை விசிறிப் போக்கு கிறாள்) அம்மணி, அம்மணி, இதுவோ உங்கள் தந்தை யும் தாயும் ஆசையுடன் உங்களுக்கு மணஞ்செய்து அனுப்பும் பொழுது விரும்பியது!

மா: (மூர்ச்சை தெளிந்து) ஆ! சத்தியவதி!...... என மனம் நிலை தவறியது உண்மை. ஆனால் இனித் தவறாது. சத்தியவதி என்று உனக்கு இட்ட பெயர் அர்த்தத்துடன் இருக்கிறது. நீ கூறிய தவ்வளவும் உண் மையே. என் சுய நலத்தை நாடவேதான் என் ஆறாத் துயரம் என்னை இப்படிச் செய்திருக்கிறது. பிறர் படும் துக்கமும், கவலையும், நமக்கு விளங்குகையில்தான் நம்

சொந்த துக்கங்களைப் பொறுக்க வேண்டிய மன ஆறுதல் ஏற்படும் என்றல்லவா சொன்னாய். வாஸ்தவம். என் அகங்கார மன்றோ ஊர்மிளையைக் காட்டிலும் என் கதியே பரிதவிக்க வேண்டியதென்று நிலைநாட்டத் தொடங்கியது. போகிறது. இப்பொழுதாவது என் புத்தி தெளிந்ததே.

சத்: இல்லை, மகாராணி! நான்தான் தவறுதலாய் விஷயமறியாமல் உளறினேன். உங்களைவிடவும் உலகில் மற்றோர் மனைவிக்கு இந்தச் சங்கடமான சந்தர்ப்பம் ஏற்பட்டிராது என்றுதான் தோன்றுகிறது. ஏனெனில் ஊர்மிளை தேவியின் துயரத்திலும், சீதா தேவியின் வனவாசத்திலும் பலரும் பரிதவிப்பதால் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் உங்கள் இதயத்தை அரிக்கும் புழுவை யார் பார்க்க முடியும்? மலரின் இதழ்களெல்லாம் உதிர்ந்த பிறகல்லவோ புழுவின் வேலையை மனிதர்களின் கண்கள் கண்டறியும். இதை விடவும் பெண் இனத்திற்கோர் இழிவுண்டோ? இனிச் சும்மா இராதேயுங்கள். இதற்கொரு மாற்றைக் கண்டு பிடியுங்கள்; உங்களை நான் வேண்டிக் கொள்ளுகிறேன்.

மா: (நிதானமாய்) என் ஆருயிர் பாங்கி, இல்லை. மாற்றே கிடையாது. என் கணவர் புவியில் தோன்றிய உத்தமர்களுக்கெல்லாம் உத்தமரென்பதை நீ அறியாயா? இராமனே இரண்டு கைகளிலும் ஏந்தித் தந்த ராஜ்ய லட்சுமியை மறுத்த மன்னவரல்லவா அவர்? அவர் மனவுறுதி இனிப் பேதிக்கப்படாத நிலையிலுள்ளது. என்னை நினைத்துத்தான் வருந்துகிறேன். அவரை அறியாது அவரிடம் பழிசாற்றினேன். என்னைப்பற்றி அவர் என்ன நினைப்பரோ? "ஜனகன் தம்பி மகளென்று ஏமாந்து மணந்து விட்டேன். இவ்வளவு சமான்ய நங்கையர் இவள்?' என்றெண்ணித்தானிருப்பார். இல்லாவிடில் என் சாகஸத்தையெல்லாம் பார்த்துப் பிரமித்த

வர், 'மாண்டவி, ஊர்மிளையை நினைத்துப் பார்த்தாயா?' என்று கேட்டிருப்பாரா? ஐயோ, ஊர்மிளையையல்லவா அதற்காக வெறுக்கத்தொடங்கினேன்! வாயற்று நிற்பவளை ஏதோ குறையுள்ளவளாய் மதித்தேன்! இனிச் சும்மா இருப்பது பிசகு.

சத்: என் அரசி, உங்கள் மனம் தான் என்ன? மலை மேலிருந்து ஊற்றுக்கால் வழிந்து கீழே ஓடிவருவதென்னவோ தவிர்க்க இயலாதுதான். ஆயினும், அதன் ஜீவப்பெருக்கு அவனியில் பாய்ந்து அகன்றகன்று விரிவடைவதே போலல்லவா, உங்கள் உண்மை இதயம் முதலில் சிறிது மாசுபடினும் பிற்பாடு தெளிந்து விசாலமாய்த் தோன்றுகிறது! பெருந்தகைமைக் கெல்லாம் புகலிடமாகவல்லவோ திகழ்கின்றீர்கள்!

மா: கிடக்கட்டும் சத்தியவதி. பரத மகாராஜர் பதினான்கு ஆண்டுகள் முடியும்வரை பிரம்மசரியம் வகிப்பதாக பிரதிஞை செய்திருப்பதால், என்னை அங்கீகரிக்காவிடினும் என் தொண்டை மறுப்பதாகவல்ல அவர் விரதம் பூண்டிருப்பது. இதோ இன்றிருந்தே நானும் நோன்பு நோற்பேன். அரசர் காலையில் எழுந்திருக்குமுன், அவர் வைத்துப் பூஜிக்கும் அண்ணலின் பாதுகைகளுக்கு என் கைகள் கொய்த மலர்கொண்டு மாலைகள் சூட்டுவேன். இடையறாது என் அன்பர் நடத்தும் ஒழுக்க வாழ்க்கைக்கு இடுக்கண் ஏதும் ஏற்படாமல் கண்மறைவே நின்று அவரைப் பாதுகாப்பேன். அன்னைகள் மூவரையும் என் பணிகள் பலவகைகளால் மனங்குளிரச் செய்வேன். ஆம், அவ்வுத்தமி ஊர்மிளையின் கண்ணீர் பெருகி விழுவதால் வாடி வதங்கும் அதரங்களில் சொற்கள் வற்றாதபடி என்றும் என்

அன்பைவார்த்து வார்த்து அவளைத் தேற்றுவேன். இது சத்தியம்.

சந்: மண்ணில் தோன்றிய பெண்களில் மாண்டவி தேவியைப் போல் மறைந்த வாழ்க்கையில் மேன்மை யுடனிருந்தவரே இல்லை என்ற வான்புகழ் உங்களைச் சேரும். ஐயமில்லை.

மா: என் தியாகம் உண்மையாகில் அது புகழை வேண்டாது. அன்பு வேறொன்றையும் விரும்பாது. அன்பையே என் கைவிளக்காய் ஏற்றி நான் செல்லும் பாதையின் இருட்டைப்போக்க வைப்பேன். அன்பையே தான் என் காவலன் காலடிகளில் அஞ்சலியாய்ச் சமர்பிப்பேன். அன்பையேதான் என்னைச் சீக்கிரத்தில் மறக்கும் உலகையும் உய்விக்க ஊட்டுவேன்.

அற்புதக் கணக்கு

பெ. நா. அப்புஸ்வாமி

கிளாஸ்கோ சர்வகலாசாலையில் மிக உயர்ந்த வகுப்பில் கணிதத்தில் தேர்ச்சிபெற்ற மாணவர்கள் வரிசை வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள். அந்தச் சர்வ கலா சாலையில் கணித சாஸ்திரப் பேராசிரியர் பிரசங்கம் செய்வதை அவர்கள் மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரென்று பேராசிரியர் கரும்பலகையை நோக்கித் திரும்பினார். அதில் '7 + 8 = ' என்று எழுதினார். எழுதிய பின் இரண்டொரு கணம் அப்படியே நின்றார். அதற்குப் பின்பு, முன்னும் பின்னுமாக நாலைந்து தடவை நடந்தார். அவர் ஏதோ ஒரு விஷயத்தைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கிறார் என்பதை அவருடைய முகம் காட்டிற்று.

பேராசிரியர் என்ன பெரிய கருத்தை வெளியிடப் போகிறாரோ? எதைக் கூறி, நம்முடைய மனத்தைப் பிரமிக்கச் செய்யப் போகிறாரோ? அவர் கூறுவது நமது புத்திக்கு எட்டக்கூடியதாக இருக்குமோ? அல்லது, நமது புத்திக்கு எட்டாத விஷயத்தை, வழக்கம்போல் கூறி நம்மை திகைக்கவைக்கப் போகிறாரோ? என்றெல்லாம் மாணவர்கள் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். சட்டென்று பேராசிரியர் முகத்தில் ஒரு புன்னகை தோன்றிற்று. அவர் அப்போது தீவிரமாக ஆராய்ந்த ஏதோ ஒரு விஷயத்துக்கு விடை கிடைத்து விட்டது என்பது அந்தப் புன்னகையில் தெரிந்தது. சிந்தனையில் ஆழ்ந்து, நெரித்திருந்த புருவங்கள் நெகிழ்ந்து,

தம் நிலை எய்தின. கடுத்த முகம் பிரசன்னமாயிற்று. உடனே பேராசிரியர் கரும்பலகையின் அண்டையில் விரைந்து சென்றார். தாம் '7 × 8 = ' என்று எழுதி யிருந்த பிரச்னைக்கு விடையாக '54' என்று எழுதினார். வகுப்பை நோக்கித் திரும்பினார். பேராசிரியர் '7 × 8 = 54' என்று போட்ட அற்புதப் பெருக்கல் கணக்கைக் கண்ட மாணவர்கள் கல்லென்று சிரித்துப் பத்து நிமிஷம் ஓயாமல் கரகோஷம் செய்தார்கள்.

இப்படிப் பெருக்கல் வாய்பாடு கூடத் தெரியாமல், வகுப்பை திகைக்கச் செய்த பேராசிரியர் யார் தெரியுமா?

* * * *

கெல்வின் நதிக்கரையிலுள்ளது கிளாஸ்கோ நகரத்தின் சர்வகலாசாலை. அதில் சுமார் நூற்றுப் பதினைந்து வருஷத்துக்கு முன், அதாவது 1832-ம் வருஷத்தில், ஒரு பேராசிரியர் உயர்தரக் கலாசாலையில் கணிதசாஸ்திர விஷயங்களைப் பற்றிப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அந்த வகுப்பிலுள்ள மாணவர்கள் அனைவரும் சுமார் இருபது வயதுள்ளவர்கள். அந்த வகுப்பிலே அவர்களிடையே எட்டு வயதுச் சிறுவன் ஒருவனும் ஒரு புறமாக உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அதைக் கண்ட அந்த வகுப்பினர்களில் ஒருவன், 'யார் இந்தக் குழந்தை? இது கலாசாலை வகுப்பென்று தெரியாமல், இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறதே' என்றான்.

அப்பொழுது மற்றொருவன், 'இவனைத் தெரியாதா? இவன்தான் வில்லியம். நமது கணிதப் பேராசிரியர் தாம்ஸனின் இளைய மகன்' என்றான்.

'ஓகோ! அதைப் பற்றிக் கேள்விப்பட்டேன். நமது பேராசிரியர் இங்கு வருவதற்குச் சில காலத்துக்கு முன்

தமது மனைவியை இழந்ததாகக் கேள்வி. தாயில்லாக் குழந்தையை வீட்டில் பார்த்துக் கொள்வதற்கு ஒருவரும் இல்லையென்று இங்கே நமது வகுப்பில் உட்கார வைத்திருக்கிறார் போலிருக்கிறது' என்று சற்றே வருத்தத்தோடும் பரிகாசமாகவும் சொன்னான்.

'வீட்டில் ஆளில்லாவிட்டால், அதற்காக வகுப்பில் கொண்டு உட்கார வைக்கலாமா? நமக்கு அது அவமானமல்லவா?' என்றான் மற்றொரு மாணவன்.

அப்போது அருகிலிருந்த மூன்றாமவன் 'ஆம். இவனை உட்கார்த்துவது நமக்கு அவமானம்தான். ஆனால் நீ சொல்லுகிற முறையில் அன்று. நமது வயதில் பாதிகூட இல்லாத இந்தச் சிறுவன்—இந்தக் குழந்தை என்றே சொல்லவேண்டும்—நமது பேராசிரியரின் பிரசங்கங்களை நம்மைக் காட்டிலும் நன்றாகக் கிரகித்துக் கொள்கிறான். அவன் பொழுதுபோக்குவதற்காக இங்கே வரவில்லை. அறிவை வளர்ப்பதற்காக வந்திருக்கிறான். அவன் வேடிக்கை பார்க்கும் குழந்தையன்று; அறிவை வளர்க்கும் மாணவன்' என்று சொன்னான். அப்போது மற்றவர்கள் இருவரும் அடைந்த வியப்புக்கு அளவில்லை.

இவ்வாறு உயர்தரக் கலாசாலைப் பிரசங்கங்களை எட்டுவயதிலேயே கிரகித்துக்கொள்ளும் திறமை பெற்றிருந்த அவன் தனது பத்தாவது வயதிலேயே மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினான். பன்னிரண்டு வயதேயுள்ள அவன் தமையன் ஜேம்ஸும் அவனோடுகூடவே அந்தப் பரீக்ஷையில் தேறினான்.

மறுவருஷம் அவர்கள் இருவரும் உயர்தரக் கலாசாலையில் சேர்ந்தார்கள். வில்லியம் இயற்கை நூலிலும், கிரேக்க மொழியிலும் முதலாவதாகத் தேறிப்

பரிசு பெற்றான். மறுவருஷம் அவனும் அவன் தமையன் ஜேம்ஸும் கணக்குப் பரீக்ஷையில் முறையே முதலாவதும் இரண்டாவதுமாகத் தேறினார்கள். வகுப்புக்கு உரிய எல்லாப் பரிசுகளையும் பெற்றார்கள். அதன்பிறகு வில்லியம் தர்க்கம், வானசாஸ்திரம், பௌதிகம், கிரேக்க மொழி, முதலிய எல்லாப் பாடங்களிலும் ஏற்படுத்தியிருந்த பரிசுகள் எல்லாவற்றையும் கொள்ளையிட்டான். தன்னைக்காட்டிலும் இரட்டிப்பு மடங்கு வயதுள்ள மாணவர்கள் அனைவரையும் வெட்கித் தலைகுனியச் செய்தான்.

அவனுக்குப் பதினேழு வயதாக இருக்கும்பொழுது அவன் கிளாஸ்கோ சர்வகலாசாலையில் கற்கக்கூடிய எல்லா விஷயங்களையும் கற்றுவிட்டு, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிலுள்ள ஸெண்ட் பீட்டர்ஸ் காலேஜில் சேர்ந்தான். 'பீட்டர்ஹௌஸ்' என்பது இதற்கு மற்றொரு பெயர். அப்பொழுது கிளாஸ்கோ சர்வகலாசாலையில் அவனுடன் படித்த மாணவர்களெல்லாரும் பெருமூச்சு விட்டார்கள். 'நல்லவேளை. ஒருமட்டுக்கு அவன் இங்கு விட்டுப் போய்விட்டான். இனிமேல்தான் நமக்கு ஏதாவது பரிசு கிடைக்க வழி உண்டா என்று பார்க்கவேண்டும்' என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

அவன் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் போய்ச் சேர்ந்து, ஒரு வாரத்துக்கெல்லாம் அவனுடைய அறிவின் புகழ் கலாசாலை எங்கும் பரவிவிட்டது.

'இவன் கணிதப் பரீக்ஷையில் முதலாவதாகத் தேறுவான். ஸீனியர் ராங்கிளராக இவன் ஆவது உறுதி' என்று மற்ற மாணவர்களெல்லாரும் நிச்சயப்படுத்தி விட்டார்கள்.

அந்த இளைஞன் படிப்பில் கருத்தைச் செலுத்துவதோடுமட்டும் திருப்தி அடையவில்லை. ஓடுவதிலும், நீந்துவதிலும், துடுப்பால் படகை ஓட்டுவதிலும்

கருத்துக் கொண்டான். படகோட்டுவதில் முதற் பரிசு பெற்றான். கணிதப் பரீக்ஷையிலும் முதன்மை ஸ்தானம் பெற்றான். ஆனால், ஸீனியர் ரங்ளோராகத் தேர்ந்தெடுக்கும் 'ட்ரைபாஸ்' என்னும் பரீக்ஷையில், அவன் முதன்மை ஸ்தானம் பெறவில்லை. இது ஒருவரும் எதிர் பாராதது. அவன் இரண்டாவது ஸ்தானமே பெற்றான்.

இதற்கு இருகாரணம் கூறிவருகிறார்கள். அது என்னவென்றால்; அவன் மாணவனாயிருக்கும்பொழுதே சில அற்புதமான கணிதத் தேற்றங்களை வெளியிட்டிருந்தான். அந்தத் தேற்றங்களில் சில ட்ரைபாஸ் பரீக்ஷையில் வினாப்பத்திரத்தில் கேட்கப்பட்டன. மற்றத் தேற்றங்களைப் போலவே அவற்றையும் நெட்டுருப் பண்ணியிருந்த பார்க்கின்ஸன் என்னும் மாணவன் அவற்றை அப்படியே விடைப் பத்திரத்தில் ஒப்பித்து எழுதிவிட்டான். ஆனால், அவற்றை இயற்றிய வில்லியமோ தன்னுடைய தேற்றங்களின் அற்புதமான படிகளை மீண்டும் சிந்தித்து, அமைத்து எழுத வேண்டியிருந்தது. இந்தக் காரியத்தில் நேரம் சென்றுவிட்டபடியால், வினாப்பத்திரத்துக்கு அவனால் பூர்த்தியாக விடையளிக்க முடியவில்லை. அதனால் மார்க்குக் குறைந்துவிட்டது. ஆகவேதான் அவன் இரண்டாம் ஸ்தானத்தைப் பெற்றான்.

இவ்வளவு அற்புதமான கலாசாலை வாழ்க்கையுடைய சிறுவனின் பெயர் வில்லியம் தாம்ஸன் என்பது. அக்காலத்திலே இவன் பௌதிகத்திலும், கணிதத்திலும் மகாமேதாவியாக விளங்கினான். பிற்காலத்திலே, இவன் இயற்றிய பல அற்புதமான ஆராய்ச்சிகளின் நிமித்தமாக இவனுக்குப் பிரபுப் பட்டம் அளிக்கப் பட்டது. தான் படித்தும் போதித்தும் வந்த கிளாஸ்கோ நகரின் சர்வகலாசாலையின் அருகே ஓடும் நதியாகிய கெல்வின் நதியைக் கொண்டு இவன் கெல்வின் பிரபு என்று தனக்குப் பெயர் சூட்டிக்கொண்டான்.

இன்பியலும் துன்பியலும்

வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி

கடும் கோடை. வெய்யில் காண்போர் கண்களை எரித்தது. கதிரவன் கிரணங்களில் புல் பூண்டுகளைப் போல் புழுப்பூச்சிகள் கூடப் பொரிந்து கானல் காற்றில் பறந்து கொண்டிருந்தன. ஆதித்தனே அனலை அள்ளி வீசும் யந்திரமாக மாறி விட்டான் போலும். இந்நிலையில் ஒன்றிரண்டு மாதங்கள் எப்படியோ கழிந்து விட்டன.

ஒரு நாள் நடுப்பகல். தாளாவெப்பம்தான். ஆகிலும் மக்களுக்கு ஒருவாறு கோடை பழக்கமாகிவிட்டது. 'பொறுக்க முடியவில்லை; என்ன உஷ்ணம்!' என்று கூறிக் கொண்டிருந்தாலும் அவர் உடல்நிலை இரண்டு மாதப்பழக்கத்தில் ஓரளவு அந்தக் கடும் கோடையையும் பொறுக்கத் தயாராகிவிட்டது. அத்தருணத்தில் கதிரவன் பேரில் ஒரு சிறிய கருமுகில் படர்ந்து கண்டது. பூமியில் அதன் நிழல் படவே மக்கள் மனது பெருமூச்சு விட்டது. இவ்வளவு நாட்களாக 'எட்டாக் கனி; தேவலோகத்தியக் கற்பகமரத்தின் கிளையில் தானாகக் கனிந்த கனி. அது நமக்குக் கிட்டாது' என்று மழையைப்பற்றி எண்ணியிருந்த, மக்கள் இப்பொழுது 'ஒரு மழை பெய்யாதா?' என்று ஆசைப்பட்டனர். அது நியாயம் தானே! ஆதித்தனை மறைத்த அந்த மேகம் வெறும் மேகமா? கரும் மேகமாயிற்றே! முதலில் சிறிதாகத் தோன்றிய அந்த மேகம் ஆகாயத்தில் மேக

படலமாக வேறு பரவி விட்டது. மேலும்-அவர்கள் இது வரையில் அனுபவித்த தாபம் சாமான்யமா? அத்த கைய் தர்பத்தை அனுபவித்தவர் ஒரு மழையை விரும் பினுல் அது எப்படி தவருகும்?

அவர்கள் உள்ளம் உருகிப் பரதவித்து உண்மை யர்க மழைபைய் வேண்டியதால்தர்னே என்னமோ, மழை கொட்டிவிட்டது. மணிக்கணக்காய்ச் சொரிந்தது. ஒரு மழையர்கிலும் உலகமே சிலிர்த்து விட்டது. மாந்தர் அனைவரும் குதூஹலத்துடன் தத்தம் காரியங்களில் ஈடுபட்டனர்.

அப்பொர்ழுது ஒரு மனிதன் ஆகர்யத்தை அண் ணுந்து பார்த்துக்கொண்டு எதையோ ஆராய்ந்து தேடிக் கொண்டிருந்தான். எதை எடுத்தர்லும் ஆராய்ந்து பார்ப்பதே அவன் குணம். அது என்னத்திற்கு? எதை யும் ஆரர்ய்வது சரியல்ல. மழை பெய்தர்ல் பிறகு அந்த மேகம் எங்கே என்று எதற்காக ஆரர்யக் கிளம்ப வேண்டும்? அந்த மேகம் இருந்தால் என்ன? போனுல் தான் என்ன நமக்கு? ஆகவே .வேணும் என்பதை ஆராய வேண்டும். வேண்டர்ம் என்பதை விட்டுவிட வேண்டும். எதை எடுத்தாலும் அந்த மனிதன் ஆராய்ந்து பார்ப்பது தனக்குத்தான் புத்தி வன்மை இருப்பதாக நம்மிடம் நிலை நாட்டுவதுபோல் இருக் கிறது. அது எனக்குப் பிடிக்கவே இல்லை. எனக்குப் பிடிக்காவிட்டால் அவன் தன் ஆரர்ய்ச்சியை நிறுத்து வர்னு? ஆகாயத்திலிருந்து மாரி சொர்ரிந்து பலரை இன்புற வைத்த அந்தக் காரியமேகம் எங்கே என்று தேடிப்பார்த்தான். அந்த மேகத்தின் ஓர் அணுவே னும் அங்கு கர்ணவில்லை. அவன் சிறிது வருத்தத் துடன் என்ன என்னமோ யோர்சிக்கலர்னுன்.

உலகில் மகான்கள் தோன்றுவதும் இப்படித்தானே! எவ்வளவோ தீமைகள் உலகை ஆட்கொண்டிருக்கும். அதன் தாளாத்தாபத்தில் வெம்பித் துன்புறுத மாந்தர் இரார். வெம்பினால் என்ன? வெந்தால்தான் என்ன? ஏன் என்று கேட்கப் போவது யார்? அத்துன்பத்தையாராகிலும் அகற்ற இயன்றால் அல்லவோ கேட்பதற்கு? வீணில் கேட்டுப் பயன் என்ன? மேலும் அவர் அத்துன்பத்தில் சிக்குண்டவராகவே இருப்பார்? அப்பொழுது அவரால் என்ன முடியும்? இது போன்ற சந்தர்ப்பத்தில்தான் ஒரு மகா புருஷன் உதயமாகிறான், அவன் உலகத்தாரோடு உரிமை பாராட்டித் தானும் இன்னல்களுக்கு இடமாகி முடிவில் மக்களின் மீளாத் துயரத்தைத் தீர்த்து வைக்கிறான். மக்களும் அதை நியாயமான கடமை எனக் கருதி இன்புறுகிறார்கள். அந்த இன்ப போதை தெளிந்து நமது இன்னல்களை விலக்கி இன்பம் பகர்ந்தவர் எங்கே என்று தேடிப் பார்ப்பதற்குள் அந்த மகானும் இவ் உலகை விட்டு மேகத்தைப்போல் மறைந்து போயிருப்பார்.

மறைந்த அம்மகானைச் சாதாரண மக்கள் நினையாமல் இருக்கலாம். ஆனால் விசேஷ அறிவு படைத்த மேதாவிகள் அவரைப்பற்றி நினைக்காமலும் அவர் பிரிவைப்பற்றி வருந்தாமலும் இருப்பது அனீதியாகும். அனைவரும் மறைவது இயற்கையாகிலும் இன்றியமையாத உதவி புரிந்து சென்ற உத்தமனை நினையாமல் இருப்பது எவ்விதம் தகும்?

அழிவிற்குப் புகலிடமான இந்தப் பூவுலகில் ஊன்றிப் பார்த்தால் எவ்வளவோ பொருள்களின் பிரிவைப் பற்றி நாம் வருந்த வேண்டியது உண்டு என்பது விளங்கும். அவைகளால் ஏற்படும் உதவியை நாம் மனமார

உணர்ந்திருந்தால் அவைகளின் பிரிவைப்பற்றி அதிகமாக வருந்துவோம்.

ஒரு வனஸ்பதியை எடுத்துக் கொள்வோம். அது நமக்காகவே முளைத்துச் செடியாகி மரமாகிப் பூத்துக் காய்த்துப் பழுத்துக் கடைசியில் மண்ணாய்ப் போகிறது. அதன் இலை, குச்சி, கொம்பு, அடிமரம் முதலிய அனைத்தும் பிறருக்கே உதவுகின்றன. கொடிய வெய்யிலைத் தன் சிரத்தால் தாங்கிக் குளிர்ந்த நிழலைப் பிறருக்குக் கொடுக்கும் பெருந்தன்மை ஒன்றே போதும், அதைப் போற்றிப் புகழ்வதற்கு. அந்த மரம் கூட ஒருநாள் காற்றில் சாய்ந்து விட்டால் நாம் அதைச் சாதாரணமாகக் கருதிச் செல்லுகிறோம். உண்மையை ஆராய்ந்து பார்க்குமளவில் நமக்கு உதவியளித்த மகா புருஷனை விட அந்த வனஸ்பதி எந்த விதத்திலும் குறைந்ததல்ல என்பது வெளியாகும்.

மரம் வரையில் போவானேன்? ஒரு சிறிய மலரை எடுத்துக் கொள்வோம். அது இருக்கும் வரையில் தன்னால் இயன்ற அளவு பிறரை மகிழ வைக்கிறது. கவர்ச்சியளிக்கும் காக்ஷி. கண்ணைக் கவரும் நிறம். மனதை மயக்கும் மணம். இத்தனையும் அந்த மலருக்கு எதற்கு? நம்மை இன்புறச் செய்யத்தானே. அதுதான் சுய நலமற்றதாயிற்றே! அந்த மலரும் ஒரு யாமத்திற்குப் பிறகு வாடித் துவண்டு பார்ப்போர் பரிதபிக்கும் நிலையை அடைந்து விடுகிறது. உலகத்தின் இயல்பே இப்படித்தான். ஒரு மகா நதிகூடப் பல்லாயிரம் கிராமங்களைச் செழிப்புடன் வளர்த்துப் பிறகு உருத் தெரியாமல் பூமியிலேயே மறைந்து விடுகிறது. அல்லது அந்தச் சமுத்திரத்தில், குடிக்கவும் உதவாத தண்ணீரில் மறைந்து விடுகிறது. ஆகவே இவ்வுலகில் வாழும் வரையில் வாழ்ந்து விட்டுப் பிறகு மண்ணோடு மண்ணாய்ப் போக

வேண்டியதுதான். வாழ்நாளில் பிறருக்கு உதவியாக வாழ்ந்தால் நம்மை நமக்குப் பிறகு பலர் போற்றக் கூடும். சிலரை அதிர்ஷ்டவசத்தால் வாழும் பொழுதே புகழ்ந்தாலும் புகழலாம். நாம் உலகில் கண் கூடாகக் காணும் விஷயம் இதுவே.

கவிஞர்கள் உலக இயல்பை ஒட்டித்தானே இலக்கியம் எழுதுகிறார்கள். ஒரு நாயகனை எடுத்துக் கொண்டால் அவன் தனது வாழ்நாளில் பிறருக்கு உதவி செய்யவோ அல்லது தன்னுடைய நற்குணங்களை வளர்க்கவோ பாடுபடுவான். அதற்காகப் பல இன்னல்களுக்கு ஆளாக நேரிட்டாலும் பொருட்டாக்கமாட்டான். அவன் விடா முயற்சியுடன் முயன்று வந்தாலும் கூட உலகப் போக்குப்படி இறந்துதானே ஆகவேண்டும்? அப்பொழுது அவர் சரித்திரத்தை நாடகத்திலோ இசையிலோ இணைத்துக் காட்டும் கவிஞனும் அப்படித்தானே காட்டவேண்டும்? உலக இயல்பு ஒன்றிருக்க வேறு விதமாக இலக்கியத்தில் எழுதினால் ரசிகர்கள் புறக்கணிக்காமல் என்ன செய்வர்? மனிதனுக்கு நான்கு கால்களையும், மாட்டிற்கு முதுகினால் நடக்கும் இயல்பையும் ஒருவன் இலக்கியத்தில் சிருஷ்டித்தால் அது படிப்பவர் மனதிற்கு ஒத்திருக்காது என்பது நிச்சயம். ஆகவே இலக்கியத்தில் மனக் கற்பனைக்கு இடமிருப்பினும் அதை உலக இயல்பிற்கு மாறாக உபயோகிப்பது சரியல்ல என்றுதான் மேதாவிகள் கருதுவர். இந்த உண்மையை ஏற்று நடத்துவதில் மேலைநாடு என்றும் கீழ்நாடு என்றும் வேற்றுமை இல்லை. எல்லோரும் இக்கருத்தை ஒரே மனதாக ஒப்புகிறார். கீழ்நாட்டுப் பிரமாணியாகிற பரதமாமுனிவரும் தனது நாட்டிய சாஸ்திரத்தில் 'உலகத்தோர் சரிதத்தை நடிப்பது தான் நாட்டியம்' என்று கூறியிருக்கிறார். இது நாட்டியத்திற்கு மட்டுமல்ல. எல்லா இலக்கியங்களுக்கும் ஒரு

சிறந்த லக்ஷணமாகும். ஆகவே அம்முறையை ஒட்டி எழுதுவதே இலக்கியத்திற்குச் சிறப்பைக் கொடுக்கும். ஆகையினால் துன்பியிலாக இலக்கியங்களை அமைப்பது உலக இயல்பை ஒட்டியதாகும். உலகப் பொருள் அனைத்தும் அழிந்து கொண்டே இருக்கும்பொழுது நம் நாடக நாயகன் மட்டும் சாகாவரம் பெற்றவன் போல் என்றும் சுகமாய் வாழ்ந்திருப்பதாகப் படிப்போரை நம்பச் செய்ய முயல்வது எவ்வளவு மதியீனம்? இதை முதலில் நாம் ஒத்துக் கொண்டால் துன்பியலைப் பல கவிஞர் கையாளுவதில் உள்ள பல விசேஷங்களும் எளிதில் புலப்படும்.

ஒரு வீரன் விசேஷ இயல்பு கொண்டவன் வீரமும் அன்பும் அவனிடம் ஒருங்கே குடிக்கொண்டிருக்கும். ஆற்றலும் அமைதியும் அவனிடம் பிணைந்து கிடக்கும். நன்மையைக் கண்டால் அவனை அறியாமலே அவன் மனம் தாவிச் செல்லும். தீமையைக் கண்டால் அவன் உணர்ச்சி நெருப்பாய் ஜ்வலித்து அதைச் சுட்டுச் சாம்பலாக்கி விடும். இப்படி ஒருவன் இருந்தால் அவனைப் பலர் அண்டுவதும் அவன் மூலமாகப் பல நல்லகாரியங்களைப் பயன் படுத்த விரும்புவதும் சகஜம் அப்படியே பல்லாயிரம் மக்கள் அவனை நம்பிக் காத்திருக்கையில் அவ் இளம் காளை எதிர்பாரத முறையில் உயிர் விட நேர்ந்தால் அது பெரிய துக்ககரமான சம்பவமல்லவா? அதை அறிந்த எவன் மனம் தான் வருந்தாது? இப்படியே ஒரு நாயகன் வரலாற்றை ஒரு நாடகத்தில் ஒரு கவிஞன் பதித்து விட்டால் அதுவே உண்மைத் துன்பியல்.

துன்பியலுக்கேற்ற சம்பவங்கள்தாம் உலகில் அதிகமாக நிகழுகின்றன. பலர் ஆற்றலுடன் நல்ல காரியங்களைச் செய்யத் தொடங்குவதும், மனிதர்களால்

ஏற்படும் இடையூறுகளை விடா முயற்சியுடன் விலக்கி முன்னேறுவதும், முடிவில் வெண்ணை திரண்டுவரும் சமயத்தில் தாழியை உடைப்பது போல் தெய்வம் அவர்களை மீளாத்துன்பத்தில் ஆழ்த்துவதும் எல்லாம் நாம் வாழ்க்கையில் பார்த்து வரும் விஷயம். இதை வைத்து இலக்கியத்தைச் சித்திரிப்பதிலேயே துன்பியல் இயற்றுபவரின் மனம் சென்றிருப்பதை அறிவது கஷ்டமல்ல. ஆனால் சிலமனிதர்கள் தெய்வ சோதனையையும் கடந்து வெற்றி அடைவதை உலகத்தோர் மறுக்க முன் வரார். அத்தகைய வெற்றி வீரர்களும் மக்கள் கண்களில் படாமலில்லை. நாம முன் கூறிய தர்மப் போருக்குப் போனவர் அனைவரும் தெய்வ வசப்பட்டு மாளத்தான் செய்கிறார்கள் என்றிருந்தால் மாந்தர் அவ்வழியே செல்ல எப்படித் துணிவார்கள்?

யுத்தம் என்றால் உயிர் தப்புவது கஷ்டம் என்பதை அனைவரும் உணர்வர். ஆகிலும் எவனாகிலும் ஒருவன் வெற்றி சூடித்திரும்புவான். அவன் சூடும் வெற்றி கோடி மக்கள் இறப்பதிலும் மேல் என்பதை உணர்ந்துதான் வீரர் சமர்த்திற்குத் துணிந்து செல்லுகிறார்கள். போரில் கோடானு கோடி மக்கள் இறப்பதில் நமக்கும் சந்தேகமில்லை. ஒருவன் வெற்றி சூடுவது நிச்சயம் என்பதையும் நாம் அறிவோம். ஆகவே அந்த வெற்றி வீரனைப் போற்றும் நாம் கோடிக்கணக்கில் மாண்டவர்களைப் பொருட்டாக்குவதில்லை. அவ்விதமே உலகத்தில் பெரிய காரியத்தை நிலைநாட்ட வல்லவர்களில் பல்லாயிரம் பேர் தைவவசப்பட்டு இறப்பினும் ஒருவன் வெற்றியுடன் முன்னுக்கு வந்தால் அதைப் போற்றுவதும் சகஜம் தானே? சகஜம் மட்டுமல்ல; நியாயம் என்றுகூடச் சொல்ல வேண்டும். அந்த வீரனுடைய சரித்திரத்தை இலக்கியத்தில் அமைக்க வேண்டும் என்று இன்பியல் இலக்கியம் இயற்றுவோர் நினைப்பதில் என்ன தவறு?

இந்த நுட்பத்தைக் கீழ்நாட்டுக் கவிஞர் மட்டும் அறிந்திருப்பதாக எண்ண வேண்டாம். மேலே நாட்டுக் கவிக்ஞரும் அறிவார்கள். அதனலேயே பல துன்பியல் இலக்கியங்களை இயற்றிப் புகழை நிலைநாட்டியவர்கூட இன்பியலான நூல்களையும் செய்துள்ளார். ஆகிலும் துன்பியல் நிகழ்ச்சிகள் உலகத்தில் வெகுவாகப் பரவிக் கிடக்க இன்பியலை மட்டும் வைத்து இலக்கியங்களை இயற்ற ஏன் பாரத நாட்டு மக்கள் முற்பட்டார்கள்? இதைத்தான் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது. துன்பியல் அல்லவா உலக இயல்பு?

இயல்பை வைத்து இலக்கியம் அமைக்கவேண்டும் என்று எளிதில் கூறி விடலாம். அந்த இயல்பைத் தீர்மானிப்பதுதான் கஷ்டம். அவரவர்கள் அறிவிற்கும் அறியும் திறமைக்கும் ஏற்றபடியே அவரவர்கள் உலக இயல்பை நிர்ணயிக்கிறார்கள். ஒருவன் தனது இலக்கிய நூலில் தெய்வத்தைப்பற்றிக் கூறிவிட்டால் அது இயல்பிற்கு மாறானது என்று நாம் கருதுகிறோம். நாம் அந்தத் தெய்வத்தைக் காணவில்லை அல்லவா? தெய்வம் ஒன்றிருப்பதாக நம்பவுமில்லை. ஆகவே தெய்வத்தைப் பற்றிக் கூறுவது நாம் கண்ட இயல்பிற்கு மாறாகத் தோன்றுகிறது. ஆனால் காந்தியடிகள் அந்த இலக்கியத்தைப் பார்த்தால் இயல்பிற்கு மாறுபட்டதாகக் கருதமாட்டார்கள். அந்தத் தெய்வத்தைத் தான் நேரில் பார்க்காவிட்டாலும் பார்த்ததாக்க் கூறும் முனிவரை அவர் நம்புவதாகச் சொல்லுகிறார். மேலும் அந்தத் தெய்வத்தின் செயல்களை அவர் நேரில் பார்ப்பதாகக் குறிப்பிடுகிறார். தெய்வமில்லாத இடமில்லை, அதை மறுப்பது எப்படி என்று அடிகள் கருதுவதுடன் மறுப்பவருக்கு, மிகவும் தெளிவாகத் தென்படும் தெய்வச்செயல்கள் எப்படி புலப்படாமல் இருக்கின்றன

என்று ஓரளவு வியப்பையும் அடைவார்கள். அடி களுக்கும் முந்திய மகரிஷிகளைக் கேட்டால் தெய்வத் தைக் காண்பதும் நேரில் பேசுவதும் எல்லாம் சர்வ சாதாரணமான விஷயம் என்று எளிதில் கூறிவிடுவர். இதெல்லாம் அவரவர் புத்தி நிலையையும் பார்க்கும் திறமையையும் பொறுத்த இயல்பல்லவா?

இப்படியே ஒரு விஞ்ஞானியை எடுத்துக் கொள் வோம். அவர் தமது ஆராய்ச்சியின் திறமையால் அறிந்தபொருளை நாம் காண முடியாது. அவர் தாம் கண்ட பொருள்களையும் அவற்றின் குணாதிசயங்களையும் வைத்துக் கொண்டே உலகஇயல்பைக் காண்பார். நம்மைப் போன்ற சாதாரண மனிதன் விஞ்ஞானி கண்ட நுட்பமான பொருளும் அதன் குணாதிசயங் களும் இல்லாமலேயே உலக இயல்பைக் காண்பான். இப்படி பார்த்துக் கொண்டே போனால் இயல்பு என் பதைத் தீர்மானிப்பது எளிதல்ல என்பது விளங்கும். இப்படி இருக்கும் பொழுது அவரவர்களுடைய அற்ப அறிவைச் சிறந்தது எனச் சாதிக்க முற்படாமல் தான் தோன்றித்தனத்தைக் கைவிட்டு உண்மையைக் கண்டறிந்த மேதாவி கூறுவதை நம்பி இயல்பைத் தீர் மானிப்பது தகுதியாகும்.

மேதாவிகளிலும் ஏற்றத் தாழ்வு இருக்கலாம். ஆகிலும் உலகத்தின் அடிப்படையான தத்துவத்தைத் தாம் கண்டு தீர்மானித்து அதை அறியாதவர்களையும் யுக்தியால் நம்பச் செய்பவரே சிறந்த மேதாவி எனத் தீர்மானித்துக் கொள்ளலாம். உலகத்தார் அனைவரை யும் அவரால் நம்பச் செய்ய முடியாமல் இருக்கலாம். ஆகிலும் ஒரு மாபெரும் கூட்டத்தாரை நம்பச் செய்து அவர்களுக்கு அந்தத் தத்துவத்தைக் காணும் முறையை உபதேசித்து அதன் படி நடக்கச் செய்து அதை

நேரில் காட்டியும் கொடுக்கிறார் அல்லவா? அவரைச் சிறந்த மேதாவி என்று கூறுவதில் என்ன தவறு? அந்த மேதாவி உலகைப் பற்றிக் கூறுவதுதான் உண்மையான இயல்பாகும். மற்றவர் கூறுவது யானையைக் கண்ட குருடர்கள் கூறும் விவரத்தைப் போன்றது தான். ஆகவே முன் கூறிய மேதாவிகள் கூறிய உலக இயல்பை வைத்தே நம் நாட்டுக் கவிஞர்கள் இன்பியல்களை இயற்றினார்கள் என்றால் அதில் குறை என்ன இருக்கிறது?

ஒவ்வொருவரும் பிறப்பதே அழிவற்ற ஆத்மாவின் விடுதலைக்காக. கோடிக்கணக்கில் ஜன்மங்கள் எடுத்தாலும் முடிவில் மோக்ஷத்தை அடைந்தே தீர வேண்டும். இது நமது தேசத்து மேதாவிகள் கண்டறிந்த உண்மை. ஒருவன் இந்த ஜன்மத்தில் ஆத்மாவை அறிந்துகொள்ள விடாமுயற்சி செய்து நடுவில் இறந்தால் கூட அது மறு பிறப்பில் அளவிற்கு ஏற்றபடி பயன் அளிக்கும். ஆகவே அதற்கு மேல் அவன் அந்த ஜன்மத்தில் முயற்சித்தால் போதும்.

முன் ஜன்ம முயற்சி தொடர்வது ஆத்மவிஷயத்தில் மட்டும்தான் என்று எண்ணவேண்டாம். எந்த முயற்சியும் இந்த ஜன்மத்தில் பயனளிக்க வல்லதாக இல்லாவிட்டால் மறுபிறப்பிலும் தொடர்ந்து வரும் என்பது மேதாவிகள் கண்ட விஷயம். அது உண்மையானதினாலேயே சிலர் பிறக்கும் பொழுதே மேலான சங்கீத ஞானத்துடன் பிறக்கிறார்கள். சிலர் கணிதத்தில் தேர்ச்சியுடனே தோன்றுகிறார்கள். இந்தத் தொடர்பு எல்லா விஷயங்களிலும் உள்ள முயற்சிக்கும் உண்டு. ஆகவே ஒரு நாயகன் இந்தப் பிறப்பில் ஒரு உயர்ந்த லக்ஷ்யத்தை அடையப்படாதபாடும் பட்டு பயனை அடையாமல் இறக்க நேர்ந்தால் மறுபிறப்பில் அடைவது நிச்சய

மல்லவா? 'செய்த கர்மா வீண்போகாது' என்று புகட்டும் கீதையும் இந்தக் கருத்தைத்தானே விளக்கிக் காட்டு கிறது? இவ்விதம் பயனை அடைவது நிச்சயமாக இருக் கும்பொழுது லக்ஷ்யத்தை அடையாமல் அந்த நாயகன் உயிர் துறந்தான் என்று இலக்கியத்தில் காட்டி நம்மைப் பரிதபிக்க வைப்பது எப்படி இயல்பிற்கு இசைந்ததா கும்? நாயகன் இறப்பதில் நமக்குப் பரிதாபமில்லை, அவன் பட்டபாட்டிற்குப் பயனில்லாமல் போவதில் தான் நமக்கு வருத்தம். அந்தப்பயன் நிச்சயமானால் அதை நமக்கு இல்லை என நிரூபித்தல் எப்படி சரி யாகும்?

மேலும் சில கவிஞர்கள் கதாநாயகன் தனது லக்ஷ் யத்தை இதே ஜன்மத்தில் அடைவதாக இருந்தாலும் படிப்போர் மனதை இளகவைப்பதே இலக்கியத்தின் ரகசியம் எனக் கருதி அந்த நாயகனைத் தம் நூலில் இறக்கச் செய்கிறார்கள். ஆகவே தமது இலக்கியத்தை ரசிக்கச் செய்யத் துன்பியலை ஒரு தந்திரமாகவே கையா ண்டிருக்கிறார்கள் என்றாலும் மிகையாகாது. துன்பியல் இலக்கியங்களில் சாதாரண மக்கள்கூட மனமுருகி ரசித்துவிடுவார்கள் அல்லவா?

இலக்கியத்தில் ரசித்தல்தான் முக்கிய அம்சம் என்றிருந்தால் அதற்காகத் துன்பியலைக் கையாளுவ தில் தவறில்லை. ஆனால் படிப்பவனை ரசிக்க வைத்து அதன் மூலமாக நல்லொழுக்கத்தையும் தத்துவத்தை யும் போதிக்க வேண்டும் என்று கொள்கையானால் அதற் குத் துன்பியலாகிய கதை எவ்விதம் உதவும்? கவி ஞன் போதிக்க எண்ணிய நல்லொழுக்கத்தையோ தத்துவத்தையோ கடைபிடித்ததின் காரணத்தினு லேயே அன்றோ அந்த நாயகன் உயிர் துறக்கிறான். அதை அறிந்த மற்றவருக்கு எவ்விதம் அந்த வழியில் விருப்பம் ஏற்படும்?

"தர்மமே ஜயிக்கும். சுதர்ஞயகன் தர்மத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவதால் அவன் ஜயம் அடையத் தான் வேண்டும் என்று நம் நாட்டு மக்களுக்கு மூட நம்பிக்கை. 'அந்த தர்மம் ஏன் ஜயிக்கவேண்டும்?' என்று கேட்டால் பதில் இல்லை." இப்படி எல்லாம் நம் நாட்டில் பிறந்து வளர்ந்த சில இலக்கிய விமர்சகர்கள் கேட்கிருர்கள். ஆனால் நம் நாட்டின் வளம் அவர் மனதில் ஊறவில்லை என்பதற்கு இந்தக் கேள்வியே சிறந்த அத்தாக்ஷியாகும்.

தர்மம் என்ருல் ஆத்மா எனப் பொருள். அதுவே யாவற்றையும் தாங்கி நிற்கிறது. அதற்கு அழிவு கிடையாது. மற்றவை அழிவுடையவை. ஜயிக்கும் என்பதற்கு எஞ்சி நின்று துலங்கும் என்று பொருள். எத்தகைய நிகழ்ச்சிகள் நடந்தாலும் எது அழியாமல் மிகுதியாய் நிற்கிறதோ அதற்குத்தான் ஜயம் என்று நாம் கூறுகிறோம். ஆகவே தர்மமே ஜயிக்கும் என்பதற்கு உலகம் முழுவதும் அழிந்தாலும் தர்மமாகிற ஆத்மா தான் எஞ்சி நிற்கும் என்று பொருள்.

முன் கூறிய பொருளை மனத்தில் வைத்துக் கொண்டால் பிறகு எங்கெல்லாம் அழிவுகாண்கிறதோ அதெல்லாம் அதர்மம், தர்மத்தைக் காட்டிலும் வேறு என்றும், எங்கு சிறிதளவாவது அழியாத்தன்மை தென்படுகிறதோ அது தர்மம் என்றும் ஆத்மா என்றும் அறியலாம். நிலை என்பது ஆத்மாவின், தர்மத்தின் தன்மை. ஆகையால் சிறிதளவு நிலையும் அதன் ஒளிதான் என்றே ஏற்கவேண்டும். அவ்விதமே அழிவு அதர்மத்தின், அனாத்மாவின் குணம். ஆகவே நிலைப்பதுதான் தர்மம் என்ருல் தர்மம் ஜயிக்கும் என்பதில் என்ன தவறு?

சென்ற உலக மகாயுத்தத்தில் ஜர்மானியர் எவ்வளவோ நல்லவர்களாக இருந்திருக்கலாம். ஆங்கிலேயர்

கெட்டவர்களாகவும் இருந்திருக்கலாம். எப்படி இருந்தாலும் ஜர்மானியரிடம் அழிவு என்னும் தோல்வி, அதர்மம் ஏற்பட்டு விட்டதால் அவரிடம் தர்மம் என்னும் ஈசுவரத் தன்மை குடிகொள்ளவில்லை. ஆங்கிலேயரிடம் அது இருந்ததால் ஜயம் அவருடையதாகி விட்டது. இந்தக் கருத்தை நம் நாட்டுப் படிப்பில்லாத பாமரர் பேசும் பேச்சில் கூடக் காணலாம். 'அவர் பொல்லாதவராக இருந்தால் என்ன? ஈசுவரன் அவர் பங்கில் இருந்ததால் ஜயித்தார்கள்' என்று நம் நாட்டுச் சாதாரண மக்கள் கூறுவர். ஆகவே தர்மம் ஜயிக்கும் என்பதற்கு ஆத்மா அழிவற்றது, அதை அடைய படும்பாடு வீணாகாது. அப்பாடு பத்து ஜன்மங்களில் தொடர்ந்தாவது பயனை அளிக்கத்தான் செய்யும் என்ற கருத்து ஏற்படுகிறது.

அந்தக் கருத்தைக் கடைப்பிடித்து பல ஜன்மங்களைக் காட்டுவது இலக்கியத்தில் ஒரு வெறுப்பை உண்டாக்கும் எனக்கருத இடமுண்டு. ஒரே ஜன்மத்தில் சிலர் பயன் அடைவதும் அனுபவத்திற்குப் புறம்பாக இல்லை. ஆதலால் கடவுளைக் கொண்டு வந்தோ முனிவரைக் கொண்டு வந்தோ நாயகனின் முயற்சியைப் பயன் அடையச் செய்கிறார்கள். ஆகவே இன்பியலில்தான் நம் நாட்டு மேதாவிகள் கண்டறிந்த உலக இயல்பாக இருக்கிறது என்று ஏற்படுவதால் நம் நாட்டுக் கவிஞர்கள் இன்பியலாகவே காவியங்கள் அனைத்தையும் எழுதியிருக்கிறார்கள் போலும்.

எரிசக்தியும் வெடிசக்தியும்

ஆர். கிருஷ்ணமூர்த்தி

நாம் பொருள்களை எரித்து உஷ்ணம், வெளிச்சம் ஆகிய சக்திகளைப் பெறுகிறோம். சக்தியைப் பெறுவதற்கு எரிபொருள்களாக உபயோகிக்கப் படுபவை விறகு, எண்ணெய்கள், வாயுக்கள் முதலியன. இவற்றிலுள்ள சக்தி இவைகளுக்கு எங்கிருந்து கிடைத்தது? இவற்றில் சக்தி முன்பே பதியவைக்கப்பட்டுளது. அது பல்லாயிர வருடங்களுக்கு முன்பே இவற்றில் பதிய வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. இச்சக்தியை உறைந்த சக்தி (Frozen energy) என்று கூறலாம்.

உதாரணமாக மீதேன் (methane) என்னும் வாயுவை எடுத்துக்கொள்வோம். இதில் ஒரு கரி அணுவுடன் நான்கு ஜலவாயு அணுக்கள் சேர்ந்து ஒரு மூலகம் (Molecule) ஆகிறது. இவ்வணுக்கள் இவ்வாறு சேருவதற்கு ஓரளவு சக்தி முதலில் பிரயோகிக்கப் பட்டிருக்க வேண்டும். இல்லையேல் அவை சேர முடியாது. இதுபோலவே மற்ற எரிபொருள்களிலும். அப்படி இவற்றில் முதலில் பிரயோகிக்கப்பட்ட சக்தி எது? எல்லாத் தாவரங்களையும், பொதுவாக எல்லா உயிர்களையும் வளரச் செய்யும் சக்தி எது? அதுதான் சூரிய வெளிச்சம். இதுவே எல்லாவற்றிற்கும் மூல சக்தி. சூரியனே உலக சக்தியின் மூலம். அதன் சக்தியால்தான் ஆதியில் வெவ்வேறு அணுக்கள் ஒன்று சேர்ந்து சேர்க்கைப் பொருளாக் (Compounds) மாறின.

சூரியன்தான் எல்லாப் பொருள்களிலுமுள்ள சக்திக்கு மூலம். சூரியனிடமிருந்து வரும் சக்தியின் அளவை அறிந்தால் இக் கூற்று எவ்வளவு உண்மை என்று விளங்கும்.

பூமியின்மீது ஒவ்வொரு சதுர கஜத்திற்கும் சூரியன் 1·5 குதிரைச் சக்தி அளிக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் சூரியனிடமிருந்து 25 கோடி டன் எடையுள்ள சக்தி வெளி வருகிறது. இந்தப் பிரம்மாண்டமான சக்தியால் தான் உலகிலும் சூரியனைச் சுற்றி வரும் மற்ற கிரகங் களிலும் உள்ள உயிர்கள் தோன்றி வளர்ந்து உயிருடன் இருந்து வருகின்றன. ஆகையால்தான் மக்கள் சூரி யனைத் தெய்வமென்று கருதுகிறார்கள்.

தாவரங்கள் ஆச்சரியகரமான முறையில், இப்படி முடிவில்லாமல் வரும் சூரியனுடைய சக்தியைப் பதிய வைத்துக்கொள்ளும் திறமை பெற்றிருக்கின்றன. செடிகளின் இலைகளில் உள்ள பச்சை நிறமான அரிதம் (chlorophyll) என்னும் பொருள் இச்சக்தியைக் கிரகிக் கும் தன்மையுடையது. கிரகித்து, காற்றிலுள்ள கரியமில வாயுவுடனும் பூமியிலுள்ள தண்ணீருடனும் தரசம் (carbohydrates) என்னும் உணவைத் தயாரிக் கிறது. இந்நிகழ்ச்சியை ஒளிச் சேர்க்கை (photo-synthesis) என்கிறார்கள். இதைப் பின்வருமாறு காட்டலாம்:

கரியமிலவாயு (6 மூலங்கள்) + தண்ணீர் (6 மூலங்கள்) + சூரிய ஒளி (சக்தி) → தரசம் or சர்க்கரை (6 மூலங்கள்) + பிராணவாயு (6 மூலங்கள்) ↑

இதில் முக்கியமானது தரசம் அல்லது சர்க்கரை தான். இதிலிருந்தே மேலும் சிக்கலான தரசப் பொரு ளாகிய செல்லுலோஸ் (cellulose) முதலியவை உண்டா கின்றன. விறகு என்பது பெரும்பாலும் செல்லுலோஸ் தான். இவை உண்டாகும்போது சக்தி கிரகிக்கப்

படுகிறது என்பதை உணரவேண்டும். இதுதான் ஆதியில் உண்டாகும் மாறுதல். பிறகு விறகை எரிக்கும் போது சக்தி வெளிவருகிறது. விறகே கரி அல்லது நிலக்கரியாகவும் மாறி, அதிலிருந்து சக்திவருகிறது. எனவே நிலக்கரி, விறகு முதலியவை சூரிய சக்தி பதிந்துள்ள பொக்கிஷங்களே. அவை சக்தி சேமிப்புப் பாங்குகள் (banks). அவை பிராண வாயுவுடன் சேர்ந்து எரியும் போது அச்சக்தி மீண்டும் வெளிவருகிறது. இம்மாறுதலை கீழ்க்காணுமாறு காட்டலாம்.

தரசம் + பிராணவாயு ⟶ கரியமிலவாயு + தண்ணீர் + சக்தி (எரிபொருள்) ↑

மீதேன் என்பது அழுகிய தாவரங்கள் அல்லது உயர்ப் பொருள்களிலிருந்து உண்டாகும் ஒரு வாயு. ஆகையால் அதுவும் ஒரு சக்திப் பொக்கிஷம். பெட்ரோலியம் என்னும் சுரங்க எண்ணெயும் (mineral oil) பல்லாயிர வருஷங்கட்கு முன்பு பூமியில் புதைக்கப்பட்ட தாவரங்களும உயர் பொருள்களும சிதைந்து உண்டாகும் பொருளாதலால் அதுவும் ஒரு சக்திப்பொக்கிஷம். பெட்ரோலியம் என்பது ஒரு தனிப்பட்ட சேர்க்கைப் பொருள் அல்ல. அது பல சேர்க்கைப் பொருள்களால் ஆனது. அவை அனைத்தும் சூரிய சக்தியால் உண்டானவையே. அவற்றை நாம் எரித்துப் பெறும் சக்தி 9–கோடி மைலுக்கு அப்பால் உள்ள சூரியனிடமிருந்து சுமார் 9-கோடி வருடங்களுக்கு முன்பு சேமித்து வைக்கப்பட்ட சக்தியே யாகும்.

இவற்றில் உள்ள சக்தி ஏன் சிறிது சிறிதாகத் தானே வெளிப்பட்டு இவற்றை எரித்து வருவதில்லை? ஒரு பொருளில் உள்ள சக்தியானது முதலில் இருந்த நிலைமை யினின்றும் குலைக்கப் பட்டாலொழிய அதன் சமநிலை (equilibrium) மாறுவதில்லை என்பது சக்தி

சேமிப்புக்கொள்கையின்படி (principle of the conservation of energy) மீறமுடியாத் ஓர் உண்மை. ஒரு பொருளில் உள்ள மூலகங்களின் இயக்கம் இப்பொருள் உண்டான போது நிகழ்ந்த வேகத்திலேயே எப்பொழுதும் இருக்கும். அப்போது அதனுள் இருக்கும் சக்தியும் ஒரு நிலையிலேயே இருக்கும். அவ்வியக்கத்தின் வேகம் அதிகரித்தால் சக்தி வெளிப்படுகிறது. அதை அதிகரிக்கச் செய்வதற்கு உஷ்ணம் கொடுக்கப்பட வேண்டும். உஷ்ணம் என்பது மூலகங்களின் இயக்கமே. ஆகையால் உஷ்ணநிலை அதிகரித்து, அதன் பயனுக் மூலகங்களின் வேகம் அதிகரித்தால் சக்தி வெளிப்படும்.

சில சமயங்களில் சக்தி மிகத் துரிதமாக் வெளிப்படுகிறது. மோட்டாரில் உள்ள உருளைகளில் மின்பொரி செலுத்தப்பட்டவுடன் அவற்றில் உள்ள வாயுக் கலப்பு (பெட்ரோல்வாயு + காற்று) திடீரென்று தீப்பற்றி எரிகிறது. உடனே சக்தி வெளிப்படுகிறது.

இயற்கையாக வரும் சூரிய உஷ்ணம் நிதானமாகப் பொருள்களை எரிக்கும் சக்தி வாய்ந்தது. உதாரணமாக ஒரு பருத்திப் பொதியின்மீது நீண்ட காலமாகச் சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்தால் அதன் மேல்பரப்பில் உள்ள மூலகங்களின் வேகம் அதிகரித்து அது தீப்பற்றி எரிந்துவிடும். மூலகங்களின் வேகம் ஓரளவுக்கு மேல் அதிகரித்தவுடன் அவை காற்றில் உள்ள பிராண வாயுவுடன் சேருகின்றன. இதைத்தான் தானுக் எரிதல் (spontaneous combustion) என்கிறோம். காகிதங்கள் பல வருஷங்கள் கழிந்த பிறகு தொட்டால் முறிந்து போகும் நிலைமையயடைவதும் சூரிய உஷ்ணத்தினுல்தான். அவை சூரியனுல் நிதானமாக எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நிதானமாக எரிதலுக்கு மற்ெருரு உதாரணம் துருப்பிடித்தல். எரிதல் அல்லது பிராண வாயுவுடன் சேருதல் என்பது சேர்க்கைப் பொருள்களின் தனிக் குணமல்ல. தனிப் பொருள்களில் சிலவும் அவ்வாறு செய்கின்றன. சில உலோகங்களின் அணுக்கள் பிராண வாயுவுடன் சுலபமாகச் சேருகின்றன. மேற் கூறிய உயிர்ப்பொருள்களின் (organic substances) எரிதலுக்கு மாருக இவ்வுயிரல் பொருள்களின் (inorganic substances) எரிதல் உள்ளது. உயிர்ப்பொருள்களில் கரி சேர்ந் திருக்கும். உயிரல் பொருள்களில் அது இராது. உயிரல் பொருள் எரிவதற்குச் சிறந்த உதாரணம் இரும்பு. அது வெகு எளிதாகப் பிராணவாயுவுடன் சேருகிறது. இதற் குச் சூரிய வெளிச்சம் இருந்தால் போதும். இரும்பு ஆக்ஸைடு (oxide) என்பார்கள். இத்துருவை மீண்டும் ஜலவாயுவுடன் சேரும்படி செய்தால் அதில் அடைபட் டுள்ள சக்தி வெளிவருகிறது: துரு + ஜலவாயு $\longrightarrow$ இரும்பு தண்ணீர் + சக்தி $\uparrow$. ஈயம், துத்தநாகம், தகரம், மாங் கனீஸ் முதலிய உலோகங்கள் அதிக உஷ்ண நிலையிலேயே பிராணவாயுவுடன் சேரும். சாதாரண சூரிய உஷ்ணத் தில் சேரா.

துரு என்பது அபாயமற்ற பொருள் என்று சிலர் கருதலாம். ஆனல் அது அவ்வாறல்ல. அதை மிக நன்ருக அறைக்கப்பட்ட அலுமினியப் பொடியுடன் கலந்து வெடிமருந்து செய்கிருர்கள். அலுமினியம் பிராணவாயுவுடன் சேர்ந்து எரிவதற்குத் துடித்துக் கொண்டிருக்கும் ஒரு பொருள். சாதாரண உஷ்ண நிலையிலேயே அது காற்றிலுள்ள பிராணவாயுவுடன் சேர்கிறதை நாம் அறிவோம். அலுமினியப் பாத்திரங் கள் மீது மிக இலேசாக அலுமினிய ஆக்ஸைடு படலம்

ஒன்று ஏற்பட்டு அவை கறுத்து விடுவதை நாம் பார்க்கிரும். அலுமினியப் பொடியுடன் இரும்பு ஆக்ஸைடைச் சேர்த்துச் சிறிது உஷ்ணப் படுத்தினுல் அலுமினியம் இரும்பு ஆக்ஸைடில் உள்ள பிராணவாயுடன் பேராவலுடன் சேர்ந்து திடீரென்று எரிகிறது. அப்போது உண்டாகும் சப்தம்தான் வெடிகுண்டு சப்தம். பிராணவாயு மிக வேகமாகப் பிரிக்கப்படுவதால் பெரும் அளவு உஷ்ணம் வெளியாகிறது. அவ் உஷ்ணம் சுமார் 5000° வரையில் இருக்கும். இவ்வளவு சக்தியுடன் வெளிவரும் குண்டு 6 அங்குல கனமுள்ள ஓர் இரும்புத்தகட்டைத் துளைத்து விட்முடியும். இவ்விரண்டு பொருள்களையும் சேரும்படி செய்வதற்கு முதலில் அதிக உஷ்ணம் கொடுக்கப்பட வேண்டும். அதற்கு மக்னீஸிய உலோகத்தை எரித்து உஷ்ணம் அளிப்பார்கள்.

அலுமினியம் + இரும்பு ஆக்ஸைடு ⟶ அலுமினியம் ஆக்ஸைடு + இரும்பு + சக்தி. ↑

இக்கிரியை அதிகவேகமாக நிகழ்வதால் அதிக உஷ்ணமும் வெளிப்படுகிறது. அணுக்கள் இயங்கும் வேகத்தைப்பொறுத்தே வெளியாகும் உஷ்ணமும் இருக்கிறது. எரிகுண்டுகள் (Incendiary bombs) மக்னீசிய உலோகத்தாலேயே செய்யப்படுகின்றன. இவ்வுலோகம் பிராணவாயுவுடன் சேரும்போது பயங்கரமான உஷ்ணத்தைக் கொடுக்கிறது.

எரிதல் என்பது இரண்டு அம்சங்கள் கொண்டதென்று மேற்கூறியவற்றிலிருந்து அறியலாம். முதலாவது பிராணவாயுவுடன் கரி அல்லது வேறு உலோகம் சேருவது; இரண்டாவது சக்தி வெளியிடப்படுவது. அச் சக்தி எரிபொருளின் தன்மைக் கேற்றவாறு குறைவாகவோ அதிகமாகவோ இருக்கும். வெடிகளிலும் இந்த இரண்டு அம்சங்களும் சேர்ந்து இருக்கின்றன.

அவற்றில் இவ்விரண்டும் மிக வேகமாக (சுமார் ஒரு விநாடி அல்லது இன்னும் குறைவான நேரத்தில்) நிகழ்வதால் பயங்கரமான சப்தமும் அதிக சக்தி வெளியீடும் உண்டாகின்றன. இதுதான் வெடிச் சக்திக்குக் காரணம். பொருள்கள் சேரும்படியான வேகத்தையும் சேருவதற்கான நேரத்தையும் பொறுத்து சக்தி வெளியீடு உள்ளது. பொருள்கள் அதிகமாகவும் மிகக் குறைந்த நேரத்திலும் சேருவதால், சக்தி வெளியீடு மிக அதிகமாக இருக்கும்.

பெரும்பாலான வெடிகளில் உப்புவாயு கலந்திருக்கிறது. அது பிராணவாயுவுடன் சேர்ந்திருக்கும். நைட்ரோ கிளசரின் என்னும் தீவிர வெடி மருந்தில் கரி, உப்புவாயு, பிராணவாயு ஆகிய மூன்றும் சேர்ந்திருக்கின்றன. TNT (Tri-nitro-toluene) என்பது இம் மூன்றும் வேறு அளவில் கலந்தது. இவ் விரண்டு வெடி மருந்துகளிலும் உப்புவாயுவும் பிராணவாயுவும் மிக அந்நியோந்நியமாகக் கலந்துள்ளன. அவை ஒரே அணுப் போல உள்ளன.

சாதாரண உஷ்ண நிலையில் உப்புவாயு ஜடமாக இருக்கும். மற்ற தனிப் பொருள்களோடு எளிதில் சேராது. காற்றில் பிராணவாயு ஒரு பங்கும் உப்புவாயு நான்கு பங்குமாக் இருந்தாலும், அவை இரண்டும் ஒன்றுகச் சேருவதில்லையென்பதே இதற்குச் சிறந்த சான்றாகும். அவை அவ்வாறு சேர்ந்தால் பெரும் ஆபத்தாகவே முடியும். நம் அதிஷ்டவசமாக அவ்வாறு நிகழ்வதில்லை! இயற்கையில் அவை இரண்டும் சேர்ந்து சோடியம் நைட்ரேட்டில் காணப்படுகின்றன. இது சில இடங்களில் இயற்கையாகக் கிடைக்கிறது. இதிலிருந்துதான் அக்கினித்திராவகம் (Nitric acid) செய்கிறார்கள். சாதாரணமாக ஜடமாக உள்ள உப்புவாயு

பிராணவாயுவிலிருந்து திடீரென்று பிரிந்து கரி, ஜல வாயு, ஆகியவற்றுடன் சேருகிறது. அப்போது அதிக சக்தியும் வெளியாகிறது. வெடி மருந்துகள் சாதாரணமாகவே அபாயகரமான நிலையில் இருக்கும். அவற்றைச் சிறிது அழுத்தினாலோ அல்லது அசைத்தாலோ குபீரென்று வெடிக்கும். அப்போது அவை வெகுவேகமாகப் பிராணவாயுவுடன் சேர்ந்து எரிந்து அதிக சக்தியை வெளியிடும். அவற்றுடன் உப்புவாயுவின் சேர்க்கைப் பொருள்களாகிய வேறு வாயுக்களும் வெளிவரும். இப்படி பல வாயுக்கள் திடீரென்று ஒன்றாக் வெளிவருவதால் அவை அதி சீக்கிரம் விரிவடைந்து பக்கத்திலும் சுற்றிலும் உள்ள பொருள்களைச் சிதற அடிக்கும். இதுதான் வெடி மருந்துகளின் அழிக்கும் சக்திக்குக் காரணம். இவ்வாயுக்கள் மிகச் சிறிய இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும்படியாக ஓர் உறுதியான உறைக்குள் வைக்கப்பட்டால் அவை அதினின்றும் மிக விரைவில் வெளியே பரவ முயலும். அதற்காகத்தான் வெடிமருந்துகளை உறுதியான உலோகச் சிமிழ்களில் அடைத்து வைத்திருப்பார்கள். வெடி மருந்து வெடித்தவுடன் உள்ளே உண்டாகும் வாயுக்கள் பயங்கரமான வேகத்துடன் சிமிழை உடைத்துக் கொண்டு வெளியே பரவும். இவ்வேகத்திற்குக் காரணம் வெடிமருந்து எரிவதால் உண்டாகும் அபரிமிதமான உஷ்ணமே.

வாயுக்கள் 0_0 (பூஜ்யம் டிகிரி)யில் பெற்றிருக்கும் பரிமாணத்தில் ஒவ்வொரு டிகிரி உஷ்ண அதிகரிப்புக்கும் *273*ல் *1* பங்கு அதிக பரிமாணத்தையடைகின்றன. 0 டிகிரியில் ஒருவாயு *1* கன அடி பரிமாணத்துடன் இருந்தால், அதன் உஷ்ணம் *1500* டிகிரியாகும்போது, அதன் பரிமாணம் $6\frac{1}{2}$ மடங்கு அதிகமாகும். வெடிகுண்டுகளில் உண்டாகும் உஷ்ணம் *5000* டிகிரிக்கு மேல் இருப்பதால்

அவற்றிலிருந்து வரும் வாயுக்கள் 20 மடங்குக்கு மேல் விரிவடைந்து பரவுகின்றன. இந்த வாயுக்கள் குபீர் குபீர் என்று கிளம்பி விரிவடைந்து பரவித் தம் உஷ்ணத்தை அருகிலுள்ள காற்றில் செலுத்துவதால் அக் காற்றும் உடனே உஷ்ணமடைந்து விரிவடைந்து பரவுகிறது. இவ்வாறு சுற்றிலும் உள்ள காற்று நெடுந் தூரம் உஷ்ணமடைந்து விரிந்து பரவுவதால் வெடிகுண்டின் அழிவு சக்தியும் அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வாயுக்களும் காற்றும நெடுந்தூரம் தொடர்ச்சியாக இப்படியே அழிவு சக்தியைப் பரப்பிக்கொண்டு போகின்றன. காற்றலைகள் திடீர் திடீர் என்று ஒன்றன் பின் ஒன்ருகப் பரவி அதிர்ச்சியை உண்டாக்குகின்றன. இவ்வதிர்ச்சி அலைகளால் (shock waves) நாசம் மேலும் அதிகமாகிறது. கட்டடங்களின் மீதும் மரங்களின் மீதும் இவை தாக்கி அவற்றைத் தகர்த்தெறிகின்றன. இவை புயல் போல் வீசி எதிரிலும் சுற்றிலும் உள்ள எல்லாப் பொருள்களையும் சுழற்றியடிக்கின்றன. இவ்வளவு சக்தியும் வெடிகுண்டிலிருந்து வெளிவந்ததுதான். ஆனால் அதில் இருந்த வெடிமருந்தின் சக்தி ஆதியில் அதற்குச் சூரியனிடமிருந்து கிடைத்ததே. ஆகையால் சூரியனது சக்தியே உலகத்தில் பல்வேறு மாறுவேடங்களுடன் நாம் அறிந்தும் அறியாமலும் மறைவாகவும் பிரத்தியக்ஷமாகவும் இருக்கின்றன. எனவே எரிசக்திக்கும் வெடிசக்திக்கும் சூரியனேமூலம். அவனே எல்லாச் சக்திக்கும் மூலம். ஆனால் மனிதன் அச் சக்தியைத் தீய காரியத்திற்காக அன்றி நற்காரியத்திற்காக மட்டும் பயன் படுத்தும் நாளே மனித நாகரிகத்தின் தலை சிறந்த நாள் என்பதை நாம் மறக்கக்கூடாது.

மன்னி

"சபரி"

"நாளைக் காலம்பர ரயிலிலே மன்னி கிளம்பி வராளாம்" என்று கையிலிருந்த தந்தியைப் படித்து விட்டு சிவராமன் சொன்ன போது, காதில் சுரீரென்று ஏதோ பாய்ந்தது போல்தான் இருந்தது சுமித்திரா விற்கு.

புக்ககத்தில் சுமித்திரா முதன் முதலாக நுழைந்த போது அவளுக்குப் போட்டியாக அங்கே ஸ்தானம் வகித்திருந்தவள் மன்னி மதுரம்தான். சிவராமனை எது கேட்டாலும் 'மன்னியைக் கேளேன்' என்பான். மாமி யாருக்கோ அந்த மூத்த நாட்டுப் பெண்தான் உலகம். இத்தனைக்கும் அவள் கணவன் வடக்கே வேலையாய் இருந்தார். புக்ககத்தில் அத்தனை மதிப்பு அவளுக்கு.

"மன்னி என்ன சொக்குப் பொடி போட்டாள் உங்களுக்கெல்லாம்?" என்று அப்போது கணவனைக் கேட்டாள் சுமித்திரா.

"கொஞ்ச நாளில் உனக்கே தெரியும் அது" என் பான் சிவராமன்.

நல்ல வேளை உடனே சிவராமனுக்குச் சென்னையில் வேலையாயிற்று. சிவராமனுடன் சுமித்திராவும் சென் னைக்குச் சென்று, தனிக் குடித்தனம் செய்ய துவக்கினாள். பிறகு மாமனார் மாமியார் காலமான பிறகு மன்னி கணவ னுடன் வடக்கே போய் விட்டதாகக் கேள்விப்பட்டாள் சுமித்திரா.

போன வருஷம்தான் மன்னியின் கணவரான தன் மைத்துணன் இறந்த செய்தி வந்தது. இனிமேல் அவள் தன் வீட்டிற்கு வந்து உட்காரப் போகிறாள். தனக்கு இதுவரையிலும் குழந்தை இல்லை. அவளுக்கு அப்போதே கையில் பிள்ளை. தன் கணவன் நிச்சயமாக அண்ணன் மகனைத் தன் மகன் போல் வளர்ப்பான். மன்னிதான் மாயஜாலக்காரி; கேட்பானேன்

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, "எதற்காக வராளாம் இங்கே இப்போ?" என்று முகத்தைச் சுளித்தவாறு கேட்டாள் சுமித்திரா.

"அண்ணாவிற்குப் பிறகு அவள் இங்கே இருக்க வேண்டியதுதானே நியாயம். ஒரே கலகமும் கொலையு மாக இருக்கும் வடக்கே அவள் தனியே எப்படி யிருப்பள்...?"

"ஒரு வருஷமாக இருக்கலையோ...?"

"ஒரு வருஷத்திற்குக் கணவனை இழந்தவா வெளி யில் வர சம்பிரதாயம் இல்லையல்லவா? அதனால் இருந் திருக்கா...ஆமாம், ஏன் உனக்கு அந்தப் பேதை மேல் அவ்வளவு கோபம்...?"

இந்தக் கேள்வி ஒரு பக்கம் கோபத்தையும் மறு பக்கம் சிரிப்பையும் மூட்டிற்று சுமித்திராவிற்கு. பேதை...யார் பேதை? ஒவ்வொருத்தரையும் வலை வீசி தன் பக்கம் காந்தம் போல் இழுக்கும் மன்னியா...? அசட்டுத்தனமாய் வாயால் கத்தி கேட்ட பேர் வாங்கும் தானா...? மன்னிக்காகப் பரிந்து கொண்டு வரும் கணவ னிடம் அதிகம் பேச அவள் விரும்பவில்லை.

துக்கம் தொண்டையை அடைக்க, கண்களில் நீர்த் துளிர்க்க உள்ளே போன மனைவியைப் பார்த்து 'பாவம்! மன்னியின் அருமை தெரியவில்லை இவளுக்கு' என்று முனகினான் சிவராமன்.

மன்னி வந்ததும் அவளிடம் முகம் கொடுத்துப் பேசக்கூடாது, மற்றவர்களைப் போல் தான் ஏமாந்தவள் அல்ல என்பதை மன்னி அறியச் செய்யவேண்டும் என்றெல்லாம் தீர்மானித்துக் கொண்டாள் சுமித்திரா.

மனைவியின் குணம் அறிந்த சிவராமன் பிறகு அவளிடம் மதுரத்தைப் பற்றி புகழ்வதே இல்லை.

மதுரமோ தான் வந்தது முதற்கொண்டு சுமித்திரை ஒரு மாதிரியிருப்பதை அறிந்து கொள்ளாதவள் போலவே காணப்பட்டாள். சிவராமன், சுமித்திரா, தன் பிள்ளை ரகு மூன்றுபேரையும் உட்கார வைத்து, விதவிதமாகச் சமையல் செய்து பறிமாறினாள் மன்னி. ஒவ்வொரு நாள் சுமித்திராவிற்கே என்னவோ போலி ருக்கும்.

"ஏன் மன்னி! நான் உங்களோடே சாப்பிட றேனே?" என்று கேட்பாளவள்.

"நன்றாயிருக்கு. சிறிசு. உட்கார வைச்சுச் சாதம் போட ஆள் இல்லாது உன் உடம்பைப் பார்க்க முடியல்லே." என்று பரிவுடன் பேச்சை மாற்றி விடுவாள் மதுரம்.

வரவர தன்னையறியாது மன்னியின் இஷ்டத்திற்குத் தானும் ஆடுகிறதாகச் சந்தேகம் வலுத்துவிட்டது சுமித்திராவிற்கு. அந்தச் சமயங்களில் கணவனிடம் தனியே காய்வாள் சுமித்திரா.

"ஆமாம்! அண்ணனின் மனைவி மட்டுமில்லே. உங்க அத்தை பெண் அவள். அதுதான் மன்னி மேலே அத்தனை கனிகரம் உங்களுக்கு இல்லையா...?" என்று அவன் காதைக் கடிப்பாள் அவள். சிவராமன் சிரித்துக் கொண்டு பேசாமல் போய்விடுவான்.

கடைசியில் மன்னி வந்து வருஷம் ஒன்று ஆன பிறகு நடந்த ஒரு சம்பவம் சுமித்திராவின் மனதை அடியோடு மாற்றிவிட்டது.

அப்போது சுமித்திரா பூர்ண கர்ப்பிணி. தனக்கு மாதம் ஆக ஆக மதுரத்தின் பிள்ளை ரகுநாதனை அதிகமாக வெறுக்கலானாள் சுமித்திரா. 'நமக்கு பிறக்கும் குழந்தைக்குச் சரியாக இந்த தரித்திரத்திற்கும் பங்கா' என்று எண்ணுகையில் அவள் உள்ளம் வெடித்துவிடும் போல் இருந்தது. பெற்ற தாயைவிட பரிந்து, தனக்கு மன்னி பணிவிடை செய்வதை மாய்மால மாகத்தான் எண்ணிற்று அவள் மனம். காமாலைக் கண்ணிற்குக் கண்ணெதிரில் பட்டதெல்லாம் மஞ்சள் மய மாகத்தானே தோன்றும்.

ஒரு நாள் சிவராமன் ஆபீஸிற்குப் போய் இருக்கையில் மன்னியிடம் நேரிலேயே அவள் அங்கிருப்பதைத் தான் விரும்பவில்லை என்பதைச் சொல்லிவிட தீர் மானித்தாள் சுமித்திரா. பிறக்கப்போகும் குழந்தை யின் நலனை உத்தேசித்தாவது அவளையும் ரகுவையும் துரத்திவிடுவதே சரி என்று நிச்சயித்துக் கொண்டாள் தனக்குள். சிவராமன் வந்து இரைச்சல் போடுவான். 'போடட்டும், அதற்கும் தயார்தான்' என்று எண்ண மிட்டவளாய் மன்னியின் அறைக்குள் புகுந்தாள். அதே சமயம் வாசலில் பெரியதோர் மோட்டார் வந்து நின்றது. அடுத்த வினாடி "மதுரம் இந்த வீட்டில் இருக்கிறாளா?" என்று கேட்டவாறு வந்து நுழைந்தாள் ஒரு வட நாட்டு ஸ்திரி.

"ஆமாம். உட்காருங்கள்" என்று மரியாதை யாகச் சொல்லி, "மன்னி! யாரோ பம்பாய்க்காரர் போல் இருக்கு, உங்களைத் தேடி வந்திருக்கா..." என்றாள் சுமித் திரா.

வெளியே வந்த மதுரம் அவளைப்பார்த்து "ஆ! நீயா!..." என்று கேட்டு அப்படியே நின்றுவிட்டாள்.

"ஆமாம். நான் செய்தவற்றிற்கெல்லாம் மன்னிப்பு கேட்க வந்தேன்...இப்போது எனக்குப் புத்தி வந்து விட்டது. உங்கள் கணவருக்கும் உங்களுக்குமிடையே புகுந்து உங்களது தாம்பத்ய வாழ்க்கையைப் பாழ் செய்த என்னை நீங்கள் மன்னிக்க முடியாதுதான். இங்கே தம்முடைய தம்பி இருப்பதாக முன்பே உங்கள் கணவர் என்னிடம் சொல்லியிருக்கிறார். இங்கேதான் நீங்கள் வந்திருப்பீர்களென்று நினைத்து ஓடி வந்தேன். அவர் சம்பாதித்த பணமெல்லாம் எனக்கே செலவழித்தார். என்னையோ கொடிய ரோகம் ஒன்று பற்றிக்கொண்டு விட்டது..." என்று மேலே பேச முடியாது மார்பைப் பிடித்துக் கொண்டாள் வந்தவள்.

அவள் அருகே போய் மதுரம் அவளுக்கு உபசாரம் செய்தாள். சுமித்திரா ஆச்சரியத்துடன் பார்த்தவண்ணம் நின்றாள்.

"என்னைத் தொடாதீர்கள்! என் நோய் கொடியது. என் சொத்துக்களைக் குழந்தை ரகுநாதனுக்கு எழுதி வைத்த உயிலை உங்களிடம் அளிக்கவே வந்தேன். உங்கள் கணவர் என்னை ரிஜிஸ்தர் மணம் செய்து கொண்டபடியால் ரகுநாதன் என் மகனுக்கொப்பானவனே...நான் போகிறேன்......"

"ஊஹூம்! நீங்கள் எங்கும் போகக் கூடாது..." என்று கண்ணீர் சோர உரைத்தாள் மதுரம்.

உயிலை எடுத்து வெளியில் வைத்த அம்மாது, "இல்லை யில்லை! நான் போகிறேன்!..." என்று கூறியவாறு வெளியே நின்றிருந்த வண்டியில் ஏறிக்கொண்டு போய் விட்டாள்.

கீழே கிடந்த உயிலை எடுத்துப் பார்த்த சுமித்திரா "அப்பாடா! ஒருலக்ஷ ரூபாயா......!" என்று திகைத்தாள்...

"உனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு அதில் பாதி" என்று சர்வசாதாரணமாகச் சொன்ன மன்னியை அப்படியே கட்டியணைத்துக் கொண்டாள் சுமித்திரா.

'இவளையா நாம் வீட்டை விட்டு வெளியேறச் சொல்ல எண்ணினோம். தனது கணவன் எவளோ வடநாட்டு ஸ்திரியைக் காதலித்ததைப்பற்றி ஒருவரிடமும் சொல்லாத அதிசயத்தைச் சொல்லவா, அந்தப் பம்பாய்க் காரியிடம் அன்பொழுக பேசிய அற்புதத்தைச் சொல்லவா! பெரிய சொத்து கிடைத்ததும் கர்வமாகத் தலை தூக்கிப் பேசாத விந்தையைக் கூறவா' என்று தனக்குள்ளே நினைத்து, பிறகு, "மன்னி! நீ தெய்வம் தான்!" என்று உண்மையான பச்சாதாபத்துடன் உரைத்தாள் சுமித்திரா.

சுமித்திராவை அணைத்துக் கொண்ட மதுரம், "பார்த்தாயா அந்தப் பெண் என்ன அழகாக் தமிழ் பேசினாள்" என்று பேச்சை மாற்றினாள்.

"ஹும், தமிழ் பேசியதால் ஆகி விட்டதா? உங்கள் கணவனை உங்களிடமிருந்து பிரித்த அவளை எப்படி உங்களால் மன்னிக்கமுடியும்?"

"சுமித்திரா! அவள் செய்த தப்பு அவள் மனதையே குத்துகிறதல்லவா? அது போதாதா?" என்று மதுரம் சொன்னபோது "பகைவனுக்கருள்வாய்" என்று பாரதியார் சொன்னதைக் கடைப்பிடிக்கும் மன்னியை, 'கர்மயோகிதான் இவள்!.........' என்று தனக்குள் மனதாறப் புகழ்ந்தாள் சுமித்திரா.

"மன்னி! உனக்கு என்ன சொக்குப் பொடி போட்டாள்? அவள் இஷ்டப்படியெல்லாம் ஆட்றே நீ!" என்று இப்போதெல்லாம் சிவராமன் தன் சஹதர்மிணியைக் கேட்கும் படியாய் இருக்கிறது.

இந்தியக் காடுகளும் தொழிலபிவிருத்தியும்

டேராடுன் ஆராய்ச்சிக் கழகம்

மரமும் காட்டில் விளையும் பிற பொருள்களும் ஆதி காலந்தொட்டு மனிதனின் அன்றாட வாழ்க்கையிலே இன்றியமையாததோர் இடம் பெற்றுவிட்டன. தற்போதுங்கூட, தொழில் முன்னேற்ற மடைந்துள்ள பல நாடுகள் மரத்துக்குப் பதிலாக உபயோகிக்கும் மாற்றுப் பொருள்கள் பலவற்றைக் கண்டு பிடித்திருந்த போதிலும் மரத்தின் உபயோகம் என்னவோ கொஞ்சங்கூடக் குறையவில்லை. முற்காலத்தில் தெரிந்திராத பற்பல புதிய வழிகளில் இப்பொழுது இப்பொருள்கள் பயன் பட்டு வருகின்றன. மரங்களோ காட்டில் விளையும் வேறு ஏதாவதொரு பொருளோ கிடைப்பது அரிதானாலும் சரி, அதீத விலையில் விற்றாலும் சரி தற்கால வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் நேரிடையாகவோ மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டுவிடுகிறது. ஆகையால் காடுகள் மனித சமூகத்துக்கு மகத்தான சேவை செய்து வருகின்றன. மனிதனின் வாழ்க்கைக்கு அவை இன்றியமையாதவையுங் கூட. இந்தியாவில் அழிந்தது போக மொத்த நிலப்பரப்பில் ஆறில் ஒரு பாகம் இன்னமும் காடடர்ந்த பூமியாக இருந்து வருகிறது. இதைச் செவ்வனே பாதுகாத்து வளர்த்தும் விவேகமாகப் பயன்படுத்தி வருவது இந்தியன் ஒவ்வொருவனுடைய கடமையாகும்.

டேராடூனிலுள்ள இந்திய காட்டு ஆராய்ச்சியின் கழகம் இத்துறையில் அரிய சேவை செய்து வருகிறது. இக்கழகத்தில் செய்யப்பட்டுவரும் வேலைகளை இங்கு சுருக்கமாக ஆராயலாம்.

முதலில் விறகாக உபயோகிப்பதற்கு ஏற்ற மர வகைகள் பற்றி விரிவான புள்ளி விவரங்கள் சேகரிக்கப் பட்டு கிராமாந்தரங்களில் மரஞ்செடிகள் வளர்ப்பது சம்பந்தமான தகவல்களும் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

மரங்களை அழிக்கும் பூச்சிகள்

சுமார் 30 வருஷங்களுக்கு முன் மத்திய இந்தியா விலும் வட இந்தியாவிலும் ஸால்போரோ என்ற பூச்சியால் பல கோடி ரூபாய் பெறுமான சுமார் 60லட்சம் மரங்கள் அழிந்துவிட்டன. அதைப் போலவே மைசூரி லும் குடகிலும் சுமார் இரண்டுகோடி ரூபாய்பெறுமான சந்தன மரங்கள் அழிந்து போயின.

கழகத்தைச் சேர்ந்த பூச்சி சாஸ்திர நிபுணர் களின் இடைவிடா உழைப்பின் பலனாக, பூச்சிகளால் ஏற்படும் இத்தகைய நஷ்டங்களைத் தடுப்பதற்கு அனுபவ சாத்தியமான பல வழிகளைக் கண்டு பிடித் திருக்கிறார்கள். மாகாண சமஸ்தான சர்க்கார்களைச் சேர்ந்த காட்டிலாகாக்கள் மிகக் குறைந்த செலவில் இத்தடை முறைகளைக் கையாண்டு நற்பலன் பெற்றிருக் கின்றன. கழகத்தில் நடத்தப்பெற்ற ஆராய்ச்சிகளின் பலனாக காடுகளில் கொள்ளைநோய் பரவுங்காலங்களை முன்கூட்டியே அறிவதும் அதற்கான தடைமுறைகளை அறிவிப்பதும் இப்பொழுது சாத்தியமாகும்.

கறையான்களில் நூறுக்கு மேற்பட்ட வகைகள் இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர். இவைகளால் மரங்களுக்குச் சேதமேற்படாமல் பாதுகாப்பது மிகப்

பெரியதொரு பிரசினையர்கும். இது விஷயம்ாக சென்ற மூன்று வருஷங்களாக ஆரம்ப ஆரர்ய்ச்சிகள் நடத்தப் பெற்று வந்திருக்கின்றன. தடைமுறைகள் பற்றிய ஆரர்ய்ச்சி வேலை தொடர்ந்து நடக்க விருக்கின்றன.

பயிர் நூல் ஆராய்ச்சி

இந்தியக் க்ர்ட்டு ஆராய்ச்சிக் கழகத்தில் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும்' சேக்ரித்துச் சுமார் இரண்டரை லட்சம் செடிகளின் மாதிரிகள் வைக்கப் பெற்றிருக்கின்றன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு மரஞ் செடிகளின் அமைப்பு தன்மை உபயோகம் ஆகியவைபற்றி ஆரர்ய்ச்சிக்ள் நடந்துவருகின்றது.

காட்டுப் பொருள்கள்

இந்தியக் க்ர்டுகளில் கிடைப்பது போன்ற இத்தனை வகைப்பட்ட பெர்ருள்கள் இவ்வளவு ஏராளமாக உலகின் வேறெந்த பாகத்திலும் கிடைப்பதில்லை. இந்தியக் க்ர்டுகளில் வளரும் சுமார் மூவர்யிரத்துக்கு அதிக்மான செடி வகைகளும் மிருக்ங்க்ள் மூலம் கிடைக்கும் எண்ணற்ற பொருள்க்ளும் இந்நர்ட்டின் கிராமப் பொருளர்தார அமைப்பிலும் தொழில் துறைப் பொருளர்தார அமைப்பிலும் மிக முக்கியமர்ன இடம் பெற்றுள்ளன. அத்தியர்வசியமர்ன எண்ணெய் வகைகள் பிசின்க்ள், கொழுப்புச் சத்துள்ள எண்ணெய்க்ள், மூலிகைகள், பிரம்பு, மூங்கில், புல்வகைக்ள் ஆகியவையும் தேன், அரக்கு போர்ன்ற பிற உற்பத்திப் பொருள்களும் க்ாடுகளுக்கு அருகில் வர்ழும் கோர்டிக்கணக்கர்ன மக்களுக்கு ஜீவனோபாய மளித்து வருகின்றன. கோர்டிக் கணக்கர்ன ரூபாய்பெறுமான இந்தச் சில்லரை சாமான்கள் தற்கால கைத்தொர்ழில்க்ள் பலவற்றிற்கு மூலப்

இந்தியா வருஷா வருஷம் சுமார் 20 லக்ஷம் பவுண்டு கர்ப்பூரம் இறக்குமதி செய்து வருகிறது. நாட்டில் தொழில்கள் துரிதமாக வளர்ச்சி பெறும்போது கர்ப்பூரமும் மேலும் மேலும் அதிகமாகத் தேவையாயிருக்கும்.

விமானம், கப்பல் கட்ட காட்டுமரம்

இந்தியாவில் சுமார் 4000 வகையான வெட்டு மரங்கள் உற்பத்தியாகின்றன. இம்மரங்கள் எல்லாவற்றையுமே லாபகரமாகப் பயன்படுத்திக் கொள்வது சாத்தியமில்லை. மரத்தொழில் அபிவிருத்தியடைவது மரங்களின் உட்புற அமைப்பு, உபயோகம் ஆகியவை பற்றிய தொழில் நுட்ப விஞ்ஞானத்தையே பெரிதும் பொறுத்திருக்கிறது. மரங்களின் அமைப்பு வகை பற்றி ஆராய்ந்து அறிந்துகொள்ளும் வசதியிருந்தால் மரத் தொழில்களை விஞ்ஞான பூர்வமாகவும் திறம்படவும் நிர்வகிக்க முடியும் என்பதற்கு இரண்டு உதாரணங்கள் கூறலாம். விமானம் கட்டுவதற்கு வட அமெரிக்காவில் கிடைக்கும் ஒருவகை வெட்டுமரமே பெரிதும் பயன்பட்டு வருகிறது. இந்த மரம் சென்ற யுத்தத்தின் போதும் அதற்கு முன்பும் இந்தியாவில் கிடைக்கவேயில்லை. ஆனால் பஞ்சாப் ஐக்கிய மாகாண மலைக்காடுகளில் சமீபத்தில் ஆராய்ந்து பார்த்ததில் விமானங் கட்டுவற்கு உபயோகிக்கக் கூடிய நேர்த்தியான மரம் இந்நாட்டில் கிடைப்பது தெரிய வந்தது.

இந்தியாவில் சிலவகைக் கப்பல்கள் கட்டுவதற்குத் தென் அமெரிக்காவில் கிடைக்கும் ஒரு விசேஷ ரகத்தைச் சேர்ந்த வெட்டுமரம் உபயோகிக்கப் பெற்றது. சென்ற யுத்தம் ஆரம்பமானதும் இந்த மரத்தின் விலை ஒரு கன அடி 15 ரூபாயாயிருந்தது 500 ரூபாயாக

உயர்ந்துபோனதுடன், கிடைப்பதும் அரிதாகி விட்டது. அதன் பிறகு பம்பாயிலும் சென்னையிலும் ஆராய்ச்சி நடத்தியதில் இந்த வேலைக்கு ஏற்ற உறுதியான மரம் கிடைப்பது தெரிய வந்தது. இந்த மரம் கன அடி 10-15 ரூபாயில் இப்பொழுது இங்கு கிடைக்கிறது. பம்பாயில் கப்பல் கட்டும் பல கம்பெனிகள் இதையே இப்பொழுது உபயோகித்து வருகின்றன.

வெட்டு மரத்தை உறுதிப்படுத்துதல்

இந்தியாவில் வெட்டு மரங்கள் உபயோகிக்கப்படுவதற்கு முன்னால் பதப்படுத்தப் படாதது காரணமாக இறக்குமதியாகும் வெட்டு மரங்களுடன் போட்டி போட முடியாத நிலைமை இருந்து வந்தது. யுத்தத்தின்போது இது விஷயமாக மிகப் பிரமாதமான ஆராய்ச்சிகள் நடந்தன. சணல், பருத்தி ஐவுளி ஆலைகளுக்குத் தேவையான பாபின்கள் ஷட்டில்கள் செய்வதற்கும் பென்ஸில்கள் செய்வதற்கும் இந்தியக் காட்டு மரங்களை நன்கு உபயோகிக்கலாமென்று கண்டு பிடித்திருக்கிறார்கள்

குடை கைப்பிடிகள், கைத்தடிகள், விளையாட்டுச் சாமான்கள், நாற்காலிகள் ஆகியவை உற்பத்திக்கு இந்திய மரங்களை எந்த அளவு உபயோகிக்கலாமென்பது பற்றி ஏற்கெனவே ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

எஃகுக்குப் பதில் காட்டுமரம்

இந்தியாவுக்கு வருஷா வருஷம் 20 லட்சம் டன் எஃகு தேவையாயிருக்கிறது. ஆனால் சுமார் 10 லட்சம் டன்தான் இங்கு கிடைக்கிறது. எஃக்குப் பதிலாக் உறுதிப் படுத்தப்பெற்ற வெட்டு மரத்தை உபயோகிக்கலாமென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். வெட்டு மரங்களை ரசாயன முறைப்படி உறுதிப் படுத்துவது

பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இது சாத்தியமானால் இவ் வகையில் சுமார் 15 கோடி ரூபாய் பெறுமான மரம் வருஷா வருஷம் இந்தியாவில் உபயோகிக்கப் பெறும்.

ரயில்வே மரங்கள்

இந்தியாவில் மரங்கள் பாதுகாப்பு சம்பந்தமான ஆராய்ச்சி சுமார் 30 வருஷத்துக்கு முன் ஆரம்பமாயிற்று. பஞ்சாபில் தில்லான் என்ற இடத்தில் அமைக்கப் பெற்ற முதல் ஸ்தலத்தில் 40 லட்சத்துக்கு அதிகமான ரயில்வே வேலைக்குப் பயன்படக் கூடிய மரங்கள் ரசாயன முறைப்படி உறுதிப் படுத்தப்பெற்றன. இப்பொழுது இந்தியாவில் ஆறு இடங்களில் இதற்கான யந்திரச் சாதனங்கள் அமைக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது.

அடுத்த சில வருஷங்களில் இந்தியாவில் மொத்தம் பெரிய ரயில் பாதைகளுக்கு 39 லட்சம் மரக் கட்டைகளும் 'மீட்டர் கேஜ்' பாதைகளுக்கு 25 லட்சம் கட்டைகளும் தேவையாயிருக்கும். இயற்கையிலேயே உறுதியாயுள்ள மரங்கள் போதிய அளவு கிடைக்காமையால் உறுதிப் படுத்தப்பெற்ற மரங்களை விஸ்தாரமாக உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இந்திய சர்க்கார் இந்திய மரங்களை உறுதிப்படுத்தும் நிலையங்களை மேலும் பல இடங்களில் அமைப்பது பற்றி யோசித்து வருகின்றனர்.

கப்பல்கள் கட்டுவதற்கு உறுதிப்படுத்தப்பெற்ற இந்திய வெட்டு மரங்களை உபயோகிப்பது பற்றியும் ஆராய்ந்து வருகிறார்கள்.

ஒட்டுப் பசைகள்

ஒட்டுப் பலகை உற்பத்திக்கு உபயோகிக்கப்படும் 'க்ளீன்' என்ற ஒரு வகை ஒட்டுப்பசை வெளிநாடு

களிலிருந்து இறக்குமதியாகி வருகிறது. டன் ஒன்று 300 ரூபாய் வீதம் விற்று வந்த இந்தச் சரக்கின் விலை யுத்தத்தின்போது 4000 ரூபாயாக உயர்ந்துவிட்டது. இப்பொழுது டன் 6000 ரூபாயாக இருக்கிறது. இந்தியாவில் கிடைக்கும் முந்திரிக்கொட்டை எண்ணெயிலிருந்து இதைப்போன்ற ஒட்டுப்பசை தயாரிக்கலா மென்று இப்பொழுது கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஒட்டுப்பலகை

மொத்தம் சுமார் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள 15 கோடி சதுர அடி ஒட்டுப்பலகை வருஷா வருஷம் இந்தியாவில் தேவையாயிருப்பதாக மதிப்பிடப் படுகிறது. இந்தத் தொழில் யுத்தகாலத்தில் பெரிதும் அபிவிருத்தியடைந்திருந்த போதிலும் இன்னமும் இளம் பருவத்திலேயே இருந்து வருகிறது. இடைவிடாத ஆராய்ச்சியும் ஆலோசனையும் இத்தொழிலுக்கு மிக அவசியமாகும். ஒட்டுப்பலகை உற்பத்திக்குப் பல்வேறு இந்திய மரங்களையும் உபயோகிப்பது பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

காகிதம்

காகிதம் செடிகளின் நார்களை இணைத்து இழைப்பதன் மூலம் தயாரிக்கப்படுவதேயாகும். புல், வைக்கோல், சணல் ஆகியவற்றிலிருந்து ஓரளவு காகிதம் கையால் செய்யப்பட்டு வருகிறது. ஆயினும் உயர் தரமான காகிதம் கந்தைகளைக் கொண்டும், விலை அதிகமான வேறு சில பொருள்களைக் கொண்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் மலிவான பத்திரிகைத்தாளும் அட்டைக் காகிதமும் மரங்களிலிருந்தே உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

தற்போது இந்தியாவிலுள்ள 15 கர்கித உற்பத்தி ஆலைகளில் வருஷத்துக்கு மொத்தம் சுமார் 1,00,000 டன் கர்கிதம் உற்பத்தி செய்ய முடியுமென்று மதிப்பிடப்படுகிறது. 1937-38ம் வருஷங்களில் சுமார் 1,45,000 டன் கர்கிதமும் அட்டையும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியர்யின. தற்பேர்து இந்தியாவில் நபர் ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு 1·4 பவுண்டு வீதம் கர்கிதம் செலவாகிறது. பிரிட்டனில் இது 150 பவுண்டர்க்வும், கனடர்வில் 175 பவுண்டர்கவும், அமெரிக்காவில் 300 பவுண்டர்க்வும் இருந்து வருகிறது.

பத்திரிகைத்தாள்

பத்திரிகைத்தாள் உற்பத்தி செய்வது சம்பந்தமாக இந்தியக் காட்டு ஆரர்ய்ச்சிக் கழகத்தில் நடத்தப்பெற்ற ஆரர்ய்ச்சிகள் திருப்திகரமான பலனளித்திருக்கின்றன. இந்திய மூங்கிலையும் கர்கித முசுக்கட்டைச் செடியையும் கொண்டு இந்திய ஆலைகளில் தயாரிக்கப்பட்ட காகிதச் சுருள்களை பெரிய "ரோடரி" யந்திரத்தில் ஒட்டிப்பர்த்ததில் திருப்திகரமர்ன பலன் கிடைத்திருக்கிறது. அக்லமான இலைகள் கெர்ண்ட மிருதுவான மரங்களைக் காகித உற்பத்திக்கு உபயோகிப்பதுபற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தொழில் நுட்பப் பயிற்சி

காகித உற்பத்தி முறையில் இந்திய இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்ய ஆராய்ச்சிக் கழகம் ஆலேர்சித்து வருகிறது. இந்திய ஆலைகளில் பொறுப்பு வாய்ந்த ஸ்தர்னங்களை இதுவரை வெளிநர்ட்டு நிபுணர்களே வகித்து வந்திருக்கின்றனர். இந்திய மர்ணவர்களுக்கு வெளி நர்ட்டு பயிற்சி ஸ்தர்பனங்களில் இடம் கிடைப்பதும் க்ஷ்டமர்யிருக்கிறது. வருஷர் வருஷம் 15

மாணவர்களைப் பயிலுவிக்க தற்போது திட்டம் வகுக்கப் பெற்றிருக்கிறது. ஆனால் போகப் போக இந்தப் பயிற்சி வசதிகளைப் பெரிதும் விஸ்தரித்தேயாக வேண்டும்.

காட்டு வளத்தைப் பயன் படுத்திக்கொள்ளும் விஷயத்தில் இந்தியா இன்னமும் பின்னணியிலேயே இருந்து வருகிறது. ஆனால் சரியான வழியில் நடத்திச் செல்லப் பட்டால் இந்தியக் காடுகளில் பொதிந்து கிடக்கும் செல்வம் இந்நாட்டில் மிகப் பெரிய தொழில்களில் ஒன்றாக அபிவிருத்தியடைய முடியுமென்பதில் ஐயமில்லை. விவசாய இலாகா இப்பொழுது ஓர் இந்திய மந்திரியின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. இலாகாவின் காரியதரிசியும் இந்தியரே; காட்டு ஆராய்ச்சிக் கழகம் ஸ்தாபிக்கப் பெற்ற பிறகு முதல் முறையாக ஓர் இந்தியரே இப்பொழுது அதன் அதிபராக இருக்கிறார். ஆகையால் காட்டு வளத்தை விரிவான தேசீய அடிப்படையில் விருத்தி செய்து பயன் படுத்த சிறந்ததொரு திட்டம் உருவாகுமென்று நாம் எதிர்பார்க்கலாம்.

சென்னை புத்தகாலய மசோதா

த. கிருஷ்ணமூர்த்தி

படித்தவர்கள் தம் படிப்பை மறக்காது செய்யவும், படித்தவற்கு மேலும் விஷய ஞானம் தருவதே இற்றை காலத்து புத்தகாலய இயக்கத்தின் அடிப்படை கொள்கை. ஆதிகாலத்தில் புத்தகாலயங்கள பெரும் காப்பியங்களைக் காத்துவரும் நிலையங்களாகவே விளங் கின, பிறபாடு நாடிவரும் நபருக்குப் புத்தகங்கள் வழங் கும சாலைகளாயின. இன்றே நம் நாட்டில் அவை பொழுது போக்குக்காக அல்லது கல்விச் சாலை படிப் புக்காகப் புத்தகம வழங்கும் கூடங்களாயிருக்கின்றன. இயக்கத்தின இரு ஆதாரக்கொளகைகளை அடுத்து வேலை செய்யும் புத்தகாலயங்கள் மேலை நாடுகளிலேயே அதிகம் பரவியிருக்கின்றன. வாசிக்க வருபவனின் தேவையை மாத்திரம் பூர்த்தி செய்வதோடு நில்லாமல், அவன் தொழில் ஞானத்தையும், மனதுக்குகந்த விஷயத்தின் நுட்ப விவரங்களையும் தேடித்தருவதுடன், விஷய ஞானங்களில் அக்கறை இல்லாதவனைப் பலன் தரும்பல விஷயங்களில் நாட்டம் செலுத்தவும் தூண்டு கிறது இப்போதய மேலை நாட்டு புத்தகாலய இயக்க வேலைபபாடு. அதன் பலனாய் படித்தவன என்பவன் வெறும் இலக்கிய இசைத்தட்டுக் கிளியாய் இல்லாமல், பலப் பொது விஷயங்களை அறிந்தவனுவதுடன், அதே சமயம் அக்கறைப்பட்ட தொழில் நுட்ப விஷயங்களில் முதிர்ந்த அறிவு பெறவும் முடிகிறது.

அதனையடுத்து அவன் சமூக, பொருளாதாரத் துறைகளிலே மேம்பாடு அடைகிறுன். நாடும் ஏற்ற

மடைகிறது. ஆசாபாசங்களுக்கு ஆளாகும் மனிதன் அடங்கி, பண்பாடு உடையவனாகி, நாட்டிற்குப் பாரமாக இல்லாமல் பொக்கிஷமாகிறான்.

சென்னை மசோதா

வ்யதானவர்களின் கல்வி அறிவுக்குப் புத்தகாலய சீரமைப்பு இன்றியமையாத தென்பதை அறிந்தே சென்னை சர்க்காரும் பொதுப் புத்தகாலய மசோதாவை வென்றைக் கொண்டு வந்திருக்கிறது. நம் மாகாணத்தில் இங்கு மங்குமாக பூத்திருக்கும் புத்தகாலயங்களைக் கோர்வைப்படுத்தி, அவற்றின் நிர்வாகத்தை ஒழுங்கு செய்து, அவசியமானவற்றை விரிவாக்கி, புத்தகால யங்கள் இல்லாத இடங்களிலெல்லாம் ஆரம்பித்து வைக்க வேண்டுமென்பதே மசோதாவின் முதல் நோக்கம்.

எந்தப் புத்தகாலயமும் எல்லாப் புத்தகங்களையும் கொண்டிருக்கமுடியாது; பணவசதியும் இராது; அவசியமும் இருக்காது. ஆகவே இருப்பிடத்திற்கும், தேவைக்கும் ஏற்றது போல புத்தகங்களை வைத்தாலே சிக்கன நிர்வாகம் நடத்திப் பல இடங்களுக்கும் அதன் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இருந்தாலும் எல்லா இடத்திலிருப்போர்க்கும் தேவையான புத்தகங்கள் கிடைக்கவும், இருக்கும் எல்லா புத்தகங்களுக்கும் வாசகர்களைப் பிற இடங்களிலும் பெறவும், எல்லாப் புத்தகாலயங்களையும் கோர்வை படுத்தினாலேயே ஒன்றுக்கொன்று புத்தக இரவல் கொடுக்கச் சௌகரியப்படும். ஒழுங்கு படுத்துவதால் வீண் செலவு குறைந்து, திறமையான சேவை செய்ய இயலும். அவற்றைச் செய்து வைக்கப் புத்தகாலய காரிய துரந்தரரொருவர் மசோதா 4-வது ஷரத்தின்படி நியமிக்கப் படுவார். சர்க்கார் கேட்கும் விஷயங்களில் புத்தகாலய

முறைமை பற்றி ஆலோசனை கூற ஒரு சபை அமைக்கப் படும். அச்சபையின் முடிவுகளையும் நிறைவேற்றி மார்க்கங்களிலுள்ள நூல் நிலையங்களைப் பரிபாலிக்க வேண்டியது புத்தகாலய காரிய துரந்தரரின் கடமை. சர்க்கார் ,ஸ்தலஸ்தாபனங்கள், தனிப்பட்ட ஸ்தாபனங் கள், யாவரும் நடத்தும் நூலகங்கள், கல்விச் சாலைகளைப் போல அவர் மேற்பார்வையிலிருக்கும். சர்க்கார் கேட்கும் விஷயங்களில் மாத்திரம்தான் ஆலோசனைச் சபை யோசனை கூற மசோதாப்படி இடம் உண்டு. அதுவாக எந்த யோசனையையும் கூற அதிகாரமில்லை. ஆலோ சனைச் சபையில் புத்தகாலய இயக்க சம்பந்தமான அனு பவசாலிகளும் இருக்கப் போகிறபடியால் இப்படி அதன் அதிகாரத்தை கட்டுப்படுத்தியிருப்பது சரியல்ல எனச் சென்னை புத்தகாலய பிரசார சங்கத் தலைவர் மசோ தாவைப்பற்றிய தனிக்கமிட்டி முன் சாட்சியம் கூறுகை யில் வலியுறுத்தினர். இரட்டையாட்சி என்ற பெயரில் சர்க்கார் அதிகாரியின் ஏதேச்சாதிகாரமே ஓங்கியிருக்கு மென்றும, அதிகாரிகளைவிடப் பொது ஜனங்களிடம் நேரில் பழகும் சபை அங்கத்தினர்களுக்கே கஷ்ட நிஷ் டூரம் தெரியுமாதலால் சபையின் அதிகாரத்தைக் கட்டுப் படுத்தக் கூடாதென்றும் அப்போது ஆந்திர புத்த காலய இயக்கக் காரியதரிசி பலமாக வற்புறுத்தினர். ஆகவே 3 வது ஷரத்தில் கூறப் பட்டிருக்கும் அதி காரத்தை விரிவுபடுத்தி கமிட்டியே தானாக யோசனைகள் கூறவும் அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

புத்தகாலயத் தொடர்

5வது ஷரத்தின்படி முனிசிபாலிட்டிகள், பஞ்சாயத்து சபைகள் தத்தம் வட்டாரங்களில் புத்தகாலயங்களை ஏற்படுத்தி, சர்க்கார் வகுக்கும் விதி முறைகளின்படி

நிர்வகிக்கும். அவ்விரு சபைகள் இல்லாத் பிராந்தியங்களுக்குப் புத்தகாலய வசதி செய்து தர வேண்டியது ஜில்லா போர்டின் பொறுப்பாகும். அந்த ஸ்தாபனங்களும் பிரதேச புத்தகாலய ஆலோசனைக் கமிட்டிகளை ஏற்படுத்தும். பஞ்சாயத்துகளுக்கு அவ்வித நிர்ப்பந்தம் இல்லை. ஆலோசனைச் சபைகளில் பாதிபேராவது புத்தகாலய விஷய ஞானமோ, அனுபவமோ பெற்றவராயிருக்க வேண்டுமென்று 6-வது ஷரத்து (2) வது பிரிவு கூறுவதால் உருவான யோசனைகளே அக்கமிட்டிகளின்று வரும் என்று எதிர்பார்க்கலாம். அத்தகையோரே புத்தகாலய இயக்கங்களின் தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரதிநிதிகளாயிருப்பதே முறைமை. புத்தகாலய இயக்கச் சங்கங்கள் இல்லாத இடத்திலே ஸ்தல ஸ்தாபனங்கள் நியமனம் செய்யாது சபையையே தகுதி வாய்ந்தவரை (co-opt) பெற்றுக்கொள்ளும்படி விட வேண்டும். அல்லது உத்தியோகப்படி (ex-officio) உரிமையுடன் உறுப்பினராதல் வேண்டும். மற்ற பாதிப் பேரில் பொதுத் துறையில் ஈடுபட விரும்பும் ஸ்திரீகள், ஹரிஜனங்களுக்கும், மற்றும் நன்கொடையாளர்கள் ஆகியவருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படலாம்.

இம் மசோதாப்படி மாகாண மத்திய நூலகம் ஒன்று காரியதுரந்தரர் தலைமையிலிருக்கும். அனேகமாகச் சென்னை கன்னிமாரா புத்தகாலயமே மத்திய நூலகமாகலாம். அச்சாகும் ஒவ்வொரு புத்தகத்தின் நான்கு பிரதிகள் மத்திய நூலகத்துக்கு அச்சுக் கூடத்தார் தரவேண்டுமென்று புது விதி செய்யப்படுகிறது. ஆகவே நம் மாகாணத்தில் பிரசுரமாகும் சகல நூல்களின் பிரதிகளும் அதில் கிடைக்கும். பின்னொருகால் மாகாணம் பாஷா வாரியாகப் பிரிந்தாலும், அல்லது பாஷாவாரி

பிரரந்திய நூலகங்கள் ஏற்பட்டாலும் நம் மாகாண வெளியீடுகளின் பிரதிகள்யாவும் அவற்றிலிருக்கவே இத்திருத்தம் போலும். அல்லது பிரதிகள் காணமற் போய் விட்டாலும் அதிகமாகக் கையாளுவதால் பழுதடைந்து போய் விட்டாலும் மாற்றுப் பிரதிகள் வைக்கவோ நான்கு பிரதிகள் கேட்கப்படுகின்றன. விமரிசனம் முதலியவற்றிக்குத் தருவது போல 4 பிரதிகள் இதற்கெனத் தருவது பிரசுரகர்த்தருக்குச் சிரமம் ஆகாது.

மத்திய நூலகவேலை

இப்போது புத்தக் ரிஜிஸ்திரார் காரியாலயத்தில் 1867-ம் வருஷத்திலிருந்து இன்று வரை வெளியான நூல்களின் நூல்நிலையம் இருக்கிறது என்றாலும், அதில் எல்லாப் புத்தகங்களும் சரியாகச் சேமிக்கப் பெற்றிருக்கின்றனவென்று கூறமுடியாது. ஆகவே பழங் காலத்துப் புத்தகப் பிரதியொன்று படிப்பதற்கோ, திரும்ப அச்சடிப்பதற்கோ வேண்டுமென்றால், கிடைப்பதில்லை. ஆனால் லண்டன் மியூசியத்தில் இருக்கும் நூலகத்தில் நம் நாட்டில் வெளியாகியுள்ள நூல்களின் பிரதிகள், அந்தப் புத்தகப் பதிப்பாளர் மூலம் கிடைத்த எல்லா வற்றையும், ஒழுங்கு படுத்தி பத்திரமாகப் பாது காத்து வைத்திருக்கின்றனர். ஜி. யு. போப் ஐயரால் வகுக்கப்பட்ட தரா்தர முறைமைப்படி தங்களிடம் உள்ள தமிழ்ப் புத்தகங்களைக் குறித்து இருவிரிவான பட்டியல்களையும் பிரசுரித்திருக்கிறார்கள். இங்கும் கால் வருஷத்திற் கொருதரம் சர்க்கார் கெஜட்டில் வெளியாகும் புத்தகங்கள் ஜாப்தா தரப்பட்டாலும், அதன் தராதர பாகுபாடு ஒழுங்கற்றதாய், முரண்பாடாய் இருக்கிறதென்பது அனுபவம். தனித் தேர்ச்சிபெற்ற அதிகாரியை அதற்கெனச் சர்க்கார் நியமிக்காததே இதற்குக் காரணமாகும். ஆகவே இந்தக் குறைபாட்டையும் புது

மத்திய நூலகம் நீக்குமென எதிர்பார்க்கலாம். பம்பாய் சர்க்கார் 1947-ம் வருஷ புத்தகாலயச் சட்டப்படி புத்தகப் பதிவாளர் நூலகத்தையும், புத்தகாலய காரி தூரந்தரிடமே விட்டிருப்பது போல, இங்கும் செய்யலாம். அப்போது அதனையடுத்து பார்ஷர்வாரி வெளியான புத்தகப் பட்டியல் (Bibliography), சகல நூலகங் களிலும் கிடைக்கக்கூடிய முக்கிய நூல் பட்டியல் (Union catalogue), வருஷாந்திர வெளியீடுகளின் பட்டியல் (Cumulative catalogue), மார்க்கணத்திற்கான பொதுப் பட்டியல் முறையை வகுப்பதும் (Standard catalogue) மற்ற நூலகங்கள் எத்தகைய நூல்களை வாங்க வேண்டுமென்ற பட்டியலைத் தயாரிக்கும் பொறுப்பை யும் (Selection list) மத்திய நூலகத்தார் ஏற்கலாம்.

புத்தகாலய வரி

மசோதாவின் 11-வது ஷரத்து ஜில்லா போர்டு தவிர இதர சபைகள் சொத்து வரி அல்லது வீட்டுவரியுடன் ரூபாய்க்குக் காலணு வீதம் புத்தகாலயத் வரி என வசூலிக்க வேண்டுமென்கிறது. அதனைப் பிற்பாடு சர்க்கார் அதிகரிக்கலாம். அச்சபைகளுக்கே வேறு தினுசான வரி முறைகள் புத்தகாலயங்களுக்கென விதிக்கத் தோன்றினல், சர்க்கார் சம்மதம் பெற்று விதிக்கலாம். சர்க்காரும் அவற்றை நிர்ப்பந்தித்துப் போடச் செய்யலாம். சர்க்கார் இப்போது போட்டுள்ள விகிதம் பற்ருது என்பதாலேயே இந்த ஷரத்துச் சேர்க்கப் பெற்றிருக்கிறது. நியூயார்க் நகரில் ஆளுக் குச் சராசரி 11 அணு விகிதம் வரி வசூலிக்கும் போதே அங்குள்ள அதிகாரிகள் அது போதவில்லை எனக் கூறுகிருர்கள். ஆனல் இந்தியா அவ்வளவு பணக்கார தேசமல்ல; படித்தவர் நாடுமல்ல. எனி னும் இந்தக் காலணு வரியால் கிடைக்கக் கூடியது

அதி சொற்பமே. ஆகவே பம்பாய் சர்க்கார் மாதிரி சர்க்கார் மானியமும், ஸ்தலஸ்தாபன மானியமும், தனிப்பட்டவர் நன்கொடைகளும் இருந்தாலே ஏதாவது உருப்படியாகச் செய்யலாம். புத்தகாலயங்களின் நன்மைகளை நேரில் கண்டறிந்த பின் வரி அதிகமாகக் கொடுக்க மக்களுக்கு அதிக ஆட்சேபனை இராதென்ற முகாந்திரத்தாலேயே சர்க்கார் முதலில் காலணா விகித அளவை விதித்திருக்கிறது எனத் தோன்றுகிறது. போகப் போக உயர்த்தவும் சர்க்கார் அதிகாரம் கொண்டிருக்கிறது. புதுத் தொழில் வரி (படிப்பாளிகளே புத்தகாலயங்களை உபயோகிப்பர் என்பதுடன், அவர்களே தொழில்களிலும் இருப்பதால்) போடவும் செய்யலாம். பிரசுரகர்த்தருக்கு விற்பனைவரி மாதிரி போடுவதற்கு எதிர்ப்பு இருக்குமென்பதுடன், அதனால் அதிகம் கிடைக்காதென்றும் தோன்றுகிறது. மேலும் புத்தகாலய வளர்ச்சிக்குப் பிரசுரக் கம்பெனிகள் அவ்வளவாக உற்சாகம் காட்டும் என்றும் தோன்றவில்லை.

நிர்வாக ஒருமைப்பாடு

மசோதாவின் 6-வது ஷரத்து தாமாகத் தம் பிரதேசத்துக்கான புத்தகாலய திட்டத்தை வகுத்து அமுல் நடத்தாத ஸ்தல ஸ்தாபனங்களை நிர்ப்பந்திக்கச் செய்யும் அதிகாரம் சர்க்காருக்கு அளிக்கிறது. ஆகவே முனிசிபாலிடி, பஞ்சாயத்து, ஜில்லா போர்டு திட்டங்களைக் கோர்வைப் படுத்தி தமக்குள்ளேயே புத்தக இரவல் கொடுக்கச் செய்யவும் ஜில்லா போர்டு நூலகம் ஜில்லாவுக்கான பொது நூலகமாக விளங்கவும் சர்க்கார் ஏற்பாடு செய்யும். 17 வது ஷரத்தின்படி சட்டதிட்டங்கள் எல்லா நூலகங்களுக்கும் ஒரே தன்மையதாய்த் தயாரிக்கச் செய்யலாம். ஸ்தலங்களுக்கேற்ற சில திருத்தங்களுக்கும் சர்க்கார் அனுமதிக்கலாம். அதன்படி மாகாணத்திலுள்ள எல்லா புத்தகாலயங்களிலும் வேலை முறைப்

பாடு, பட்டியல் பாகுபாடு முறைமையும் ஒருமைப்படுவ தால் திறமையான வேலையைத் துரிதமாகச் சாதிக்க ஏதுவாகும். பொது ஜனங்களுக்கும் புதுப் புத்தகாலயங் களில் பழகுவதும் சுலபமாகும்.

9 வது ஷரத்தின்படி புத்தகாலயங்களுக்கு வேண் டிய கட்டிடங்களையும், சாமான்களையும் பெறவும், திருத்தி அமைக்கவும் சர்க்கார் அதிகாரம் ஏற்றுக் கொண்டி ருப்பதால் ஒழுங்கான முறையிலேயே நடத்தப்படு மென்றும் நம்பலாம்.

இத்தகைய சட்டத்துக்கு ஆதி முதல் முனைந்து நின்றது சென்னை புத்தகாலய சங்கமேயானபடியால், இதில் அதிக எதிர்ப்புக்கு இடமில்லை. ராஜாஜி மந்திரி சபை காலத்தில் இது கொண்டுவரப்பட்டு, மந்திரிசபை ராஜினமா செய்ததால் அப்போது மேற் கொண்டு முன்னேறாது போயிற்று.

8-வது ஷரத்து ஸ்தல நூலக வேலையைக் குறித்து விரிவாக்குகிறது. வயோதிகருக்கும், பாலருக்கும் படிக் கத் தெரியாதவருக்கும் செய்யக்கூடிய வேலையை விளக்குகிறது. அதன்படி ஸ்தல நூலக மண்டபம் நியுஜி லாந்து சட்டத்திலிருப்பது போல ஸ்தல கலாசார மண்டபமாகும். அதில் அரங்கம், சினிமா முதலிய வசதி களுடன் உபன்னியாசங்கள், தேகாப்பியாச வகுப்புகள் நடத்தவும் வசதியிருக்கும். மேலைநாடுகளிலிருப்பது போல வசதிகளைத் தருவதுடன் நூலகங்கள் நின்று, அத்தகைய வேலைகளை நடத்தும் பொறுப்பைப் பிற ஸ்தாபனங்களுக்கு விடலாம். கிராமப் பஞ்சாயத்து சபையும் இதர ஸ்தாபனங்களும் கூடும் பொதுமண்டப

மாகவும் செய்யலாம். ஆகக் கிராம்ப் புத்தகாலயம் கிராமக் கேந்திர கலாசார நிலையமாக விளங்கக்கூடும்.

முதியோர் கல்வி

புத்தகாலய இயக்கத்துடன், முதியோர் கல்வி இயக்கத்தையும் பிணைக்கலாம் என்ற கருத்து சிலரிடை இருந்து வருகிறது. மேலை நாடுகளில் முதியோர் கல்வி இயக்கத்தில் புத்தகாலயங்களும் பங்கு கொள்ளுகிறது என்பது உண்மையே. ஆனால் அங்குள்ள முதியோர் யாவரும் படித்தவர்கள். அப்படி படித்தவர்கள் படித்ததை மறக்காதிருக்கவும், மேற்கொண்டு விஷய ஞானம் பெறச் செய்யவுமே புத்தகாலயங்கள் ஈடுபடுகின்றன. நம் நாட்டிலோ முதியோர் கல்வி என்பது நிரட்சரக் குட்சிகளாய் இருப்போருக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பதாகும். அது கல்வி இலாகா வேலை. முதியோர் கல்வி என்னுமிடத்தே சுகாதாரம், ஆரோக்கியம் மற்ற படி இதர விஷய விளக்கப் போதனைகளில் மாத்திரமே ஓரளவு புத்தகாலயங்கள் ஈடுபடலாம். ஸ்திரிகளுக்கும், பாலர்களுக்கும் சித்திரக் காட்சி, கதை சொல்லுதல் போன்றவற்றிலும் மேலை நாடுகளில் இருப்பது போல வும் புத்தகாலயங்கள் விரிவானவகையில் மேற்கொள்ள லாம். சௌகரியத்திற்கேற்ப ஆஸ்பத்திரி, ஜெயில் முதலியவற்றிலும் புத்தகாலய சேவையை விரிவுபடுத்த லாம்.

மேலும் பாடசாலைகள் ஒவ்வொரு கிராமத்திற்கும் இருக்க வேண்டும். புத்தகாலயங்கள் அப்படியல்ல. நாலைந்து மைலுள்ள (பிர்க்கா) ஒரு வட்டாரத்துக்கொரு புத்தகாலயம் போதும். சாதாரணமாக அத்தகைய புத்தகாலயங்களில் நாவல்கள் போன்றவை இருக்கப்போவதில்லை. ஆகவே பிரசுரகர்த்தர்களும் பயப் படவேண்டாம். தகவல் தருவதும், விஷய ஞானத்தைப்

போதிப்பதுமான எடுப்பான நூல்களே இருக்கப் போகின்றன. ஆகவே போதிய வாசகர் கிடைக்க, சர்வ ஜனபடிப்பு இல்லாத இத்தேசத்தில் தொகுதிக்கொரு நூலகம் போதும். ஆனால் பாடசாலை அப்படியில்லை. பாலர்கள் அன்றாடம் சென்று கற்க வேண்டிய ஸ்தலமாதலால் கிராமத்திற்கொன்று வேண்டும். அத்துடன் முதியோர் கல்வி (எழுத்தறிவித்தல்) பத்திரிகை படிப்பு, ரேடியோ, விளையாட்டுகள் முதலியனவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

நூலக ஒத்துழைப்பு

தனிப்பட்ட நூலக ஸ்தாபனங்கள் நாட்டில் பல இருக்கின்றன. அவற்றையும் சர்க்கார் புத்தகாலய திட்டத்துடன் பிணைத்து அவற்றிற்கும் பிராந்திய பொறுப்புத் தந்து சர்க்கார் மானியம் அளிக்கலாம். ராஜாஜி சென்னை பிரதமராக இருந்த சமயம் கல்லூரி நூலகங்களைப் பொது ஜனங்களும உபயோகிக்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டதென்றாலும், அவற்றின் அதிகாரிகளின் அசிரத்தையாலும், மக்களுக்கும் விஷயம் தெரியாததாலும் எண்ணியபடி அவ்வுத்திரவுக்கான பலன் கிடைக்கவில்லை. ஆகவே அது போன்ற நூலகங்களைத் திட்டத்தில் சேர்க்கையில் விசேஷப் பொறுப்பு அளித்தாலே பலன் தரும். நம் நாட்டில் நிதி சௌகரியம் குறைவானபடியாலும், அத்தகைய பல நூலகங்கள் போதிய அளவு உபயோகிக்கப்பட்டு வராதபடியாலும் அவற்றையும் திட்டத்தில் சேர்ப்பது அவசியம். பல தனிப்பட்ட நூலகங்களில் அருமையான நூல்கள் அனேக இருக்கின்றன. அவை இருப்பதும்தெரியவில்லை. அதற்கானபடி வாசகர்களும் கிடைப்பதில்லை. ஆகவே தேவைப்படுவோருக்கு அதனைக் கிடைக்கச்

செய்வதும், அவை இருப்பதைப் பிறரின் கவனத்துக்குக் கொண்டு வருவதுமாகிய வேலையும், அவற்றை ஏற்ற இடத்தில் வைப்பதும் புத்தகாலய அதிகாரிகளின் பொறுப்பாகும். பல நூலகங்கள் ஒவ்வொன்றும் ஒரே விஷயத்தில் தம் வருவாயைச் செலவிடுகின்றன. அதனால் சில விஷயங்களைப் பற்றி மிகப்பட்ட நூல்களும் பிரதிகளும், வேறுசில பற்றி ஏதுமே இல்லாமலுமிருந்து வருகிறது. அது ஒழுங்குபடுத்தப்பட்டு, அவை தனித்தனி விசேஷமான பயனளிக்கச் செய்ய (Specialised) பாகுபாடு செய்ய வேண்டும். அத்தகைய முறையில் கல்கத்தா புத்தகாலயங்கள் அதிகம் தேவைப்படாத சஞ்சிகைகள் வரவழைப்பதில் ஒத்துழைத்து வருகின்றன. ஒரு நூலகத்துக்கு வராத சஞ்சிகைகளை இன்னொரு நூலகம் இரவல் தரவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே தேவைப்படும் சஞ்சிகை கிடைக்கவில்லை என்ற குறையே அனேகமாக ஏற்படாது. அவை சஞ்சிகைகளைப் பற்றிய பொதுப் பட்டியல் (union catalogue) வைத்திருக்கின்றன.

நூலகக்காரன் இலக்கணம்

நூலகம் திறம்பட பணியாற்ற நூலகக் காரனுக்குப் பொதுவான விதிமுறைகளைத் தவிர, கட்டுப் பாடுகள் கூடாது. ஸ்தலத்துக்கு ஏற்றது போல தன் வேலையைத் திறம்படச் செய்ய எது உசிதமோ அதனைச் செய்ய அவனுக்கு அதிகாரம் வேண்டும். ஆகவே அவ்வாறான ஆட்களை நியமிப்பதில் பொதுஜன சேவையில் பொறுப்புடன், ஊக்கம் காட்டுபவரையே நியமிக்க வேண்டும். அப்போதே புத்தகாலய இயக்க லட்சியம் கைகூடும். அத்தகையோரைத் தெரிந்தெடுத்து புத்தகாலய இயக்கத்துப் பயிற்சி அளிக்க வேண்டும்.

அதைச் செய்யாவிட்டால் அவர்கள் வெறும் புத்தகக் காட்டிகளாவார்கள். ஊக்கமுள்ளவராயிருந்தும் திறம்பட வேலை செய்ய இயலாது திகைப்பார்கள். ஆலோசனைக் கமிட்டி அவனுக்கு எத்தகைய புத்தகங்கள் வாங்க வேண்டுமென்பதிலும், ஸ்தல பிரசினைகளிலும் யோசனை கூறலாம். நூலகக் காரருக்குப் புத்தக ஞானம் தவிர பொதுவான புத்தகப் பாதுகாப்பு முறையும், சில்லரை புத்தகக் கட்டட சாஸ்திர முறையும் போதிக்க வேண்டும். புத்தகாலய சேவா மனப்பான்மையும், விசேஷ ஞானமும் இல்லாவிட்டால் அவர்கள் புத்தகக் காப்பாளர்களே(Keeper of books)ஆவர். இப்போதுள்ள பலருக்கு முக்கியமாக் கிராமாந்திர நூலகக்காரருக்குக் கோடைகால பயிற்சி மாத்திரம் அளித்தாலே போதும். ஆனால் பெரிய நூலகங்களானால் நூலகத் தனிப் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றோரையே நியமித்தாலே கோர்வை வேலையும், ஒழுங்கு முறையும், (Standard) விசேஷ தனி (Specialised) வேலை செய்வதும், மற்ற சிப்பந்திகளிடம் சிறந்த வேலையை வாங்குவதும் சாத்தியமாகும். அப்போதே குறிப்பு எடுப்பு வேலையும் (Reference) திறம்படச் செய்யலாம்.

இத்திட்டத்தின் மூலம் மக்களிடை ஒரு புது மனப்போக்கை, மேற்பட்ட ஞானத்தைப் பெற விரும்பும் ஆசையைக் கிளப்பப் போகிறோம் என்ற ஆர்வத்துடன் அவர்கள் பணியாற்றவேண்டும். அதனைச் சாதிக்க, சந்தை, கண்காட்சி, திருவிழா முதலிய இடங்களில் மக்களின் கவனத்தைப் புத்தகாலய சேவையில் ஈர்க்க முயலவேண்டும். அவர்களுக்குத் தேவையான நேரான, சரியான, திருப்தியான தகவலைத் துரிதமாகத் தரச் செய்ய வேண்டியது நூலகக்காரன் கடமை தம்மிடம் இல்லை என்று தட்டிக்கழிக்காது, வேறிடமிருந்து பெறவோ, எந்த இடத்தில் கேட்டால் கிடைக்குமென்றோ

சொல்லும் வழிகாட்டியாயிருக்க வேண்டும். கிராமாந்திர வாழ்வுக்கான, முன்னேற்றத்துக்கான தகவல்களை, தொழில் வளர்ச்சிக்கான விபரங்களைத் தாமாகவே தர வேண்டும். அக்கறை காட்டாதாரையும் சிரத்தை கொள்ளச் செய்யவேண்டும். புத்தகாலய இயக்கமே ஒரு சமூக சேவா இயக்கமாகும்.

நூலகச் சட்ட அமுல்

பொதுவாக இந்நூலக வேலையை எந்தெந்த இடங்களிலிருந்து கணிசமாக நன்கொடைகள் (புத்தகங்கள், கட்டிடங்கள், நிதி வகையரு) வருகின்றனவோ அங்கே முதலில் தொடங்கலாம். கட்டிடம் தருவோரின் பெயரைக் கொண்டு மண்டபமும், பெருவாரியாகப் புத்தகங்கள் தருவோரின் பெயரில் நூலகமும் நடத்தலாம். மாகாண காரியதுரந்தரர் சிபாரிசு செய்யும் பட்டியலிலிருந்தே புத்தகங்கள் வாங்கவேண்டுமாகையால், அதற்கென்றும் தனி நன்கொடைகள் புத்தகமாகவும், ரொக்கமாகவும் பெறலாம். அத்தகைய நூலகங்களுக்குச் சர்க்கார் கஜட், யாதாஸ்துகள் முதலிய ராஜாங்க வெளியீடுகளை இலவசமாக அனுப்ப வேண்டியது சர்க்கார் பொறுப்பு. நூலக வரி வசூலிப்பைப் பெரும்பாலும் நிர்வாகச் செலவிற்கே வைத்துக் கொள்வதாயிருக்க வேண்டும். நம் நாட்டில் நூல் நன்கொடைகள் தங்கு தடையின்றி வருமாதலால், அதுவும் சர்க்கார் நிர்வாகத்திலிருக்கப் போவதால், திட்டத்தைத் தைரியமாகவே அமுல் நடத்தலாம். முதலில் ஒரு ஜில்லாவில் திட்டத்தை அமுல் நடத்தி அவ்வனுபவத்தைக் கொண்டு பிற இடங்களில் பின்னர் புகுத்தலாம். ஜில்லா புத்தகாலயத்திலிருந்து ரயில், மோட்டார் மூலம் தாலுகா நிலையங்களுக்கும், அங்கிருந்து வண்டிகள் மூலமாகக் கட்டுகளாகப் பிரக்கா நிலையங்களுக்கும், குறிப்பிட்ட

காலங்களில் (வாரந்தோறுமோ அல்லது மாதந் தோறுமோ) புத்தகங்கள் அனுப்பலாம். நியுஜிலாந்தில் பிரக்காக்களில் 3 மாதத்துக் கொருதரம் அடியோடு புத்தகங்களை மாற்றுகிருர்கள். முதல் 3 மாதம் கணித சம்பந்தமான நூல்கள் அத்தனையும் (மேல் தலைமை காரியாலயத்தில் இருப்பது) வைப்பார்கள். அவை அடுத்த மூன்றும் மாதம் வேறு பிரக்காவுக்கு மாற்றப்படும். அச்சமயம் முதல் பிரக்காவுக்கு வரலாறு சம்பந்தமான நூல்கள் யாவும் வரும். அவ்வாறு சகல விஷய புத்தகங்களும் ஒவ்வொரு பிரக்காவிலும் ஒரு தடவை வந்து போகும். அதனால் தலைமை காரியாலயத்து கையிருப்பை வாசகர்கள் அறிவதுடன், வேண்டும் போது வேண்டுவனவற்றை பின்னர் வரவழைத்துக் கொள்ளவும் சௌகரியமாகும்.

விசேஷ நூலகங்கள்

பொது நூலகங்களைத் தவிர பாரதி நூலகம், கம்பன் நூல் நிலையம், உப்புத் தொழில் புத்தகாலயம் என்பன போன்று விசேஷத்தன்மை வாய்ந்தத்தனி நூலகங்கள் பெரிதும் ஆராய்ச்சிக்கென்று அமைக்கவும் செய்யலாம். பாரதி நூலகமென்றுல் பாரதி பற்றிய சகல நூல்களும் இருப்பதுடன் அவரைப் பற்றி இதர பாஷைகளிலும் தேசங்களிலும் வெளிவந்துள்ளனவும, எத்தனை பதிப்புக்கள் வந்துள்ளனவோ அத்தனை பதிப்புக்களும் அங்கு இருக்க வேண்டும். விசேஷ (Specialised) நூலகங்களிலே அது சம்பந்தமல்லாத வேறு நூல்கள் கூடாது. அதனால் அதன் தனித்தன்மை குறைவதுடன், கவனம் பிறவற்றில் சிதறும். உப்புத் தொழில் வியாபகமாக உள்ள ஊரில் உப்பு நூலகம் வைக்கலாம். பிற பாஷைகளில் (பிரதேச பாஷை தவிர) தேவைக்கேற்றது போல, உப்பு சம்பந்தமான நூல்களைச்

சேர்த்து வைக்கலாம். அந்நூலகத்தார் அத்தொழிலைப் பற்றி புது நூல் ஏதேனும் வெளிவருமானால் அதனைப் பெற்று அதில் சிரத்தை உள்ளோரின் கவனத்துக்கு அதனைக் கொண்டு வரவேண்டும். உப்பைப் பற்றி இதற்குமேல் கிடையாது என்று அதன் நூல் சேகரம் இருக்கவேண்டும்.

பர்மிங்ஹாமில் ஒரு ஷேக்பியர் (specialised) நூலகம் இருக்கிறது. அதனை ஒரு சமயம் ஆசிரியர் ரங்கனாதன் காண நேர்ந்ததாம். அங்குள்ள தமிழ் ஷேக்ஸ்பியர் நூல் சேகரம் கண்டு தமிழில் அத்தனை ஷேக்ஸ்பியர் நூல்கள் இருக்கின்றனவா என்று பிரமித்து விட்டாராம். ஷேக்ஸ்பியர் மொழி பெயர்ப்பு, எடுத்தாளல், திரிப (Adaptation) முதலிய நூல்களின் ஒவ்வொரு பதிப்பும் அங்கு சேகரித்து வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பதிப்பும் சேகரிக்க வேண்டிய அவசியமுண்டு. வசிஷ்ட பாரதியார் கம்பராமாயணம் ஒரு சமயம் வாசிக்கையில் ஸ்ரீ ராமர் தம்பி இலக்குமணரோடு விசுவாமித்திரருடன் கங்கை கரை வழியாக அவர் ஆசிரமத்துக்குப் போகும் படலம் பிரசங்கம் செய்தார். ஸ்ரீ ராமர் சரவணப் பொய்கையைக் கண்டு அது என்ன என்று கேட்க விசுவாமித்திரர் அதன் வரலாற்றை அவருக்குக் கூறுகிறார். அன்று வசிஷ்டபாரதியார் வாசித்த பிரதியில் அக்கினிப் பொறியால் அவதரித்த கார்முகனை 'அரிவை' என்ற பதம் ஜனன காரணத்துக்குக் கூறப்பட்டிருந்தது. அது சரியல்ல வென்றும் அரி என்று இருக்க வேண்டுமென்றும், தாம் பாடம் கேட்டகாலத்தில் அரி என்று கேட்டதாகவும், அரி என்றால் அக்கினி என்றும் பொருத்தமாக விளக்கினர். அதுகால் உபன்னியாசம் கேட்டு வந்தவொருவர் தம் பிரதியில் அரியோ, அரிவையோ இல்லாது பார்வதி எனப்பதிப்பிக்கப் பட்டிருக்கிற

தென்றார். அதிலிருந்து ஒவ்வொரு பதிப்பும் காப்பாற்றப்பட வேண்டிய அவசியமும், பாடபேதமும், உண்மையும் புலனாகத் தேவை என்றும் தெரிகிறது. தவிர அமெரிக்காவிலே கிறிஸ்துவ சயின்ஸ் இயக்கம் என்ற பிரபல சீர்திருத்த இயக்கம் உண்டு. அதன் ஸ்தாபகர் ஸ்ரீமதி தாமஸ்பேகர் எட்டி தமது மூல கிரந்தத்தில் தமது கோட்பாடுகளுக்குப் பகவத்கீதை ஆதரவு கொடுத்தது என்று கூறியுள்ளார். அவ் விஷயம் ஐந்தாறு பதிப்புகளுக்குப் பிறகு நீக்கப்பட்டுவிட்டது. கீழை நாட்டு கிரந்த ஆதாரம் கூடாது எனச் சிஷ்ய கூட்டங்கள் அதனை நீக்கி விட்டன போலும். இதைப் போல் இன்னும் பல சுவிச் சக்ரவர்த்தி பாரதியார் 40 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மாதர் சஞ்சிகைக்கு ஒரு வருஷகாலம் ஆசிரியராய் இருந்தார். அதில் வெளியான கட்டுரைகள் பல பாரதி தொகுப்பு நூல்களில் வரவில்லை. ஆகவே மத்திய நூலகம் அது போன்றவற்றைக் காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

சென்னை சர்க்கார் கொண்டு வந்துள்ள புத்தகாலய மசோதா சட்டமானால், அதற்கானவர்களைக் கொண்டு அமுல் நடத்தினால் புத்தகாலய இயக்கத்தின் பலனை நாம் அனுபவிக்கலாம். ஆக நம் கல்வி மந்திரியின் இம் முயற்சியை வரவேற்க வேண்டியதுடன், உடனடியாக அமுல் நடத்த வேண்டுமென்று நாம் வற்புறுத்தவும் வேண்டும். புத்தகாலயங்களின் தொண்டு சமுதாய, கலாசார இனங்களிலே எடுப்பான முற்போக்கைக் காட்டும். மேலை நாடுகளில் தொழிலாளிகள் ஓய்வு காலத்தில் அவர்கள் மனம் சீரான விஷயங்களில் செல்ல, இப்புத்தகாலயங்கள் பெரும் பணியாற்றியுள்ளன. அதனால் அவர்கள் பண்பட்டவர்களானதுடன், தம் வாழ்க்கை முறையை உயர்த்திக் கொள்ளவும்

முடிந்தது. இந்தியர்வுக்கு இது இன்று இன்றியமை யாதது. சீரிய ஜனநாயக ஆட்சி நடைபெற வேண்டு மானால், பொது ஜனங்கள் அறிவாளிகளாயிருக்க வேண்டும். அதில்லாவிட்டால், ஆவேசத்திற்கும், இன வெறிக்கும் இலக்காகி பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளவே நேரும். ஆகவே சீரிய ஜனநாயக அரசுக் கும், பண்பட்ட குடிகளைக் கொண்ட நாடாக இருக்கவும், தேசச்செல்வம் பெருக் மக்களை அறிவாளிகளாக ஆக்க வும் புத்தகாலய இயக்கம் விரிவடைதல் வேண்டும். புத்தகாலய இயக்கம் இந்தியாவில் பரோடா சமஸ் தானத்தில் விரிவாக இருக்கிறது. அச் சமஸ்தான மக்கள் படிப்பிலும் தொழில் துறையிலும் முன்னேறி யிருப்பதும் நோக்கற்பாலது.

புத்தகாலய இயக்கத்தின் நன்மை உடனடியாகத் தெரியாவிட்டாலும், காலப் போக்கில் அதன் தொண்டு சகல துறைகளிலும் மக்களை முன் நோக்கிப் போகும் படி தூண்டும் சக்தியாக் விளங்கும்.

ருஷ்யா யுத்தத்துக்கு ஆயத்தமா?

ஹென்ரி ஜெ. டெய்லர்

ருஷ்யா மறுபடியும் ஒரு மகா யுத்தத்திற்கு ஆயத்தமாயிருக்கிறதா? மறுபடி ஓர் உலக யுத்தத்தை ஏற்று நடத்த சக்தி பெற்றிருக்கிறதா? இன்றைய உலக அரசியல் அரங்கில் இக்கேள்விகள் அதிகமாகக் கேழ்க்கப்படுகின்றன. இதற்குத் தகுந்த விடை காணவேண்டுமாயின் அந்நாட்டின் வளமையையும் கைத்தொழில் பொருளாதார நிலைமையையும் நன்கு ஆராய வேண்டும்.

சோவியத் யூனியனின் பொருளாதார அமைப்பைப் பற்றிய விவரங்கள் அதிகமாகக் கிடைத்திரா விட்டாலும், அவற்றைப் பற்றிய சில முக்கிய அடிப்படை உண்மைகள் கிடைத்திருக்கின்றன. முதன் முதலில் நாட்டின் பரப்பையும், ஜனத்தொகையையும் கவனிப்போம். செல்வமும், வசதியும் நிறைந்த செழிமையான பெரும் நிலபரப்புடைய நாடு ருஷ்யா என்று நினைப்பது தவறாகும்.

ருஷ்யா ஜெர்மனியைவிட 45 மடங்கு அதிகமான நிலபரப்புடையது. ஆனால், பாதி பாகத்திற்குமேல் காடுகளே. ஏறக்குறைய ஐந்தில் ஒரு பாகம் பாலைவனப் பிரதேசம். எஞ்சியுள்ளதில் எட்டில் ஒரு பங்குதான் வளம் பெற்ற நிலப்பகுதி.

142,000,000 ஜனத்தொகையுடைய அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிலப்பரப்பைத்தான், 192,000,000 ஜனத்

தொகையுடைய ருஷ்யாவும் உடையது. ஜனப் பெருக்கத்திற்குத் தகுந்தாற்போல, ருஷ்யாவின் உணவுப் பொருள் உற்பத்தி பெருகவேயில்லை.

ஏறக்குறைய 50,000,000 ருஷ்ய ஜனங்கள் தொலைவிலுள்ள காடுகளிலும், டண்டாரப் பிரதேசங்களிலும் அங்குமிங்குமாக வசிக்கிறார்கள். ஆகையால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனத் தொகையவ்வளவுதான், ருஷ்யாவிலும் ஜனங்கள் உற்பத்தியில் ஈடுபடுகின்றனர்.

ருஷ்யாவின் கைத்தொழில்கள் லெனின் கிராடிலிருந்து மேற்கே யூக்ரேன் வரையிலும் மற்றும் மத்திய சைபீரியா வரையிலும்தான் பரவியிருக்கின்றன. இப்பகுதி ருஷ்யாவின் மிகச் சிறிய பாகமாகும். ஆயினும் இங்குதான் ருஷ்யாவின் பொருளாதார முன்னேற்ற மூலசக்தி இருக்கிறது. போதுமான பாதுகாப்புடையதுமல்ல.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் 48 வருஷங்களுக்குமுன் எவ்வளவு உற்பத்தி செய்தனவோ அவ்வளவேதான் இன்று ருஷ்யா உற்பத்தி செய்கின்றது.

ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து ஆகிய நாடுகள் இரண்டாவது உலக் யுத்தத்தில் பெரிதும் நஷ்டமடைந்தன என்பது நமக்குத் தெரிந்ததே.

அதே போல ருஷ்யாவும் இரண்டாவது உலக யுத்தத்தில், 58% ரயில் சாமான்களையும், 45% எஃகையும், 44% மின்சாரச் சாதனத்தையும், 55% நிலக்கரியையும் ஐந்தில் ஒரு பங்கு கால்நடைகளையும், ஆயிரக்கணக்கான வீடு வாசல் கட்டிடங்களையும் இழக்கநேர்ந்தது.

யுத்த முடிவில், அமெரிக்காவின் உற்பத்தி சக்தியில் 25% தான் குறைந்தது. ஆனால் ருஷ்யாவில் 42% குறைந்து போயிற்று. எல்லாம் சரிவர நடந்தால்—

ஆனல் ருஷ்யாவில் ஒன்றும் சரிவர நடக்கவில்லை என்றே தோன்றுகிறது—1904 ம் வருஷத்தில், அதாவது, 44 வருஷங்களுக்கு முன், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் சக்தி எவ்வளவு இருந்ததோ அவ்வளவு சக்தியைத்தான் 1951-ம் வருஷத்தில் ருஷ்ய பெறக்கூடும்.

1918 ம் வருஷத்தில் அமெரிக்காவில் இருந்த உற்பத்திப் பெருக்கத்தை ருஷ்யா 1960ம் ஆண்டில்பெறும்.

1946 ம் வருஷம் பிப்ரவரிமாதம் 9 ம் தேதி ஐந்தாண்டு திட்டத்தைத் துவக்கி வைத்த போது ஸ்டாலின் கூறியதாவது:

''யுத்த காலத்துக்கு முன் நமது உற்பத்தி சக்தி எப்படி இருந்ததோ, அந்நிலைக்கு, நமது கைத்தொழிலையும், விவசாயத்தையும் கொண்டுவரப் பாடுபடுவதே நமது முக்கிய வேலையாகும். அவ்விதம் செய்வதற்கு இது போன்ற மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் அவசியமாக இருக்கலாம். எனினும், அதனைச் சாதித்தே தீரவேண்டும்.''

இதிலிருந்தே ருஷ்யாவின் கைத்தொழில், விவசாயம் ஆகிய துறைகளின் நிலைமை நன்கு புலனுகும். இதுவரை ஓர் ஐந்தாண்டு திட்டத்தைக் கூட ருஷ்யா பூரணமாக முடித்ததில்லை என்பதை மறக்கலாகாது.

1951 ம் வருஷத்தில் 60, 000, 000 டன் எண்ணெய் உற்பத்தியாகவேண்டுமென்று ஸ்டாலின் தமது திட்டத்தில் குறிப்பிட்டுள்ளார். இதனை 28 ஆண்டுகளுக்கு முன்னரே அமெரிக்கா சாதித்துவிட்டது. 1947 ம் வருஷத்தில் அமெரிக்கா 270,000,000 டன் எண்ணெய் உற்பத்தி செய்திருக்கிறது. பெட்ரோலியம் கிடைப்பது அரிதாகையால் நிலக்கரி முதலிய இதர பொருள்களையே தனது இயந்திரச் சாதனங்களுக்கு உபயோகித்து வருகிறது ருஷ்யா.

ருஷ்யாவின் நிலக்கரியில் 30% அதன் ரயில்வேக்களிலே எரிக்கப்படுகிறது. மின்சாரத்திற்காக 30% நிலக்கரி எரிக்கப் படுகிறது. எஞ்சியுள்ள 40% தான் கைத்தொழிலுக்குக் கிடைக்கக் கூடும்.

1951-ம் ஆண்டில் 500,000,000 டன் நிலக்கரி பிரதி வருஷமும் உற்பத்தியாக வேண்டுமென்பது ஸ்டாலின் திட்டம்.

முப்பது வருஷங்களுக்கு முன்னே அமெரிக்காவின் நிலக்கரி உற்பத்தி இதை விட அதிகம்.

யுத்தத்திற்கான சாமான்கள் செல்வதற்கு அத்தியாவசியமான tungsten, molybdenum, tin, antimony, முக்கியமாக ரப்பர் முதலியன ருஷ்யாவுக்குக் கிடைப்பதில்லை. இயற்கை ரப்பர் கிடைக்க, போதுமான போக்குவரத்து வசதியுமில்லை; செயற்கை ரப்பர் செய்து கொள்ள, போதுமான தொழிற்சாலைகளும் கிடையாது.

சரியான போக்குவரத்து இன்மையே ருஷ்யாவின் பலக்குறைவுக்குக் காரணம். கப்பல்கள் மிகக் குறைவாகவே உள்ளன. உள் நாட்டு போக்கு வரவுதான் விசாலமான நிலபரப்புள்ள ருஷ்யாவுக்கு முக்கியம். ஆனால் ரஸ்தாக்கள் மிகக் குறைவு. அவைகளும் மோசமான நிலையிலுள்ளன.

கால்வாய்கள் இல்லாமையால் அவற்றின் மூலமாயும் போக்குவரத்து சாத்தியமில்லை. ருஷ்யாவில் உள்ள சில பெரிய நதிகளும், வருஷத்தில் பல மாதங்கள் பனியால் உறைந்து கிடக்கும்.

ஆகையால் ருஷ்யாவின் உற்பத்திப் பொருள்களில் 83% யை ரயில் மூலமாய்த்தான் இங்குமங்கும் கொண்டு போகவேண்டும். ருஷ்யாவிலுள்ள ரயில்களின் மொத்த

நீளம் 57,000 மைல். ஆனால், அமெரிக்க ரயில் பாதை யின் நீளம் 226,000 மைல்.

இப்போதைய ஐந்து வருஷ திட்டத்தின் படியும் 4500 மைல் நீளமுள்ள ரயில் பாதைத்தான் போடுவார்கள். ஏனெனில் நாட்டின் மேற்குப் பாகத்திலுள்ள ரயில் பாதைகள் ஜெர்மானியரால் யுத்தத்தில் சேதப்படுத்தப் பெற்றமையால், அவற்றைப் பழுது பார்த்து நேர் செய்வதையே முதலாவதாக் கவனிக்க வேண்டியிருக் கிறது. யூரலிலும் சைபீரியாவிலும் உள்ள ரயில்களில் 3000 மைல் மின்சாரந்தால் ஓடுவன.

ருஷ்யா ரயில்பாதைச் சாமான்கள் பல ஈடு செய்யப் பெற வேண்டியிருக்கின்றன. இன்று ஓடிக் கொண் டிருக்கும் ரயில் என்ஜின்கள் அவ்வளவும் தேய்ந்து பழுதடைந்தவை. அவற்றிற்குப் பதிலாகப் புதிய என் ஜின்களைப் போடவேண்டும்.

சோவியத் இன்ஜினியர்களும், ஸ்வீடன் இன்ஜினி யர்களும் சேர்ந்து, அமெரிக்க என்ஜின்களை மாதிரியாக வைத்து, புதுப்புது என்ஜின்கள் செய்கிறார்கள்.

மோட்டார்கார் உற்பத்தியைக் கவனித்தாலே ருஷ்யா வின் பலவீனம் நன்கு விளங்கும். அரசாங்கத்துக்குச் சொந்தமான, ஆனால் அதனை நடத்தும் அரசியல் கட்சியின் ஆதிக்கத்துக்குப்பட்டதுமான இந்த மோட் டார்கார் தொழிற் சாலைகளில் அமெரிக்க அல்லது பிரிட்டிஷ் மோட்டார்கார் மாதிரியைச் சிறிய மாற்றங் களுடன் அப்படியே பின்பற்றி மோட்டார் கார்கள் உற்பத்திச் செய்ய பெறுகின்றன. அவை உறுதியாக் இருப்பதில்லை; ஒரு வண்டி 8000 மைல் தான் ஓடும்.

ருஷ்யாவின் ஆள்பலம் மிக் மிக் அதிகமானது. தொழிற் சாலைகளிலும் இதர ஸ்தானங்களிலும் பெருவாரியான மக்கள் வேலை செய்கிறார்கள். நிலக்கரி

அனேகமாகக் கையாலேயே வெட்டி எடுக்கப் பெறுகின்றது. கட்டாயவேலை அதிகம். மக்கள் வேலை செய்தேயாக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருப்பதால் சுதந்திரத்துடன் நடைபெறும் உற்பத்தியை விட, கட்டாய வேலையால் மிகக்குறைவான உற்பத்தியே செய்யப் பெறுகின்றது.

இந்தியாவுக்கும் சீனுவுக்கும் ஒப்ப உலகத்திலேயே அதிகமான ஆள்பலமுள்ள நாடு ருஷ்யா.

ஆனல் தேர்ச்சி பெற்ற தொழிலாளிகள் மிகமிகக் குறைவு. 1960-ம் வருஷத்தில் கூட ருஷ்யாவின் ஒரு தொழிலாளி, 30 வருஷங்களுக்கு முன் அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தொழிலாளி ஒருவன் செய்யும் வேலையில் பாதிதான் செய்யக்கூடுமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

ஸ்டாலின் ஐந்து வருஷ திட்டத்தின் படி வருஷா வருஷம் அரசாங்கத்தால் நடத்தப் பெறும், பயிற்சி சாலைகளில் தொழிலாளருக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப் பெற்றிருக்கிறது. அதன்படி 6,000,000 பேரே தேர்ச்சி பெறக்கூடும்.

ருஷ்யாவின் ஆதிக்கத்துக் குட்பட்ட ஐரோப்பிய நாடுகள் ருஷ்யாவின் இத்தகைய குறைகளை நிவர்த்திக்கப் பெரிதும் உதவுகின்றன என்பதை நாம் மறக்கக் கூடாது. ருஷ்யா எப்பொழுதும் மேற்கு ஐரோப்பா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளையே தனக்குத் தேவையான உற்பத்திப் பொருள்களுக்கும், பயிற்சி பெற்ற தொழில் நிபுணர்க்கும் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

ருஷ்யாவின் அணுசக்தி பலம் எப்படி என்பது அடுத்தபடி கவனிக்க வேண்டியது.

ருஷ்யா அணுக்குண்டு செய்ய முடியுமா? அப்படியானல் எவ்வளவு செய்ய முடியும்? அணுக்குண்டு எப்படி செய்வது என்பதைப் பொதுவாக ருஷ்யர் அறிந்திருக்கிருர்களே யொழிய அதனை எப்படி உபயோகிப்பது அல்லது அதனை எப்படி பயன்படக் கூடிய வகையில் தயாரிப்பது என்பதெல்லாம் அவர்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை என்பது தலை சிறந்த அமெரிக்க பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கருத்து.

அணுசக்தி உற்பத்திக்கான தொழிற் சாலைகளை அமைக்கக்கூட போதுமான வசதி ருஷ்யாவுக்கு இல்லை என்றே சொல்லவேண்டும். அப்படியே ருஷ்யா அணுக்குண்டு செய்ய வசதி ஏற்படுத்திக் கொண்டு, அணுக்குண்டு செய்யத் தொடங்குவதாக வைத்துக் கொண்டாலும், ருஷ்யர் ஓர் அணுக்குண்டு செய்வதற்குள், 18 வருடங்களில் செய்யக் கூடிய அணுக் குண்டுகளை அமெரிக்கா செய்து குவித்துவிடும்.

உலகத்தின் அமைதியைக் குலைக்கக்கூடிய வகையில் தான் ருஷ்யாவின் போக்கு இன்றுள்ளது; ஆனல் அதன் நிஜமான பலமென்னவோ மிக்குறைவாகவே இருக்கிறது.

தன் நாட்டிலிருந்தபடியே வேண்டுமானல் ருஷ்யா தன்னைக் காத்துக் கொள்ள போரிடக்கூடும்; அண்டை நாடுகளைத் தாக்கவோ அல்லது அடுத்துள்ள நாடுகளின் படையெடுப்பைத் தடுக்கவோ போதிய பலம் பெற்றிருப்பதாகவும் கொள்ளலாம். ஆனல், நாடு கடந்து, தொலைவிலுள்ள அமெரிக்காவையோ, அல்லது இதர நேச நாடுகளையோ தாக்கிச் சண்டைக் கிழுக்க முடியவே முடியாது.

உலகத்தின் நிலப்பகுதியில் ஆறில் ஒரு பங்கு ருஷ்யா. இந்த இயற்கையான பூகோள அமைப்புத்தான்

அந்நாடுக்குப் பெரிதும் சாதகமாக இருக்கிறது. அந் நாட்டினுள் சுலபமாகப் புக முடியாதபடியுள்ளது அதன் அமைப்பு.

இந்த இயற்கை அமைப்புப் பலத்தைக் கொண்டு தான் உலக அரசியலில் ருஷ்யா இன்று விசித்திரமான ஒரு போக்கைப் பின்பற்றிச் செல்லுகிறது.

சாதாரண இராஜ தந்திரத்தாலும், ஐந்தாம் படைகளைக்கொண்டும், அருகிலுள்ள சிறிய நாடுகளைக்கைப் பற்றிக் கொண்டுள்ளது. அதே விதமான தந்திரங் களையும் ஐந்தாம் படை சூழ்ச்சிகளையும்தான் உப யோகித்து உலக நிலைமையில் நெருக்கடி உண்டுபண்ணி வருகிறது ருஷ்யா.

ருஷ்யா உண்மையில் மறுபடி ஒரு யுத்தத்தை விரும்பவில்லை. உலக அமைதியைக் குலைத்து, ஐந்தாம் படைத்தந்திரங்களால் நெருக்கடி உண்டுபண்ணி, அவற் றைப் பயன் படுத்திக் கொண்டு, உலக அரசியலில் முக்கியத்துவம் பெறவும், பொது உடைமை கட்சிக்கு ஆக்கந் தேடவுமே ருஷ்யா முயலுகிறது.

(ரீடர்ஸ் டைஜஸ்டு)

ஸ்டர்லிங் ஒப்பந்தம்

"மாணவன்"

ஸ்டர்லிங் மிச்சம் என்கிற பிரிட்டன் இந்தியர்வுக்குக் கொடுக்க வேண்டிய சுமார் 120 கோடி பவுன் செலர்வணி இருப்பைத் திருப்பித் தருவது சம்பந்தமாக இந்திய சர்க்காரின் சார்பில் ஒரு தூதுகோஷ்டி இந்திய நிதி மந்திரி ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் இங்கிலாந்து சென்று, பிரிட்டிஷ் நிதி மந்திரி ஸர். ஸ்டாபோர்டு கிரிப்ஸுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்த ஒப்பந்தத்தின்படி 1951-ம் வருஷத்திற்குள் பிரிட்டன் இந்தியர்வுக்கு ஸ்டர்லிங் இருப்பின் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுப்பதற்கான ஷரத்துக்களும் எஞ்சியுள்ள தொகையைத் திருப்பிக் கொடுப்பது சம்பந்தமாக மறுபடி 1951-ம் வருஷத்துக்குப் பிறகு பேச்சு வார்த்தை நடத்துவது என்றும் முடிவாகியிருக்கிறது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் முடிவிலும் அதிகாரமாற்றத்தின் விளைவாகவும் இந்தியாவில் பிரிட்டன் விட்டுச் சென்ற யுத்த தளவாடங்களின் பிரிட்டிஷ் கணக்குப் புத்தகங்களின் புள்ளி விபரப்படி மதிப்பு $37\frac{1}{2}$ கோடி பவுன். அதற்காக, பிரிட்டன் தரவேண்டிய இங்கிலாந்து பாங்கியிலுள்ள இருப்பிலிருந்து 10 கோடி பவுன் இந்தியர் பிரிட்டனுக்குத் தருவதென்று முடிவு செய்யப் பெற்றிருக்கிறது.

அடுத்தபடியாக, இந்தியாவில் வேலை பார்த்து விட்டு, உத்தியோக காலம் முடிந்து இப்போது இங்கிலாந்திலிருப்பவர்களுக்குக் கொடுக்க இருக்கும் உபகாரச் சம்பளம் பொறுப்புக்காக சுமார் $16\frac{1}{2}$ கோடி பவுன் இந்தியாவின் இருப்பிலிருந்து ஒதுக்கி யிருக்கிறார்கள்.

பிரிட்டன் இன்னும் மூன்று வருஷத்திற்குள், இந்திய ரிசர்வ் பாங்கிக்கு 16 கோடி பவுனை மாற்றித்தரும். (அதாவது ஏற்கெனவே தற்காலிக உடன்படிக்கைப்படி தரவிருக்கும் 8 கோடி பவுனும், இந்த ஒப்பந்தப்படி 8 கோடி பவுனும் சேர்ந்து 16 கோடி பவுன்.)

இந்தத் தொகைகள் போக எஞ்சியுள்ளது சுமார் 64 கோடி பவுன் இருக்கும். இந்த 64 கோடி பவுனில், சாதாரணச் செலாவணி இருப்பாக வைக்க உத்தேசித்திருப்பதாக இந்திய நிதி மந்திரி கூறிய 20 கோடிபவுன் போக மீதமுள்ள 44 கோடி பவுன் இருப்பைத் திரும்பப் பெறுவதற்கான பேச்சுவார்த்தை 1951-ம் வருஷத்திற்குள் மறுபடி நடைபெற வேண்டும். ஸ்டர்லிங் நிதி சம்பந்தமாக இந்த ஒப்பந்தத்தினூடே நாணயமாற்ற ஏற்பாடு ஒன்றும் செய்து கொள்ளப்பெற்றது.

அதன்படி மூன்று வருஷத்தில் இந்தியாவுக்குக் கிடைக்கும் 16 கோடி பவுனில் 1948—49-ம் வருஷத்தில் $1\frac{1}{2}$ கோடி பவுன்வரை டாலர் நாணய மாற்றுக் (Dollar Exchange) அல்லது வேறு கடினச் செலாவணியாக (Hard Currency) தருவதற்குப் பிரிட்டன் ஒப்புக் கொண்டுள்ளது.

1949-ம் வருஷம் முடிய மறுபடி நாணய மாற்றம் சம்பந்தமான பேச்சுவார்த்தைத் துவக்குவது கவனிக்கப்பெறும்.

ஒப்பந்தத்தின் முக்கியமான இந்த அம்சங்களைத் திருப்திகரமற்றன என்பாரும் உண்டு.

யுத்த தளவாடங்களுக்காக் இந்தியர் 10 கோடி பவுன் தந்திருக்கக் கூடாது; ஐரோப்பாவிலும், இதர பிரதேசங்களிலும் பிரிட்டன் விட்டுவந்த தளவாடங்களுக்காக ஒன்றும் பெறக்கூடவில்லையே; அப்படி இருக்க இந்தியாமட்டும் 10 கோடி பவுன் தரவேண்டிய அவசியமில்லை. இது ஒரு சாரார் கூற்று. அதே போல இந்தியாவைச் சுரண்டிக் கொண்டு போனது போதாதென்று, பிரிட்டிஷ் ஆதிக்கச் சுரண்டலை நினைவூட்டும் சின்னமாக, இந்தியாவில் வேலை பார்த்து, ஓய்வு பெற்று இங்கிலாந்திலுள்ளவர்க்கு உபகாரச் சம்பளத்தை ஏன் இந்தியாவிற்குச் சொந்தமான ஸ்டர்லிங் இருப்பிலிருந்து தரவேண்டும் என்பது மற்றொரு விவாதம்.

இப்பொழுது செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் திருப்தியளிக்கக் கூடிய ஒப்பந்தம் என்றோ இல்லை என்றோ விவாதிப்பதில் பயனில்லை.

இன்றுள்ள சூழ்நிலையிலும் சுற்றுச்சார்பிலும் பிரிட்டனுடன் இந்தியா சௌஜன்யமாக பயன் தரக்கூடிய அதாவது அமுல் நடத்திப் பயனடையக் கூடிய ஓர் ஒப்பந்தத்தைக் காண்பதே இந்திய அரசாங்கத்தின் நோக்கமாகும் என்பதை மறக்கக் கூடாது.

சமூகத்தில் தனி மனிதருள் கொடுக்கல் வாங்கல் (லேவாதேவி) செய்வதைப்போல சர்வதேச அரங்கிலும் செய்யக் கூடுமென்பது அர்த்தமற்றதே.

தனி மனிதன் ஒருவன் இன்னொருவனுக்குத் தர வேண்டிய கடனைத் திருப்பிப் பெற நீதி ஸ்தலங்களில் வழக்கிடவும், கடன் பட்டவனுடைய சொத்துக்கள் மூலம் கடனை ஈடு செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கவும் கூடும்.

ஒரு நாடு இன்னொரு நாட்டுக்குத் தரவேண்டிய கடனை மேலே கூறிய முறைகளை அனுஷ்டித்து திருப்பிப்பெற முடியாது. ஒன்று தூதனுப்பி ஒப்பந்தங்கள் மூலம் திருப்பிப் பெருவது; இல்லையேல் போர் தொடுத்து கடன்பட்ட நாட்டை ஆதிக்கங் கொள்வது. போர் முறையைக் கையாள்வது இன்று இந்தியாவுக்குச் சாத்தியமல்ல.

இரண்டாவது யுத்தத்திற்குப் பிறகு பிரிட்டனின் பொருளாதார நிலைமை—உள் நாட்டிலும், வெளி நாட்டிலும்—மிகமிக சீர் குலைந்திருக்கிறது. தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூட முடியாத நிலையிலிருக்கிறது. பிரிட்டனின் உற்பத்திச் செல்வம் மிக் மிக்க் குறைவாக இருக்கிறது.

ஆகையால் ஸ்டர்லிங் இருப்பைப் பூராவுமோ அல்லது பெரும் பகுதியையோ உடனடியாகப் பொன்னுக்வோ, பொருளாகவோ பெற வேண்டுமென்பதெல்லாம் இப்போது சாத்தியமேயல்ல.

பிரிட்டனின் இன்றைய பொருளாதார உற்பத்தி நிலைமைக்கும், நமது அத்தியாவசியத் தேவைக்கும் தகுந்தாற் போல், சமரச மனப்பான்மையுடன் இந்த ஒப்பந்தத்தை இந்திய தூதுகோஷ்டியினர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

நாம் கவனிக்க வேண்டிய அல்லது ஒப்புக் கொள்ள வேண்டிய இன்னொரு விஷயமும் இருக்கிறது. நமது நாட்டின் பொருள் உற்பத்தி நிலைமை எப்படி இருக்கிறது என்றும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். உற்பத்தி பெருக்கம் அதிகமாய் இருந்து பிரிட்டனிடமிருந்து நாம் பெறக்கூடிய தொகை குறைவாக இருந்தால், பிரிட்டனை அதிகமாகத் தரத்தான் வேண்டுமென்று நாம் நிர்ப்பந்திக்க முடியும்.

1948-ம் வருஷம் ஜூன் மாதமுடிவிற்குள் நமக்கர்க ஒதுக்கப்பெற்ற 830 லட்சம் பவுனில் 30 லட்சம் பவுனுக்குச் சரியர்ன உற்பத்திப் பொருளேயே நாம் பெற்றிருக்கிறோம். 8 கோடி பவுன் அப்படியே உபயோகிக்கப் பெருமலே இருக்கின்றது.

கிடைத்த வசதியையும் நர்ம் சுறுசுறுப்பர்கப் பயன் படுத்திக் கொள்ளவில்லை என்றும், அவ்வளவு தொகைக்குத் தேவையே இல்லை என்றும்தான் பிறர் நினைக்கக்கூடும்.

ஆனுல், இதன் உண்மை என்ன? இந்தியாவுக்கு அத்தியாவசியமாகத் தேவையான பொருள்கள் போதுமர்ன அளவுக்கு வெளிநாடுகளில் கிடைக்காததால் தர்ன், 8 கோடிப் பவுனையும் உபயோகிக்க இந்தியாவர்ல் முடியாமற் போர்னது. பிரிட்டனே நமக்குத் தேவையான யந்திரக் கருவிகளை எல்லாம் தரக்கூடிய நிலையிலுமில்லை.

இந்தியாவிலும் பொருளுற்பத்தித் திட்டங்களைப் பெருவாரியாக அமுல் நடத்த உடனடியான ஏற்பாடுகள் செய்தர்ல், இப்போது ஒதுக்கப் பெற்றுள்ள 16 கோடி பவுனையும் அதற்கு இரட்டிப்பர்கவும் உபயோகிக்க வசதியும் தேவையும் இருக்கும்.

மற்றும் நாணயமாற்ற ஒப்பந்தப்படி நமக்கு ஒரு வருஷத்திற்கு, அதாவது 1949-ம் வருஷம் ஜூன்மாதம் வரை ஒன்றரை கோடி பவுன்தான் டாலர் மாற்றத்தில் கிடைக்கும். இது மிக மிக்க் குன்றவுதான். இதற்குப் பிரிட்டனின் பொருளாதார நிலையே காரணம்.

பொர்ருளாதார நெருக்கடியில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் பிரிட்டனுக்கு அமெரிக்காவிட மிருந்தான்

டாலர் கிடைக்கவேண்டும். அப்படி அமெரிக்கா கொடுக்கும் டாலரைப் பிரிட்டன் தன் நாட்டுப் பொருள் உற்பத்திக்காகவே உபயோகிக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையின் கீழ் பெறுகிறது.

தனது தேவைக்கும், உற்பத்திக்கு அத்தியர்வசியமான யந்திரச் சாதனங்களுக்கும் அமெரிக்காவை எதிர்பார்த்து நிற்கும் பிரிட்டனிடமிருந்து நமக்குத் தேவையான அத்தியர்வசியமான யந்திர உற்பத்திக் கருவிகள் கிடைக்குமென்பது சந்தேகம்தான்.

ஆனால், இந்த ஒப்பந்தத்தின்படி ஸ்விட்ஜர்லர்ந்து' ஸ்வீடன், செக்கோஸ்லோவேகியா, பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய நாடுகளில் இனி ஸ்டர்லிங்கையே உபயோகிக்கலாம். இதனைப் பயன்படுத்தி, நம் நாட்டு உற்பத்தியைப் பெருக்கி, ஏற்றுமதியை அதிகப் படுத்தி அதன் மூலம் வர்த்தகத் துறையில் டாலரும் ஸ்டர்லிங்கும் பெறக்கூடும்.

அவ்விதம் கிடைக்கும் ஸ்டர்லிங்கையும் டாலரையும் வெளிநாட்டு ஆடம்பரப் பொருள்களையும், அலங்காரப் பொருள்களையும் பெறுவதற்காக விரயம் செய்யாமல், தொழில் வளர்ச்சிக்காகவும் உற்பத்திப் பெருக்கத்திற்காகவும் அத்தியர்வசியமான யந்திர கருவிகளை வாங்குவதற்காகவே உபயோகிக்க, தேசபக்தியுள்ள நாம் அனைவரும் கடமை பட்டுள்ளோம் என்பதை உணர வேண்டும்.

ஒப்பந்தம் ஏற்பட்ட விவரத்தை விளக்கி இந்தியாவின் நிதிமந்திரி ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் ஜூலை மாதம் 15-ம் தேதி டில்லியில் பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில் கீழ்க்காணுமாறு விளக்கிக் கூறினார்.

ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாவன:

(ரூ 132 கோடி) 10 கோடி பவுன் செலுத்தி இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் ராணுவப் பொருள்கள் தளவாடங்கள் முதலியவற்றிற்கு இறுதியாக முழுக் கணக்கையும் தீர்த்து விடுவதென்று முடிவானது. இவற்றிற்குக் கணக்குப் புத்தகத்தில் உள்ள கணக்குப் படி ரூ. 500 கோடி ($37\frac{1}{2}$ கோடி பவுன்) மதிப்புப்போடப் பட்டிருக்கிறது.

குறிப்பு: பவுன் என்பது தங்கமோ, தங்க நாணயமோ அல்ல. அது ஒரு கரன்ஸி நோட்டு. ஒரு பவுன் நோட்டானது ரூ. 13–5–4 க்கு சமம். அதாவது 3 பவுனுக்கு ரூ. 40 சமம்.

பென்ஷன் பொறுப்பு

பிரிட்டனில் உள்ளவர்களுக்கு இந்திய சர்க்கார் கொடுக்க வேண்டிய பென்ஷன்களுக்காக வருஷத்தில் $62\frac{1}{2}$லக்ஷம் பவுன் (ரூ 8 கோடி) இந்தியா கொடுக்க வேண்டும். இது சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்காரிடம் 1475 லக்ஷம் பவுன் (ரூ. 197 கோடி) ஒப்படைக்கப்பட்டு வருஷவாரித் தவணைகளில் கழிக்கப்பெறும். இவ்விதம் கழிக்கப்பெறும் தொகை இந்த வருஷம் 63 லக்ஷமாக இருக்கும். இனி வருஷா வருஷம் இந்தத் தவணைத் தொகை குறைந்து கொண்டே வந்து 60 வருஷத்தில் தீர்ந்துவிடும்.

மாகாணங்களின் பொறுப்பு சம்பந்தமாக இந்தக் கணக்கில் 205 லக்ஷம் பவுன் (ரூ. 27 கோடி) செலுத்த வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மூன்று வருஷ ஒப்பந்தம்

பாக்கியுள்ள ஸ்டர்லிங் மிச்சத் தொகையை உபயோகித்துக் கொள்வது சம்பந்தமாக 3 வருஷம் வரை

ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்திற்குள் 800 லக்ஷம் பவுன் (106½ கோடி) பிரிட்டன் திருப்பிக் கொடுக்கும். இதைத் தவிர ஏற்கெனவே பிரிட்டன் தர ஒப்புக் கொண்டுள்ள ஸ்டர்லிங்கில் மிச்சமுள்ள 800 லக்ஷம் பவுனும் இதோடு சேரும்.

தற்சமயம் ஏற்றுமதிகளின் மூலம் இந்தியர்வுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு நாணயங்களைத் தவிர இந்த 3 வருஷ கர்லத்தில் இந்தியாவுக்குக் கிடைக்கக் கூடிய மொத்த வெளிநர்ட்டு நாணய மாற்று வசதி 1600 லக்ஷம் பவுன் அல்லது ரூ. 213 கோடியர்கும்.

பர்க்கியுள்ள ஸ்டர்லிங் மிச்சத்திற்குச் சுமார் 0·78 சதவிகிதம் வட்டி பிரிட்டன் தரும்.

டாலர் வசதி

டாலர் வசதி விஷயத்தில் முதல் வருஷத்தில் 150 லக்ஷம் பவுனை (ரூ 20 கோடி)யை எந்த நாட்டு நர்ணய மர்க்வும் மர்ற்றிக் கொள்ள பிரிட்டிஷ் சர்க்கர்ர் வசதி செய்து கொடுக்க் ஒப்புக் கொண்டிருக்கிறது. இதைக் தவிர சமீபத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் விளைவாக பல நர்டுகள் (இந்தியாவைப் பொறுத்தவரை ஸ்விட்ஜர்லர்ந்தும் ஸ்வீடனும் முக்கியமானவை) சுலபமர்க நாணயமர்ற்று செய்யக் கூடிய பிரதேசங்களர்கி விட்டன.

அடுத்த 3 வருஷங்களில் ஸ்டர்லிங் மிச்சத்திலிருந்து கொடுக்கப்படும் 1600 லக்ஷம் பவுன் (ரூ. 213 கோடி) தான் இந்தியர்வுக்கு உள்ள வெளி நர்ட்டு நாணய மாற்று வசதி என்று கருதக் கூடாது. தற்சமயம் ஏற்றுமதிகள் மூலமும் இதர லர்பங்கள் மூலமும் இந்தியாவுக்கு வருஷத்தில் ரூ. 500 கோடி கிடைக்கிற

தென்றும் இவ்விதம் கணக்கிட்டுப் பார்த்தால் அடுத்த 3 வருஷங்களில் ரூ. 1700 கோடி வரை பொருள்களை வாங்கக்கூடிய சக்தி இந்தியாவுக்கு இருக்கிறது. அடுத்து வரும் வருஷங்களில் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் அதிகரித்தால் வெளிநாட்டு நாணய மாற்று வசதியும் அதிகரிக்கும்.

சென்ற ஒரு வருஷத்தில் இரு ஆறு மாத ஒப்பந்தங்களின் விளைவாகத் திருப்பிக் கொடுக்கப்பெற்ற 830 லக்ஷம் பவுனில் ஒப்பந்த காலக் கடைசியில் 30 லக்ஷம் பவுன்தான் உபயோகமாகி யிருக்கிறது; 800 லக்ஷம் பவுன் மிச்சமிருக்கிறது.

ஆடம்பரப் பொருள்கள் இறக்குமதியைத் தடை செய்வதற்காகவே இந்தியாவில், பொருளாதார நலனை முன்னிட்டு இறக்குமதி கட்டுப்பாடு விதிக்கப்பெற்றது. இயந்திரச் சாதனங்கள் இறக்குமதி செய்வதற்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை.

பிரிட்டிஷ் முதலாளிகளுடனும் வர்த்தகர்களுடனும் அதிகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும், குறைந்த காலத்திற்குள் இயந்திரங்களையும் இதர பொருள்களையும் இறக்குமதி செய்வதற்காகவும் இந்திய சர்க்கார் தங்கள் வர்த்தக ஸ்தாபனத்தைப் பலப்படுத்த விரும்புகிறார்கள்.

ஸ்டார்லிங் பிரதேசங்களிலிருந்தாகட்டும் டாலர் பிரதேசங்களிலிருந்தாகட்டும் இயந்திரச் சாதனங்கள் இறக்குமதி செய்வதற்கு நாணய மாற்று வசதி அளிக்க இந்திய சர்க்கார் மறுத்ததில்லை.

ஸடார்லிங் மிச்சம் என்றால் என்ன

ஸடார்லிங் மிச்சம் எப்படி ஏற்பட்டது; அதன் தன்மை என்ன என்பதை ஏற்கனவே விளக்கியிருக்கிறேன்.

இந்தியா தனது செலாவணி இருப்பாக ஒரு பகுதியைப் பிரிட்டனில் ஸ்டர்லிங்காக வைத்திருப்பது வழக்கம். அதாவது யுத்தத்திற்கு முந்தியும் நமது ஸ்டர்லிங் பிரிட்டனில் இருந்தது. பிறகு யுத்தத்தின் போது பிரிட்டன் இங்கு பலவித சமான்களை வாங்கியது. அதற்கு இந்திய ரிசர்வ் பாங்கி ரூபாயை ஸ்டர்லிங்காக மாற்றிப் பணம் கொடுத்திருக்கிறது. ஆகவே இந்த ஸ்டர்லிங்கானது இங்கிலாந்து பாங்கில் இந்திய ரிசர்வ் பாங்கி போட்டிருந்த பணமாகும். அது ரிசர்வ் பாங்கியின் ஆஸ்தி. இரு சர்க்கார்களுக்கிடையே ஏற்பட்ட யுத்தக் கடனல்ல இந்த ஸ்டர்லிங் மிச்சம். யுத்தம் காரணமாக இந்தியா வேறு எவ்வளவோ செலவழித்திருக்கிறது.

வஜா கிடையாது

ஸ்டர்லிங் மிச்சமானது ரிசர்வ் பாங்கியின் சொத்து. ஆகையால் அதை யுத்தக் கடனாகக் கருதவோ அதில் ஒரு பகுதியை வஜா செய்யும்படி கோரவோ முடியாது. பேச்சு வார்த்தையின் எந்தக் கட்டத்திலும் ஸ்டர்லிங் மிச்சத்தில் வஜா செய்யும்படி பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வஜா செய்யும் பேச்சு அடியோடு ஒழிந்துவிட்டது. தனது பொறுப்புக்களைப் பிரிட்டன் நிறைவேற்றும் என்று நம்பலாம்.

ஒப்பந்த முழு விவரம்

இந்தியாவுக்கும் இன்னும் சில தேசங்களுக்கும் பிரிட்டன் ஸ்டர்லிங் கடன் கொடுக்க வேண்டியிருந்தது. ஏற்றுமதியை அதிகரித்து உள் நாட்டில் பொருள் உபயோகத்தைக் குறைப்பதன் மூலமே இந்தக் கடனைப் பிரிட்டன் திருப்பிக் கொடுக்க முடியும். ஆனால் பிரிட்டன் இவ்வித பொருளாதார மீட்சியை விரைவாகப் பெற முடியவில்லை. ஆகவே 1947-ம் வருஷம் ஆகஸ்டு

மாதத்தில் ஓர் ஆறு மாத இடைக்கால ஒப்பந்தத்தைப் பிரிட்டனுடன் செய்து கொள்ள நேர்ந்தது. 1948-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் இன்னும் 6 மாதத்திற்கு அவ்வொப்பந்தம் புதுப்பிக்கப்பெற்றது. அது 1948-ம் வருஷம் ஜுன் மாதத்துடன் முடிந்ததால் பேச்சு வார்த்தை நடத்த லண்டனுக்குச் சென்றோம். அப்போது ஸ்டர்லிங் இருப்புத் தொகை 116 கோடி பவுன் (ரூ. 1547 கோடி) ஆகும்.

மூன்று குறிக்கோள்களுடன் லண்டன் பேச்சு வார்த்தை நடத்தப்பெற்றது.

(1) பிரிவினைக்கு முன் 1947-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் இந்தியா எடுத்துக்கொண்ட பிரிட்டிஷ் ராணுவப் பொருள்களுக்கும் தளவாடங்களுக்கும் உரிய பணத்தை நிர்ணயிப்பது.

(2) இந்தியாவில் வேலை பார்த்த பிரிட்டிஷாருக்குக் கொடுக்க வேண்டிய பென்ஷன் பணத்தை மொத்தமாக பிரிட்டிஷ் சர்க்காரிடம் ஒப்படைத்து அவர்களுக்குக் கொடுக்கச் செய்வது.

(3) ஆரம்பத்தில் 3 வருஷ காலத்தில் ஸ்டர்லிங் கடனைத் திருப்பித் தரும் தொகையில் ஒரு பகுதியை வேறு செலாவணிகளாக மாற்றிக் கொள்ள வசதி பெறுவது.

யுத்தப் பொருள்கள் தளவாடங்களுக்காக ஸ்டர்லிங் மிச்சத்திலிருந்து 10 கோடி பவுன் (ரூ. 1333 கோடி) குறைக்கப் பெறும். தளவாடங்களில் ஒரு பகுதி பாகிஸ்தானுக்குக் கொடுக்கவேண்டும்.

பென்ஷன் பொறுப்புக்காக, பிரிட்டனிடம் ஒரு பகுதி ஸ்டர்லிங் ஒப்படைக்கப் பெற்றிருக்கிறது. வருஷா வருஷம் பென்ஷன் தொகை குறைந்து கொண்டே

வரும். இத்தொகையில் மிச்சம் இருந்தால் அதை நம் மிடம் பிரிட்டன் கொடுத்துவிடும். அதிக பணம் தேவைப் பட்டால் நாம் கொடுக்க வேண்டும்.

பர்க்கி ஸ்டர்லிங் கடனில் 8 கோடி பவுனை 3 வருஷ காலத்தில் திருப்பிக் கொடுக்க பிரிட்டன் இசைந்தது. 8 கோடி பவுன் (ரூ $106\frac{1}{2}$ கோடி) இவ்விதம் திருப்பித் தரப்படும். ஏற்கெனவே பிரிட்டன் திருப்பித்தர ஒப்புக் கொண்டுள்ள தொகையில் 8 கோடி பவுனை நாம் இன் னும் உபயோகிக்கவில்லை. வருஷத்துக்கு 4 கோடி பவுன் வீதம் இந்தப் புதிய 8 கோடி பவுனையும் இனிமேல் நாம் உபயோகிக்கலாம்.

ஆனால் 3-வது வருஷத்தில் நமது அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக நாம் அதிகமான பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கலாம். இத்தகைய நிலைமை எழுந்தால் இவ்விஷயம் பற்றி பிரிட்டிஷ் சர்க் காருடன் விவாதிக்கலாம். நமக்குத் தேவைப்படும் அதிகப் பொருட்களைப் பிரிட்டனே கொடுக்க இணங்கக் கூடும்.

பிரிட்டன் திருப்பிக் கொடுக்கும் தொகையில் ஒரு பகுதியை ஸ்டர்லிங் அல்லாத வேறு செலாவணிகளாக மாற்றிக் கொள்ளலாம். இந்த ஏற்பாடு ஒரு வருஷத் துக்குச் செய்யப் பெற்றிருக்கிறது. பின்னல் பேச்சு வார்த்தை நடத்தி புதுப்பித்துக் கொள்ளலாம். இவ் விதம் 150 லட்சம் (ரூ 20 கோடி) ஸ்டர்லிங்கை வேறு எத்தகைய செலாவணியாகவும் மாற்றிக்கொள்ளலாம். இது போதுமா என்பதை நிர்ணயிக்குமுன் சில முக்கிய விஷயங்களைக் கவனிக்க வேண்டும். ஸ்விட்ஜர்லாந்து, பிரான்ஸ், செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகள் ஸ்டர்லிங் செலாவணி நாடுகளாயிருக்கின்றன. இவை நமக்குச் சாமான் அனுப்பினல் ஸ்டர்லிங்கையே

பெற்றுக்கொள்ளும். அதாவது இவற்றுக்கு நாம் ஸ்டர் லிங்கை டாலர் முதலிய செலாவணியாக மாற்றிக் கொடுக்க வேண்டியதில்லை. தவிர ஜப்பானிடம் வியா பாரம் செய்ததில் ரூ $4\frac{3}{4}$ கோடி பெறுமான டாலர் நமக்குக் கிடைத்திருக்கிறது. அதோடு பெட்ரோல், எண்ணெய் கள், உலோகங்கள், பருத்தி, பிளைவுட் முதலிய அத்தியா வசியப் பொருட்களை நமக்குக் கொடுத்து ஸ்டர்லிங்கை வாங்கிக்கொள்ள பிரிட்டன் இசைந்திருக்கிறது. மேலும் சர்வதேச நிதியிலிருந்தும் நாம் சிறிது டாலர் கடன் வாங்க முடியும். ஆகவே கடினச் 'செலாவணி (டாலர் போன்றது) நாடுகளுக்கு நாம் போதுமான பணம் கொடுத்து சாமான் வாங்க வசதி கிடைத்திருக்கிறது.

[கடினச் செலாவணிகள்: கடினமான செலாவணி என்பது டாலர் போன்ற செலாவணியைக் குறிப்பது. அதன்படி பின்வரும் நாடுகளின் செலவாணி கடினமான செலாவணியென்று கருதப்படும் (1) யு. எஸ் (2) கானடா (3) தென்னமெரிக்காவில் பிரேஜில், சிலி, உருகுவே, டச்சு பிரதேசங்கள், ஸ்டர்லிங் பிரதேசம் நீங்கலாக வுள்ள பிரான்ஸின் நாடுகள் (4) பெல்ஜியம் (5) ஜப்பான் (6) பிலிப்பைன்ஸ் (7) போர்த்துகல் (8) ஜெர்மனியில் யு. எஸ்., பிரிட்டிஷ் பகுதிகள்.]

பாதுகாப்புச் செலவு திட்டத்தின் கீழ் பிரிட்டன் நமக்குக் கொடுக்கவேண்டிய கடன் பாக்கிகள் நமக்குத் திருப்திகரமான முறையில் பைசல் செய்தாகிவிட்டது. யுத்தம் காரணமாக, இந்தியா பாகிஸ்தானுக்கு இடை யேயும், அவற்றுக்கும் பிரிட்டனுக்கும் இடையேயும் எழுந்த பாத்தியதைகள் அனைத்தும் தீர்ந்துவிட்டன.

பாதுகாப்புச் செலவு திட்டத்தின் கீழ் இந்தியா பாகிஸ்தான் சர்க்கார்களுக்குப் பிரிட்டன் கொடுக்க வேண்டிய பாக்கியை $5\frac{1}{2}$ கோடி பவுன் என நிர்ணயித்து

இந்திய தூது கோஷ்டிக்குப் பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி சர் கிரிப்ஸ் கடிதம் எழுதினர். இத் தொகையில் 89,51,250 பவுனைப் பாகிஸ்தான் சர்க்காருக்கும், மீதியை இந்திய சர்க்காருக்கும் பிரிட்டிஷ் சர்க்கார் கொடுக்கும்.

ஸ்டர்லிங் மிச்சத்தில் நம்மிடம் திருப்பித்தரப்படும் தொகையிலிருந்து ஒரு பகுதியை நாம் பாகிஸ்தானுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும். இறுதியாக இந்தியாவுக்குப் பிரிட்டன் திருப்பித்தர வேண்டிய ஸ்டர்லிங் மிச்சத்தில் நிகர தொகை சுமார் எண்பது கோடி பவுன் ஆக இருக்கும். அதில் இருபது கோடியைச் செலாவணி ரிசர்வாக வைத்துக் கொண்டு பாக்கி அறுபது கோடி பவுனை உபயோகித்துக் கொள்ளலாம். இந்தப் பாக்கி பற்றி இப்பேர்தைய 3 வருஷ ஒப்பந்த காலம் முடிந்த பின் சம்பாஷணை நடத்தலாம்.

சில பொருட்களை ஸ்டர்லிங் பிரதேசத்திலிருந்தோ, டாலர் போன்ற செலாவணியுள்ள பிரதேசங்களிலிருந்தோ இந்தியா பெருவதற்குப் பிரிட்டன் உதவி செய்யும் என்று சர் கிரிப்ஸ் உறுதி கூறியிருக்கிருர்.

பெட்ரோல், எண்ணெய்கள் முதலிய பொருட்களை ஸ்டர்லிங் பகுதிகளிலிருந்தும் டாலர் பகுதிகளிலிருந்தும் இந்தியா வாங்க வேண்டியிருக்கும். ஸ்டர்லிங் பகுதியில் வாங்கும் அளவு குறைந்து டாலர் பகுதியில் வாங்கும் அளவு அதிகரித்தால் இந்தியா அதிக டாலர்கள் கொடுக்க வேண்டியிருக்கும். இதுபோன்ற நிலைமை எழுந்தால் இந்திய பிரதிநிதிகளுடன் விவாதிக்கச் சித்தமாயிருப்பதாக் சர் கிரிப்ஸ் தெரிவித்திருக்கிருர்.

இந்தியாவின் எதிர்காலம்

டாக்டர் ஆர். ஜி. ஷகானி

[டாக்டர் ரஞ்கி ஜி. ஷகானி தற்பொழுது பிரிட்டனில் வசிக்கும் இந்தியர்களில் ஒருவர். அவர் இங்கிலாந்தின் பிரபலமான முற்போக்குப் பத்திரிகையான "நியூஸ் கிரானிகளி"ன் அரசியல் பகுதியின் ஆசிரியரான ஸ்ரீ ஏ. ஜே. கம்மிங்ஸைச் சந்தித்து உலக விஷயங்களைக் குறித்தும் சிறப்பாக இந்தியாவைக் குறித்தும் உரையாடினார்.]

ஏ. ஜே. கம்மிங்ஸிடம் எனக்குப் பெருமதிப்பு உண்டு. அவர், லண்டன் 'நியூஸ் கிரானிகள்' பத்திரிகையில் (Spot Light) 'ஸ்பாட் லைட்' என்று எழுதும் பகுதியில் எழுதும் கட்டுரை மிக சிலாக்கியமானது. அக்கட்டுரையில் உண்மையான புள்ளி விபரங்களும், மறைவின்மையும், உள்ளத் தெளிவும் நன்கு புலனாகும். விஷயங்களைப் பற்றியுமல்லாமல் ஆராயும் குணமும், மதிப்பிடும் திறமையும் கம்மிங்ஸுக்கு உண்டு. தைரியமாக எழுதுவதற்கு வேண்டிய சுதந்திரமும், சுதந்திரமாக எழுதுவதற்கு வேண்டிய தைரியமும் அவரிடம் நன்கு காணப்பட்டன.

"இந்தியாவுக்குத் தாங்கள் எப்பொழுதாவது சென்றதுண்டா?" என்று அவரைக் கேட்டேன்.

"துரதிர்ஷ்ட வசமாக இந்தியாவுக்கு நான் சென்றதில்லை. ஆனால் தங்கள் நாட்டைப் பற்றி நான் படித்திருக்கிறேன். 'நியூஸ் கிரானிகள்' பத்திரிகை முற்போக்கானது; இந்தியாவின் விஷயத்தில் மிகச் சிரத்தை

காட்டுவது. தன்னுடைய காரியங்களைத் தானே சாதித்துக் கொள்வதற்கோ அல்லது பரீட்சை செய்து பார்ப்பதற்கோ, இந்தியா சுதந்திரம் வேண்டுவது நியாயம் என்று நாங்கள் கருதுகிறோம். நாங்கள் எப்பொழுதும் இந்நாட்டில் நியாயமான, ஆனால், பொது மக்கள் ஆதரவில்லாத காரணங்களுக்காகவே போராடினோம். இதில் விசேஷம் என்னவென்றால் நாங்கள் போராடிய போராட்டங்கள் எல்லாம் கடைசியில் நியாயமானவையாக நிரூபணமாகி விட்டன.

கேள்வி: இந்தியாவின் எதிர் காலத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இந்தியா பிரம்மாண்டமான தேசம். காங்கிரஸைத் தவிர வேறு அரசியல் கட்சிகளும் இந்தியாவில் விரைவில் தோன்றும். அப்பொழுதுதான் இந்தியர்களுக்கு ஒரு சோதனை காலம் உண்டாகும்.

கேள்வி: எங்கள் தலைவர் நேருவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அவரை நேரில் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததில்லை. ஆனால் லார்டு மவுண்ட்பாட்டன் சென்ற முறை இங்கு வந்திருந்த பொழுது, சில பத்திரிகை ஆசிரியர்களுக்கு விருந்தளித்தார். அதற்கு நானும் சென்றிருந்தேன். அது தனிப்பட்ட முறையில் நடந்த சிறு விருந்து. அதன் போது லார்டு மவுண்ட்பாட்டன் பண்டித நேருவை உண்மையிலேயே மிக்ப் பெரிய மனிதர் என்று கூறினார். அவர் கூறியதை நான் நம்புகிறேன்.

பிறகு எட்வர்ட் தாம்சன் என்ற பிரபல ஆசிரியர் எனக்கு எழுதிய கடிதத்தில் பண்டித நேருவைப் பற்றி எழுதியிருப்பதை ஏ. ஜே. கம்மிங்ஸ்க்குக் கூறினேன். எட்வர்ட் தாம்சன் அக் கடிதத்தில், "நேருவுக்காக

என்னுடைய ஆன்மாவையும் ஈடுவைக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்று எழுதியிருக்கிறார். இந்த வாசகம் கம்மிங்ஸ் மனதில் ஆழமாகப் பதிந்தது.

"எந்த ஆங்கிலேயரையும் விட, எட்வர்ட் தாம்சன் நேருவை நன்றாக அறிந்தவர். எனவே நேருவைப் பற்றி அவர் கொண்டுள்ள முடிவு சரியாகத்தான் இருக்க வேண்டும்" என்று கூறினார்.

கேள்வி: ஆசியாவில் தோன்றியுள்ள பிளவுகள் உலக சமாதானத்துக்கு இடையூறானவை என்று தாங்கள் கருதுகிறீர்களா?

பதில்: ஏழ்மையும் துன்பமும் நிறைந்த இடங்களில் எல்லாம் பொதுவுடைமை இயக்கம் பரவி வளருகிறது. நம்பிக்கை இழந்த மக்கள் எதனையும் செய்யத் துணிவார்கள். அதனால் அவர்கள் இழப்பது ஒன்றுமில்லை. இப்பொழுது இந்தியாவைத்தான் எல்லோரும் நோக்குகின்றனர். தனது கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கைத்தரத்தை—தனது உதாரணத்தின் மூலமாக—உயர்த்த முயன்று வெற்றி பெற்றால், கீழை நாடுகளனைத்தையும் இந்தியா காப்பாற்ற கூடும். இந்தியாவின் பிரசினைகள் பல கஷ்டமானவை. ஆனால் அவைகளைச் சமாளிக்க ஏராளமான நல்ல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இந்தியா தனது உயர்ந்த பதவியை அடைய முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

ஒவ்வொரு துறையிலும் தலைசிறந்து விளங்கும் பலரை இந்தியா பெற்றெடுத்திருக்கிறது. இந்தியா இப்பொழுது சுதந்திர நாடாகி விட்டது. அதன் சக்தியெல்லாம் மிக நன்றாகவும் ஒழுங்காகவும் ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்தப் பெறவேண்டும். பின்னால் வரும் இளைஞர்கள் இதனைத் தொடர்ந்து செய்வார்கள். தன்னைப் பற்றிய நம்பிக்கையும் தனது நாட்டைப் பற்றிய நம்பிக்கையும்தான் இதில் முக்கியமானவை.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Teynampet, Madras-18.

"குமரி மலர்" வெளியீடு

ரவீந்திரநாத டாகுர்

●

கி. சந்திரசேகரன்
எழுதியது

●

வெளிவந்துவிட்டது

●

விலை ரூ. 2-0-0

(தபாற் செலவு தனி.)

"குமரி மலர்" வெளியீடு

தொல்காப்பியர்	மீனாட்சிசுந்தரம் பிள்ளை
கபிலர்	தாமோதரம் பிள்ளை
திருவள்ளுவர்	சுந்தரம் பிள்ளை
மாணிக்கவாசகர்	கனகசபைப் பிள்ளை
கம்பர்	சுப்பிரமணிய பாரதி
புகழேந்தி	ராகவையங்கார்
பவணந்தி முனிவர்	சாமிநாதையர்
பரிமேலழகர்	தேசிகவிநாயகம் பிள்ளை

ஆகிய

தமிழ்ச்சுடர் மணிகள்

•

எஸ். வையாபுரிப் பிள்ளை
எழுதியது

•

விரைவில் வெளிவரும்